1102
09.01.08

வெளியீடு 31-8-2007 Issued 31-8-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 20, 2007—தொகுதி 30—எண் 2
Friday, the 20th April, 2007—Volume 30—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

22.1.08

20-4-2007

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 317

2. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 318-350

3. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல வாரியம் அமைத்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 350-352

4. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ள நிலையில் தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கும் முடிவு குறித்து 353-362

*திரு. ஓ. பன்னீர்செல்வம் 353,354-355, 357-358,359,361

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 353,354,359-360

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 355-356, 357,358,359,360, 361,362

5. **கவன ஈர்ப்பு—**

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு நிதியைத் தொடக்கக் கல்விக்கு ஒதுக்குதல் 362-373

திரு. ஜி.கே. மணி 363-366,370-372

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 363,366-370, 372-373

| | பக்கங்கள் |
|---|---|
| **6. தகவல் கோரல்—** | |
| புதுப்பாக்கம், ஆட்டோமீது இரயில் மோதிய விபத்தில் இறந்தோர் குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோருதல் | 373-375 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 374 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 374-375 |
| **7. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 375 |
| **8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 375-376 |
| **9. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)<br>(ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை | 376-509 |
| மாண்புமிகு திரு. கே.என். நேரு | 376,388,416, 425-429, 440-441, 484-507 |
| திரு. இரா. துரைக்கண்ணு | 416-425, 427,429-432 |
| திரு. எஸ். ராஜகுமார் | 432-439 |
| திரு. செ. புஷ்பராஜ் | 439-445 |
| திரு. தி. வேல்முருகன் | 446-455 |
| திரு. ஜாண் ஜேக்கப் | 455-459 |



| | பக்கங்கள் |
|---|---|
| செல்வி கே. பாலபாரதி | 459-464 |
| திரு. சு. குணசேகரன் | 464-468 |
| *திரு. ரா. வரதராஜன் | 468-470 |
| திரு. கோ. ஐயப்பன் | 471-475 |
| திரு. கே.எல். இளவழகன் | 476-480 |
| *திரு. போ. சின்னப்பன் | 480-484 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 510 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227658
சென்னை-600 008

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 7, சர்வஜித்—திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 20, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்*
*நீள்வினையான் நீளும் குடி”*

*ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால், அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. அ. சின்னதுரை அவர்கள் 1-1-2007 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. அ. சின்னதுரை அவர்கள் மேல்மலையனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள். இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

[2007 ஏப்ரல் 20

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**101—**

**மின் வசதி**

***523—திரு. விஜயகாந்த்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் இரும்பு ஆலைகளுக்குத் தேவையான மோல்டு, பயர்பிரிக்ஸ் உற்பத்திக்குத் தேவையான மின் கட்டணச் சலுகை, தடையில்லா மின்சாரம், 45 ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருக்கும் மின் கம்பிகளை மாற்றுதல் போன்றவை செய்து தரப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதியில் இரும்பு ஆலைகளுக்குத் தேவையான மோல்டு, பயர்பிரிக்ஸ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மாவட்டத் தொழில் மையம் அளிக்கும் சான்றின்படி, வீதப்படி iiiB-ல் மின் இணைப்பு வழங்கப்பட்டு அதற்குரிய கட்டணத்தொகை வசூலிக்கப்படுகிறது. 45 ஆண்டுகளாக பழைய மின் கம்பிகள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு மேம்பாட்டுத் திட்டங்களில் மாற்றப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008



2007 ஏப்ரல் 20]

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பகுதி, இருப்புப் பகுதியில் மத்திய அரசினுடைய உதவியோடு ஒரு தொழிற்சாலை அங்கு இருக்கின்ற கனிம வளங்களைக் கொண்டு தொடங்குவதற்குப் பரிந்துரைத்து, அது இதுநாள் வரையில் தொடங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? அதேபோல 25 ஆண்டு காலம், 45 ஆண்டு காலமாக உள்ள மின் மாற்றிகளைப் பற்றி நான் இதற்கு முன்பு ஒரு கேள்வி எழுப்புகின்றபொழுது, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இப்போது பூமிக்கு அடியில் கேபிள் மூலமாக மின்சாரம் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, கிராம ஊராட்சிகளில் அந்த சாத்தியக்கூறுகள் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். கிராமப் பகுதிகளிலே குடிசை வீடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கிராமப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, குடிசைப் பகுதிகளுக்கு மேல் செல்கின்ற அந்த மின்மாற்றிகளை எல்லாம் உடனடியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் பூமிக்கு அடியிலே கேபிள்கள் பதிப்பது என்று அரசு முடிவு எடுத்து, முதல்கட்டமாக மாநகராட்சிகளிலே மட்டும் 1,100 கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக, தமிழகத்திலே உள்ள சுமார் 150 நகராட்சிகளிலே அந்தத் திட்டம் தொடங்கப்படும். கிராமங்களிலே, அங்கேயிருக்கக்கூடிய கம்பிகள் மிகவும் தாழ்ந்த நிலையிலே இருந்தால் அவற்றையெல்லாம் உயர்த்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலும் பூமிக்கு அடியிலே கேபிள்கள் பதிப்பது என்று சொன்னால் குறைந்தது 10,000 கோடி ரூபாய் தேவைப்படும். அதற்கு இப்போதுள்ள சூழ்நிலையிலே, நிதிநிலையைக் கருத்தில்கொண்டு அதைச் செய்ய இயலாது. ஆனால் அங்குள்ள கம்பிகள் அந்தக் குடிசைகளை உரசாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

முற்பகல் 9-35

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நாட்களுக்கு முன்பு, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சென்னசமுத்திரம் பேரூராட்சியிலே, காற்றினால் மரங்கள் விழுந்து, அந்தப் பகுதியிலே கம்பம் கீழே விழுந்து, வயர்கள் எல்லாம் அறுந்து விழுந்த நிலையிலே, அதை மின் துறை அதிகாரிகளிடம் கூறியும், இதுவரையில் அதைச் சரி செய்யவில்லை. அதற்குரிய மேலதிகாரியிடமும் முறையிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் மரங்களையும் எடுத்துப் போட்டிருக்கிறார்கள். உடனடியாக இந்த நிகழ்வு குறித்து, அந்தப் பணியின் அவசரத் தன்மை கருதி, அந்தக் கிராமத்து மக்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொகுதியிலே மரங்கள் எல்லாம் சாய்ந்து, வயர்கள் எல்லாம் அறுபட்டிருப்பதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். இன்றைக்கே அதிகாரிகளோடு கலந்துபேசி அவற்றையெல்லாம் ஓரிரு நாட்களிலே சரி செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**102—**

### நீதிமன்றம்

***3566—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதல் பெற்ற பிறகு அதை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதியில், குறிப்பாக குன்னூரில் உள்ள நடுவர் நீதிமன்றம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. பழைய ஓட்டுக் கட்டடத்தில் இருக்கிறது. புதிய வளாகம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரத்தைச் சரியாகச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

### சட்டக் கல்லூரி

***5648—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தேனியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காக, மருத்துவமனை மற்றும் அனைத்து வசதிகளும் செய்வதற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. அதைப்போல அங்கே பல்கலைக்கழகமும், தொழிற்பயிற்சி நிலையங்களும், அனைத்து நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று கூறியிருக்கின்றார்கள். அதைப்போல, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சட்டக் கல்லூரி அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கெனவே சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கற்பட்டு ஆகிய இடங்களில் 6 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமும் தன் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறது. எனவே, போதிய அளவுக்கு மாணவர்களுக்கு இந்த நிறுவனங்களில் இடங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே பல ஊர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாணவர்களுடைய வருகையையொட்டி, இடங்களையொட்டித்தான் அடுத்த கல்லூரியை ஆரம்பிக்கலாமா என்பதைப்பற்றி அரசு தன்னுடைய பரிசீலனையைச் செய்யும். எனவே, இப்போது இருக்கின்ற இந்த இடங்கள் போதும்; இந்தக் கல்லூரிகளே போதும் என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனியில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்கும்போது இதே சூழ்நிலைதான் இருந்தது. அங்கு போதுமான மாணவர்கள், அல்லது மருத்துவர்கள் அந்த வசதியைப் பெறுவார்களா, ஆரம்பிக்கலாமா, வேண்டாமா என்ற எண்ணம் இருந்தது. இப்போது மருத்துவக் கல்லூரியைத் தொடங்கியவுடன் நாளொன்றுக்கு 1,500 புற நோயாளிகளும், 500 உள் நோயாளிகளும் பயன்பெற்று, சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரியில் சென்னைக்கு அடுத்தாற்போல், இந்த ஆண்டு 50 இடங்கள் கூடுதலாக வழங்கப்பட்டிருக்கின்றன.





அந்தவகையில் மருத்துவக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருப்பதாலும், கேரளாவுக்கு அருகே அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், திண்டுக்கல் மற்றும் மதுரை புறநகர்ப் பகுதியைச் சார்ந்திருப்பவர்கள் வந்து படிப்பதற்கு வசதியாக தேனியில் சட்டக் கல்லூரி அமைப்பதற்கு மறு ஆய்வு செய்வாரா என்பதை அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. இது சட்டக் கல்லூரி சம்பந்தமான பிரச்சினை. ஏற்கெனவே 6 கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு பல்கலைக்கழகமும் இருக்கிறது. அந்தக் கல்லூரிகளிலே போதிய இடம் இருக்கிறது. மாணவர்கள் சேராமல் மாணவர்களுக்குத் தேவை என்றால், இப்போது இருக்கின்ற இடம் போதவில்லை என்றால்தானே இன்னொரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும்? ஆகையினாலே, அவர்களின் அம்மா மருத்துவக் கல்லூரி ஆரம்பித்தார்கள் என்பதால், அங்கே சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று நியாயமில்லை.

முற்பகல் 9-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூருக்கு விடை 'இல்லை' என்று சொல்லாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. (சிரிப்பு) காரணம், 2000 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற்கெனவே வேலூரிலே சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று இதே அவையிலே அறிவிக்கப்பட்டு, வாடகைக்கு இடமெல்லாம்கூட பார்க்கப்பட்டது. முதலிலே விடை கிடைத்து, பிறகு தடைபட்டது. இப்போது எங்களுக்கு விடிவுகாலம் கிடைக்குமா, நடப்பாண்டில் வேலூரில் சட்டக் கல்லூரி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது வேலூரிலே ஒரு சட்டக் கல்லூரி அமைக்கப்படும் என்று கொள்கை ரீதியான முடிவு எடுத்தது. பிறகு, இடைக்காலத்திலே அது

[2007 ஏப்ரல் 20

நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் மாணவர்கள் இருக்கிறார்கள், இருக்கிற கல்லூரியிலே இடம் போதவில்லை என்று சொன்னால், அப்போதிருக்கிற நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் அரசு சம்பந்தப்பட்ட கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ ஒன்றுகூட இல்லை. அதனால் காஞ்சிபுரத்திலே சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்றும், அரசு அதை அங்கீகரிக்குமா என்றும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைப் பார்த்தால் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்பது ஏதோ, ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிப்பது மாதிரி இருக்கிறது. சட்டக் கல்லூரிக்குப் படிக்க வருகிற மாணவர்கள், ஒவ்வோராண்டும் இருக்கிற 6, 7 கல்லூரிகளிலே சேருகிறார்கள். அந்த இடம் போதவில்லை என்ற நிலையை அரசு கருதுமானால் அதற்குத் தக்கபடி கல்லூரிகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஊரைக் காண்பித்து, இந்த ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டும், எங்கள் ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்றால் . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அங்கே சட்டைக் கல்லூரி வேண்டுமானால் கொடுக்கலாம். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள், ஒவ்வொரு ஊரிலேயும் ஒரு சட்டைக் கல்லூரியை வேண்டுமானால் ஆரம்பித்துவிடலாம். *(சிரிப்பு)* அதற்கு நல்ல கிராக்கி இருக்கும். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 20]

**104—**

### தொழில்நுட்பக் கல்லூரி

***7384—திரு. போ. கோபாலன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குந்தா மஞ்சூர் பகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் தரப்பில் நீலகிரி மாவட்டம், குந்தா மஞ்சூர் பகுதியில் புதியதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் குந்தா என்ற பகுதியைப்பற்றி தமிழ்நாட்டில் அறியாதவர்கள் இல்லை. பல ஆண்டுகள் கோரி புதிய தாலுகா ஆரம்பிக்கப்பட்டது, கலைஞர் அவர்களுடைய அரசில்தான் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் படிப்பதற்காக ஊட்டிக்குச் செல்ல வேண்டும். இல்லையென்றால் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குச் செல்ல வேண்டும். வேறு வாய்ப்புகளே இல்லாத நிலையில் குந்தாவை முக்கியமான இடமாகக் கருதி, தயவுசெய்து இந்தக் கல்லூரியை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குந்தா தாலுகா, மஞ்சூர் பகுதியில் அரசுத் தரப்பிலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும், பாலிடெக்னிக் கல்லூரியும், என்.பி.ஏ. சென்டினரி பாலிடெக்னிக் கல்லூரியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியிலே 249 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு 239 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். 10 இடங்கள் காலியாகவே

[2007 ஏப்ரல் 20

இருக்கின்றன. அதுமட்டுமல்ல, இப்போது AICTE-யிலே அவர்கள் பாலிடெக்னிக், தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான விதிமுறைகளையெல்லாம் கொஞ்சம் தளர்த்திக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு இடங்களிலே இதேபோன்ற கல்லூரிகள் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டபோது, முதலிலே எல்லாம் 10 ஏக்கர் என்று இருந்தது, அதையெல்லாம்கூட இப்போது குறைத்து 5 ஏக்கர் என்ற அளவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை AICTE-யும் எடுத்திருப்பதாக நாங்கள்—மாநில கல்வித் துறை அமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டிலேயே அவர்கள் அந்தக் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதுபோன்ற விதிகள் தளர்த்தப்பட்டதற்குப் பிறகு தனியார்கள் அதை அங்கே தொடங்க முன்வருவார்களானால் இந்த அரசு நிச்சயமாக அனுமதியளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முயற்சி செய்யக்கூடிய வாய்ப்பினை நாங்கள் ஏற்படுத்தித் தரத் தயாராக இருக்கிறோம். அப்போது அரசு அதற்கு முன்னுரிமை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் பகுதியில் மட்டுமல்ல, இப்போது விதிமுறைகளுக்குட்பட்டு தனியார் இதுபோன்ற தொழில்நுட்பக் கல்லூரிகளை எந்தப் பகுதியிலே தொடங்க முன்வந்தாலும் அரசு நிச்சயமாக முன்னுரிமை வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

*முற்பகல் 9-45*

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவப்பட்ட இராமநாதபுரம் தொகுதி முழுவதிலுமே இரண்டே இரண்டு பொறியியல் கல்லூரிகள் மட்டும்தான் இருக்கின்றன. அதுவும் தனியார் துறையின்மூலம் இயங்கிவருகின்றன. மற்றவர்கள் எல்லாம் கேள்வி கேட்கும்போது எங்கள் தொகுதியில் அதை ஆரம்பிக்க வேண்டும், இதை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில், எதையாவது ஆரம்பியுங்கள். (சிரிப்பு)



2007 ஏப்ரல் 20]

ஏனென்றால் ஒன்றுமே இல்லை. என்னுடைய தொகுதியில் எதுவுமே இல்லை. அரசாங்கம் சம்பந்தப்பட்ட எதுவுமே இல்லாத ஒரு நிலை. எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, இராமநாதபுரம் தொகுதி நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் பிரியமான தொகுதி. அதைப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதற்கு நீங்கள் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. ஏதாவது ஒரு கல்லூரியை நீங்கள் அங்கே ஆரம்பிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், பூலாங்குறிச்சி என்ற இடத்தில் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது இரண்டு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள், நீங்கள் நினைத்தால் பல்கலைக்கழகமேகூட ஆரம்பிப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தனியார் துறையில் பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் கல்வித் துறையில் பல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. அதுபோன்ற முயற்சிகளில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஈடுபடுவார்களேயானால் நிச்சயம் இந்த அரசு அதற்கு ஆதரவு அளிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி ஒட்டுமொத்தமாக கிராமப்புறங்களை உள்ளடக்கிய விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதி. அங்கே 12 ஆம் வகுப்புக்கு மேல் படிக்க ஒரு பள்ளிக்கூடம்கூட இல்லை. 12 ஆம் வகுப்புக்கு மேல் படிப்பதற்காக மாணவர்கள் பெரம்பலூர், சென்னை, திருச்சி ஆகிய ஊர்களுக்கு வரவேண்டிய நிலை இருப்பதால், எங்கள் வரகூர் தொகுதியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியோ அல்லது செவிலியர் பயிற்சிப் பள்ளியோ ஆரம்பித்து, அங்கே இருக்கின்ற ஏழை விவசாய மக்கள் பயனடைவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் கல்லூரிகளே

[2007 ஏப்ரல் 20

இல்லாத தொகுதிகள் எவை, எவை இருக்கின்றன என்பதைக் கண்டறியுமாறு இத்துறைக்குப் பணித்திருக்கிறார்கள். அதற்கான கணக்கெடுப்பையும் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். எனவே எந்தக் கல்லூரியும், தனியார் கல்லூரியோ, அரசுக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லாத தொகுதிகள் எந்தெந்தத் தொகுதிகள் என்பதைக் கணக்கிட்டு, அந்த இடங்களிலே படிப்படியாக இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்க முடியுமா என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவில் அதற்கான அறிவிப்புகளை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி தொடங்குவதற்கு ஒரு கொள்கையை அரசு வகுத்திருக்கிறது. ஆனால், மத்திய அரசால் தமிழகத்தில் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய, பின்தங்கிய மாவட்டங்கள் என்று சொல்லக்கூடிய நாகை போன்ற மாவட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாயிலிருந்து விதிவிலக்களித்து அரசுக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 தொகுதிகளினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளிலே கல்லூரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் முறைப்படுத்துவதற்காகத்தான் முதல்வர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் பணமும், ஐந்து ஏக்கர் நிலமும் கொடுக்கிற அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கலாம் என்று குறிப்பிட்டார்கள். அதுபோல் பல இடங்களில் கொடுக்கப்பட்டு சென்ற ஆண்டு மூன்று கல்லூரிகளையும் தொடங்கியிருக்கிறார்கள். ஒரத்தநாட்டிலே, அத்தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பழனி மாணிக்கம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் பெரம்பலூர் மாவட்டத்தில் மத்திய அமைச்சர் ராஜா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பகுதிகளிலே சென்ற ஆண்டு கல்லூரிகள் புதியதாகத் தொடங்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, ஆர்வம் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தத் தொகுதியிலே இருக்கின்ற பொதுநல விரும்பிகளை ஆதரித்து, அவர்கள்மூலமாக இவற்றைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயர் கல்விக்கு மிகப்பெரிய முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே அதை ஒரு தனித் துறையாக்கி, அதற்கு ஒரு நல்ல கல்வியாளரை, விவரம் தெரிந்த முன்னாள் பேராசிரியரை அமைச்சராக்கி, உயர் கல்வியிலே பல புதிய சாதனைகளைப் படைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருக்கிற இந்த அரசு, சுயநிதிக் கல்லூரிகள் என்ற அந்தக் கருத்தியல் இனிமேல் உயர் கல்வியிலே தவிர்க்க முடியாத கருத்தியலாகிவிட்டதை உணர்ந்து இருக்கிறதா? அதே நேரத்திலே சுயநிதிக் கல்லூரிகளை அமைக்க முன்வருகின்றவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் கழித்தாவது அரசு ஏதாவது மானியம் கொடுக்க முன்வருமா? ஏனென்று சொன்னால், எல்லா ஊர்களிலும் அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, அரசே கல்லூரிகளை அமைப்பதென்பது மிகச் சிரமமான காரியம். ஆனால், நல்ல கல்வியாளர்கள் முன்வந்து சுயநிதிக் கல்லூரிகளை உருவாக்கி, தரமான கல்வியினைப் பிற்படுத்தப்பட்ட பகுதியிலே, கிராமப்புற பகுதியிலே அளிக்க முன்வருகின்றபோது, அந்தச் சுயநிதிக் கல்லூரிகளுக்கு முழுமையான மானியத்தைக் கொடுக்காவிட்டாலும்கூட, ஐந்து ஆண்டுகள் முடித்த கல்லூரிகளுக்கு 25 விழுக்காடு மானியம், 10 ஆண்டுகள் முடித்த கல்லூரிகளுக்கு 50 விழுக்காடு மானியம் என்பதைப்போல 15, 20 ஆண்டுகளைக் கடந்த கல்லூரிகளுக்கு சம்பளம் மட்டுமாவது அரசு கொடுக்கின்ற அந்தச் செயலை அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் என்று மூன்று பிரிவுகளாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப்போல, அரசு உதவி பெறும் கல்லூரிகளில், அரசாங்கமே அவர் குறிப்பிட்டதைப்போல, அங்கே நியமிக்கப்படுகின்ற பேராசிரியர்களுக்கான ஊதியத்தை கொடுக்கிறது. அந்த அரசு உதவி பெறும் கல்லூரிகளிலேகூட self financing courses

என்ற அடிப்படையிலே, அவர்களேகூட சில பாடப் பிரிவுகளை உருவாக்கிக்கொள்வதற்கும் இந்த அரசு கடந்த காலங்களிலே அனுமதி அளித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நடத்துகிற சுயநிதிக் கல்லூரிகளிலும், வருங்காலங்களிலே, அதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழக மானியக் குழு இதுபோன்ற கல்லூரிகளுக்கு, அவை தரம் மிக்க கல்லூரிகளாக இருந்தால், அவற்றிற்கு இந்த உதவிகளைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறது. அதற்கு இதுபோன்ற கல்லூரிகள் வருமேயானால், பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு இந்த அரசு அதற்கான பரிந்துரைகளைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகின்ற தொழில்நுட்ப, பொறியியல் சுயநிதிக் கல்லூரிகளில், அரசு இடஒதுக்கீட்டில் செல்கின்ற மாணவ மாணவிகளுக்குக் கூடுதலாக கட்டணம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா? அதைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட 'இந்து' பத்திரிகையிலே ஒரு விளம்பரம் வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்து இருப்பார்கள். A.I.C.T.E.-யிலிருந்தே ஒரு விளம்பரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பல சுயநிதிக் கல்லூரிகள், இப்பொழுதே சேர்க்கையைத் தொடங்கி, நிதியையும் வசூலித்து வைத்துக்கொண்டு, அதற்கான certificate-ஐயும் பெற்று வைத்து இருக்கிற நிலைமை A.I.C.T.E.-க்குத் தெரிந்த காரணத்தினால், அவர்களே குறிப்பாக ஒரு notice-ஐ அனுப்பி, 'இந்து' பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். அதுபோன்று இருக்கிற கல்லூரிகளிலே, உடனடியாக அவர்களுடைய அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என்றுகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தொலைதூரக் கல்வியின் மூலமாக, பொறியியல் படிப்புகளையே படிக்கலாம் என்று சில கல்லூரிகளிலே நிறைவேற்றி இருக்கிற சட்டத்தையும் அதிலே தடுத்து நிறுத்தி, தொலைதூரக் கல்லூரிகளின்மூலமாக, B.E. போன்ற பட்டப் படிப்புகளை நடத்தக் கூடாது என்றும் A.I.C.T.E. இன்று அறிவிப்புச் செய்திருக்கிறது. அதுவும் 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது. இந்த அரசும், அதற்கான சட்டங்களையும் நிறைவேற்றி, அதற்கான குழுவையும் நியமித்து, இதுபோன்ற விதிமுறைகளை மீறுகின்ற கல்லூரிகளின்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**105—**

## தொழிற்பேட்டை

***1008—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதியில் தற்போது புதிதாய் சிறு அல்லது குறுந் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி என்பது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்கள் அதிகம் பேர் வாழ்கின்ற, மிகவும் பின்தங்கிய தொகுதி ஆகும். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அங்கே இல்லாத காரணத்தால், சோளிங்கரிலிருந்து வெளியூருக்குச் செல்ல வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இராணிப்பேட்டையில்கூட ஒரு தொழிற்பேட்டை இருக்கிறபடியால், அண்ணன் காந்தி அவர்கள்

[2007 ஏப்ரல் 20

இருக்கின்ற அந்தத் தொகுதிக்குப் போகின்றார்கள். எங்களுடைய சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி முன்னேறக்கூடியவகையில் எந்தவித வாய்ப்பும் இல்லை. அதனால் எங்களுடைய தொகுதி மக்களின் வாட்டத்தைப் போக்கும் வகையில், சோளிங்கரில் அரசு தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தந்தால், தொகுதி வளர்ச்சிக்கும், பொதுமக்கள் நலனுக்கும் ஏற்புடையதாக இருக்கும். சோளிங்கர் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவான அரசு தொழிற்பேட்டையை இந்த அரசு தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் சிறப்பாக ஆட்சி செய்கின்ற இந்த நேரத்திலே, பொன்விழா காண்கின்ற இந்த நேரத்திலே, அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக்கொடுத்தால், சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கணிசமான அளவில் முன்வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையிலே, நம்முடைய மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கிற, விவசாயத்தையே நம்பி இருக்கிற, திருக்கழுக்குன்றம் வட்டத்திலே, புதிய தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வெட்டுத் தீர்மானத்திலே நான் கொடுத்திருந்தேன். அது கண்டிப்பாகச் செயலாக்கப்படும் என்ற அறிவித்திருந்தார்கள். திருக்கழுக்குன்றம் வட்டம் விவசாயத்தையே மட்டும் நம்பி இருக்கிற ஒரு வட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. தொழிற்சாலை எதுவும் இல்லாத ஒரு வட்டமாக இருக்கிறது. எனவே, அங்கே இந்த ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 20]

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தொழிற்சாலைக்கு அங்கே நிலம் எடுப்பதற்கு ஆட்சேபனை செய்வதில்லை என்று உறுதி அளித்தால், அதுபற்றி யோசிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில், வேங்கைக்கால் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்து, அனைத்து இடங்களையும் தொழில் முனைவோர் வாங்கிவிட்டார்கள். இன்னும் தொழில் முனைவோருக்கு இடம் கிடைக்கின்ற வகையில் திருவண்ணாமலை தொகுதியிலே தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்திற்கு அருகில் இன்னும் தேவையான நிலங்களை அவர்கள் பெற்றுத்தந்தால், விரைவிலேயே அந்தப் பகுதியிலே கூடுதலான கூடங்களுடன் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *106*, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி, மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**106—**

## கட்டட வசதி

***10927—திரு. மு. பரஞ்ஜோதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 20

ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை இங்கே அளிக்க விரும்புகின்றேன். 2006-2007 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ரூ.127.05 இலட்சத்தில் கட்ட அரசாணை எண் 605, வருவாய்த் துறை, நாள் 13-9-2006-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டக்கூடிய அந்தப் பணியை விரைவாக முடிக்கவும், அங்கே கணினி வசதி மற்றும் முதியோர் உதவி வேண்டி விண்ணப்பிக்க வரக்கூடியவர்களுக்கு waiting hall, காத்து இருக்கும் அறை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இந்த அரசு, அரசு ஆணையை செப்டம்பர் திங்களிலே வெளியிட்டு, நவம்பரிலே அதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இப்பொழுது பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. பணிகளை வருவாய்த் துறை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியிலே இருக்கின்ற பரமத்திவேலூர் வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐ நான்கு வழிப் பாதையாக விரிவாக்கம் செய்கின்ற வேளையிலே, அங்கே பாதி அளவுக்கு நில ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்றவகையிலே, அது அழிந்து போகின்ற சூழ்நிலையிலே இருக்கிறது. இருக்கின்ற அந்த மீதி இடத்திலேயே அரசாங்கத்தின்மூலம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா அல்லது அரசாங்கத்தின்மூலம் தற்காலிகமாக வேலூரிலோ அல்லது பரமத்தியிலோ அலுவலகம் இயங்க அரசு வழிவகுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரமத்திவேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தைக் குறிப்பிட்டு இங்கே சொன்னார்கள். நான்கு வழிப் பாதையால் எனக்குத் தெரிந்தவரையில் அந்த அலுவலகம் நிச்சயமாக பாதிப்புக்கு உள்ளாகாது. அதை நான் முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கின்றேன். அதிலே ஒரு சிறிய இடம்தான் நான்கு வழிப் பாதைக்காக எடுக்கப்பட உள்ளது. எந்தப் பாதிப்பும் அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நிச்சயம் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரிலே இருக்கிற வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்டது. அந்த வட்டாட்சியர் அலுவலகத்திலேயே Registrar Office, Court, வனச் சரக அலுவலகம் அனைத்தும் இருக்கின்றன. அந்த அலுவலகம் மிகவும் பழமையாக இருக்கிறது. எனவே, புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு எடுத்த முடிவு, தமிழகத்திலே வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இல்லாத அளவிற்கு, அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களையும் அரசுக் கட்டடங்களில் இயக்குவதற்குரிய வழிவகையைச் செய்திருக்கிறார்கள். வாடகைக் கட்டடங்களிலிருக்கும் அத்தனை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் இந்த ஆண்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இனி வருகின்ற காலங்களிலே ஆங்காங்கே நிலைமைக்கேற்ப பழுதடைந்திருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

[2007 ஏப்ரல் 20

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய தலைநகராக கிருஷ்ணகிரி விளங்கிக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணகிரியிலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகம் 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அந்த மாவட்டத்திலேயே 106-க்கும் மேற்பட்ட வருவாய்க் கிராமங்களைக் கொண்ட வட்டாட்சியர் அலுவலகம் கிருஷ்ணகிரியில்தான் செயல்பட்டு வருகிறது. மழை பெய்தால் ஒழுகக்கூடிய வகையில்தான் இன்றைக்கும் அந்தக் கட்டடம் இருக்கிறது. ஆகவே, அந்தக் கட்டடத்தை மாற்றி புதிய கட்டடத்தைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கேட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டும் பணி முடியும் தருவாயிலே இருக்கிறது. எதிர்காலத்திலே வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**107—**

## திருப்பணி

***473—திரு. க. சுந்தர்**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர், சாலவாக்கம், அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர், பெருநகர், அருள்மிகு காசி விசுவநாதர், கருக்குப்பேட்டை முதலிய கோயில்களில் திருப்பணி நடைபெற அரசு ஆவன செய்யுமா?



2007 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய 3 கோயில்களினுடைய திருப்பணிகளில் முதலாவதாக கருக்குப்பேட்டையில் இருக்கக்கூடிய அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயிலினுடைய திருப்பணிகள் தொடங்கப்பெற்று முடிவுபெறும் நிலையில் இருக்கிறது; வெகு விரைவிலே குடமுழுக்கு நடைபெறும். அதேபோல மற்ற இரண்டு திருக்கோயில்கள், அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பணிகள் செய்ய வேண்டிய பட்டியலில் இருக்கின்றன. வெகுவிரைவில் உபயதாரர்கள்மூலமாகவும், துறையின் சார்பிலும் நிதியொதுக்கீடு செய்யப்பெற்று பணிகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம், அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்கான திருப்பணிக் குழு அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, நன்றி. அதைப்போலவே பெருநகர், பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கும் திருப்பணிக் குழு அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கருக்குப்பேட்டை, காசி விசுவநாதர் திருக்கோயிலில், 4½ ஆண்டுக் காலத்திற்கு முன்பு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, இதுவரை குடமுழுக்கு நடைபெறவில்லை. இதுவரை அரசாங்கம் அந்தப் பணிக்காக எந்த நிதியையும் தரவில்லை. நன்கொடையாளர்களைக் கொண்டு அந்தப் பணிகளைச் செய்வதாலேயே அந்தப் பணிகள் காலதாமதமாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அந்தக் கோயிலுக்கு அரசு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கினால், உடனடியாக அமைச்சர் குறிப்பிட்டபடி, குடமுழுக்கைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே கருக்குப்பேட்டை, அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயிலுக்கு அரசு 5 இலட்சம் ஒதுக்கி, திருப்பணி வேலைகளை விரைவுபடுத்தி விரைவில் குடமுழுக்குச் செய்ய ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருக்குப்பேட்டை, அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயிலைப் பொறுத்தவரையில் 1995 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த வேண்டும், திருப்பணி செய்ய வேண்டும் என்பது விதியாக இருப்பதற்கிணங்க, இப்பொழுது அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. குடமுழுக்கு நடைபெற்று 11 ஆண்டுகள்தான் நிறைவடைந்திருக்கிறது. கொடையாளர்கள்மூலம் 6 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் நிதி திரட்டி, அந்தப் பணியினைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதிலே தேக்க நிலை ஏற்பட்டால் துறை அதிலே தலையிட்டு, உரிய நிதியைத் தந்து, அந்தத் திருப்பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** அங்கே புதிய அறங்காவலர் குழு ஒன்றை உருவாக்கி அந்தப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும்தான் அமைச்சர் சொல்லிவிட்டாரே! (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் தேக்க நிலையில்லாமல் நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும், நிதியைப் பொறுத்த அளவிலும் சரி, குழுவைப் பொறுத்த அளவிலும் சரி, செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**108—**

## தரம் உயர்த்துதல்

***20590—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 20]

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சி, காட்டனூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சி, காட்டனூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

முற்பகல் 10-05

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம், கடைகோடி கிராமமான காட்டனூரில் இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். காட்டனூர், வீரணகுப்பம், கதிரம்பட்டி, வெண்ணாம்பட்டி, பெரமாண்டப்பட்டி, அம்மாப்பேட்டை, இதையொட்டி ஏறக்குறைய 23 கிராமங்கள் உள்ளன. மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 15 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். ஏற்கெனவே தமிழக அரசினுடைய, கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களிலே 7 கி.மீ. தூரம்வரை ஓர் உயர்நிலைப் பள்ளி அளிக்கலாம் என்று குறிப்பு இருக்கிறது. 15 கி.மீ. தூரம் சென்றால்தான் இந்த மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல முடியும். ஏறக்குறைய 128 மாணவர்கள் இப்போது அந்தப் பள்ளியிலே பயின்று கொண்டிருக்கிறார்கள். எஸ்.எஸ்.ஏ. கட்டடம் உள்ளது. 3 ஏக்கர் நிலம் உள்ளது. மாவட்டத்தினுடைய கடைக்கோடிப் பகுதியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில், இதுவரை ஏறக்குறைய 264 கிராமங்களில், 34 பஞ்சாயத்துகளில் 12 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே அந்தத் தாலுகாவில் உள்ளன. ஆகவே, இவை அத்தனையையும் கணக்கில் எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வியாண்டிலே அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த காட்டனூர் பள்ளியிலே 123 மாணவர்கள் படிக்கிறார்கள். இருந்தாலும்கூட, எட்டாவது வகுப்பிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லக்கூடிய, ஒன்பதாம் வகுப்பிற்குச் செல்லக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை இப்போது வெறும் 30 ஆக மாத்திரம் இருக்கிறது. கிட்டத்தட்ட 50 பேர் அங்கு இருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் அரசினுடைய அரசாணையிலே வெளியிடப் பட்டிருக்கிறது. மற்றொன்று, அங்கே போதுமான இட வசதி இப்போது இல்லாமல் இருக்கிறது. வெறும் 15 சென்ட் இட வசதிதான் இருக்கிறது என்று எனக்கு அந்த மாவட்டத்தினுடைய முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்திருக்கிறார். மேலும், அங்கே ஊர்ப் பொது மக்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகை இதுவரை செலுத்தப்படவில்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அங்கே இருக்கக்கூடிய மற்ற கிராமங்கள், சுற்று வட்டாரக் கிராமங்கள், இவர்கள் பக்கத்திலே 10 கி.மீ. சென்று கல்லாவியிலே இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியிலே, அங்கே உயர்நிலைக் கல்வியைத் தொடரக்கூடிய சூழ்நிலை, இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு, உரிய முன்மொழிவுகள், பொதுமக்களுடைய பங்குத் தொகை செலுத்தப்பட்டு, அதற்கான முன்மொழிவுகள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலிருந்து அரசுக்கு பெறப்படும் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 கி.மீ. தூரத்தில் கல்லாவியில் ஓர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மக்கள் மத்தியில், முன்பாக 3 ஏக்கர் நிலம் ஏற்கெனவே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. எஸ்.எஸ்.ஏ.-விலே ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, பொதுமக்கள் மத்தியிலே ஒரு முன்மொழிவை ஏற்படுத்தி, எந்த அளவிற்குப் பணத்தை பொதுமக்கள் சார்பாகச் செலுத்த முடியுமோ, அந்த அளவிற்கு செலுத்துகின்ற பணியைத் தொடங்குகிறோம். வரும் கல்வியாண்டிலே அதை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த முன்மொழிவுகள் முறையாக அரசுக்கு அனுப்பப் பெற முயற்சிகள் மேற்கொள்வார்கள் என்றால், நிச்சயமாக அரசு அதனைக் கவனத்திலேகொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, இனாம் கரூர் நகராட்சியில் பெரியகுளத்துப்பாளையம் என்ற அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,200-க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். அவர்கள் மேல்நிலைப் பள்ளிக்கென 15 கி.மீ. புகளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. பெரியகுளத்துப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதைப்போல ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு உரிய அந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, அவை இந்தக் கல்வியாண்டிலே அங்கே இருக்கக்கூடிய முதன்மைக் கல்வி அலுவலர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா என்று நானும் சரி பார்க்கிறேன். அப்படிப்பட்ட முன்மொழிவுகள் அரசுக்கு வந்திருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அரசு அவருடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட வேங்கை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், ஆலம்பாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், ஆயந்தூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், இந்த ஆண்டிலே தரமுயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கோரிக்கைகள் மொத்தத்திற்குமே நான் சொல்லக்கூடிய பதில் இதுதான். தலைவர் கலைஞர் அவர்கள் இந்த முறை 80 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக, அதைப்போல 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கு அனுமதித்து ஆணையினை வழங்கியிருக்கிறார்கள். இத்தகைய கோரிக்கைகள் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலிருந்து, பல்வேறு பகுதிகளிலிருந்து வருகின்றன. எனவே, இதற்கான முறையான முன்மொழிவுகள் நிச்சயமாக வந்திருக்கின்றன என்று சொன்னால், அந்தப் பகுதியிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய பள்ளிகள், அவற்றினுடைய எண்ணிக்கை, கடந்த ஆண்டு எந்தெந்தப் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, கடந்த ஆண்டு விடுபட்டுப் போயிருக்கக் கூடியவை, நீண்டகாலமாக அரசுக்கு இந்தப் பங்குத் தொகையினைச் செலுத்தி முன்னுரிமை பட்டியலிலே இருக்கக் கூடியவை ஆகிய மொத்தத்தையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு அரசு அவற்றையெல்லாம் நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**109—**

### பாலம்

***1994—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர், ராமகொண்ட அள்ளி ஆகிய ஊர்களுக்கு இடையில் ஓடும் மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் பணி தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2007 ஏப்ரல் 20]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி தமிழ்நாட்டிலே மிக, மிக, மிக, மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட தொகுதி. தலைவர் அவர்கள் நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டியைத் திறந்தபொழுது, அந்த மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காகத்தான் அதைத் திறந்தார். அதைப்போன்று பிரியாணியைக் கேட்கவில்லை. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குக்கூட மணம் உண்டு. இன்று எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும், தலைவருடைய ஆட்சியிலேதான் எனக்கு இதைச் செய்துகொடுங்கள், அதைச் செய்துகொடுங்கள் என்று கேட்டு, தலைவருடைய ஆட்சியில்தான் இது நடைபெற முடியுமேயொழிய, வேறு எந்தத் தலைவருடைய ஆட்சியிலும் நடைபெறாது என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, இந்த நேரத்திலே எனக்கு இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ராமகொண்ட அள்ளியிலிருந்து நெருப்பூர்வரை செல்லக்கூடிய அந்தச் சாலையானது ஏரியூர், வத்தலப்பட்டியினுடைய மாவட்ட இதர சாலையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள சாலையாகும். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரையோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலரையோ, ஊராட்சி ஒன்றியக் குழுவையோ நாடினால் நிச்சயமாக அதற்கு உரிய பதில் கிடைக்கும். அதேநேரத்தில் இதுபற்றி, எதிர்காலத்திலே அரசும் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க நன்றி. இந்தச் செய்துக் கொடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டணம் தொகுதியில் பண்ணத்தூரிலிருந்து அரசம்பட்டி செல்லும்வழியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் புதியதாகக் கட்டப்பட வேண்டும் என மறைந்த காமராஜர் ஆட்சிக் காலத்திலிருந்தே பொதுமக்கள் கோரிக்கை வைத்து வந்துள்ளனர். இதனால் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடைய வாய்ப்புள்ளது. முன்னேற்றமே எங்கள் மூச்சு, முத்தமிழே எங்கள் பேச்சு என்று முழங்கி வரும் நமது அரசு மேற்படி 100 கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக நமது வாழும் காமராஜர் ஆட்சியில் மேற்படி பாலம் இந்த ஆண்டே கட்ட முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையினுடைய மானியக் கோரிக்கை வரக்கூடிய 24 ஆம் தேதி வர இருக்கிறது. எனவே, வெண் திரையில் காண்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதிக்குட்பட்ட அத்திமுட்லு பாலமானது கடந்த கன மழையில் அடித்துச் செல்லப்பட்டது. மாரண்டஅள்ளி-பஞ்சப்பள்ளி-தேன்கனிக்கோட்டை வழியில் உள்ளது. போக்குவரத்து நிறைந்த பகுதி. அந்த அத்திமுட்லு பாலமானது நெடுஞ்சாலைத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் அறிவிப்புகள் என்ற பகுதியிலே 2006-2007 ஆம் ஆண்டு ரூபாய் 200 இலட்சத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைய தினத்திலே அந்தப் பாலத்தினுடைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டிலே பல பாலங்களைக் கட்டுவதற்காக



2007 ஏப்ரல் 20]

தேர்வு செய்து, நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது. நிதிநிலையின் காரணமாக நபார்டு வங்கி இந்த ஆண்டு பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிப்பதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று உறுதியளித்திருக்கின்றார்கள். நிச்சயம் இந்த நிதி ஆண்டு அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நெருப்பூர்-ராமகொண்டஅள்ளி இடையிலான மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் சொல்லுகின்ற நேரத்தில் அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. தற்போது வாய்ப்பு இல்லையென்ற ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அது மிக முக்கியமான, மக்கள் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி. அதுமட்டுமல்லாமல் கடந்த ஆட்சிக் காலத்தில் அந்தப் பாலம் கட்ட வேண்டுமென்று முயற்சிக்கப்பட்டு, எல்லாத் தொடக்கப் பணிகளும் ஆரம்பிக்கின்ற நிலையிலே விடுபட்ட நிலையிலே இருக்கின்றது. கடந்த நாட்களில் அந்தச் சாலை கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழே தார்ச் சாலையாகப் போடப்பட்டு, எல்லாப் போக்குவரத்திற்கும் உகந்ததாக இருக்கிறது. ஆனால், பாலம் மட்டும் இல்லாத சூழ்நிலை. அதுமட்டுமல்ல. அந்தப் பாலம் கட்டக்கூடிய பகுதி, நீர் தேங்கியிருக்கிற பகுதி. நடந்து சென்றாலும் இடுப்பிற்கு மேலே தண்ணீர் இருக்கும். இரு சக்கர வண்டியிலேகூட போக முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் கடக்க முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தால், 12 கிலோமீட்டர் சுற்றி வரக்கூடிய நிலை சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அது கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழே மேம்படுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கிராமச் சாலையை, நெடுஞ்சாலைக்கு எடுத்து இந்த ஆண்டிலே ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி,

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, ராமகொண்டஅள்ளி-நெருப்பூர் சாலை, ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலை என்று குறிப்பிட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதிலே குறுக்கிடக்கூடிய மத்தளப்பள்ளம் என்கிற ஆற்றின் குறுக்கே பாலம் தேவை என்று சொல்லி, மீண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருப்பதால், அதற்காக ஊராட்சி ஒன்றியத்தை அணுக வேண்டுமென்று நான் ஏற்கெனவே பதிலிலே சொல்லியிருக்கின்றேன். இருந்தாலும், அரசும் பரிசீலிக்கும் என்று சொல்லி, முந்தைய கேள்விக்கு நான் பதிலளித்திருக்கின்றேன். அந்தப் பாலம் அமைத்து, அணுகுசாலையை அமைப்போம் என்று சொன்னால், சுமார் 70 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நபார்டு வங்கியினுடைய திட்டத்திலே அந்தச் சாலை அமைக்கப்பட்டது; அது ஊராட்சி ஒன்றியச் சாலை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 1996 ஆம் ஆண்டிலிருந்து, 2001 ஆம் ஆண்டுவரை, 5 ஆண்டுக் காலத்தில், நபார்டு வங்கியினுடைய உதவியுடன், சுமார் 5 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள கிராம மண் சாலைகள், தார்ச் சாலைகளாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மாற்றியமைக்கப்பட்டன. கடந்த காலத்திலே பராமரிப்பு இல்லாமலும், போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாமலும், சாலை பழுதடைந்த காரணத்தால் பேருந்துகள் எல்லாம்கூட நிறுத்தப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த நிதியாண்டில் 200 கோடி ரூபாயை நெடுஞ்சாலைத் துறைக்கு அளித்து, அதுபோன்ற சாலைகளைப் பராமரிப்பதற்காகவும், 103 கோடி ரூபாய் ஊரக வளர்ச்சித் துறைக்கு அளித்தும், மொத்தமாக ஏறத்தாழ 303 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இதுபோன்ற சாலைகள் பராமரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் அதற்குத் தேவையான மொத்தத் தொகை ரூ.303 கோடியை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது ஒதுக்கியிருக்கின்றார்கள். எனவே, அந்த நிதியிலிருந்து இதைச் செய்வதற்கு அரசு தீவிரப் பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே தினமும் 5 ஆயிரம் வாகனங்கள்





சேர்ந்து கொண்டிருக்கின்றன. முன்பு கலைஞர் அவர்கள் ஆட்சி செய்தபோது, மலேசிய நாட்டு உதவியோடு, flyover - பறக்கும் சாலைகளை அமைக்கும் திட்டம் அரசிடம் இருந்தது. அது இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக கடந்த காலத்தில் இருந்தபோது, மலேசிய நாட்டிலேயிருந்து வந்த ஒரு நிறுவனம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே பேசிவிட்டுச் சென்றதைப்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வரோடு கலந்துபேசி, மீண்டும் அதுகுறித்து இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**110—**

**கால்நடை மருத்துவமனை**

***6895—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு தரப்பில் தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, மலையும், மலையைச் சார்ந்த பகுதிகள் நிறைந்துள்ள தொகுதி; மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற தொகுதி. அதிலே நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் மட்டும் 12 ஊராட்சிகள் இருக்கின்றன. 36 பால் சொசைட்டிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த 36 பால் சொசைட்டிகளிலும், 3 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த 3 ஆயிரம் லிட்டர் பாலினை, 300 கறவை மாடுகளிலிருந்து கறந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மங்களபுரத்தில்தான் ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. முள்ளுக்குறிச்சிப் பகுதிக்கும், மங்களபுரத்திற்கும் கிட்டத்தட்ட 20 கி.மீ. தூரம் இருக்கிறது. ஆகவே, முள்ளுக்குறிச்சிப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முள்ளுக்குறிச்சியில் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம் செயல்படுகிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், அங்கேயுள்ள தேவையை எண்ணியும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகிற காரணத்தால், அதையும் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு கிராமத்தைக் குறிப்பிடுவாராயின், அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு என்னுடைய நன்றி. அந்தப் பகுதி மலையைச் சார்ந்த பகுதியாக இருக்கிறது. மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பால் விற்பனையை ஒரு குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியினுடைய கால்நடைகள், மாடுகளின் நோயைக் குணப்படுத்த



2007 ஏப்ரல் 20]

முள்ளுக்குறிச்சிப் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீண்டும் அதே கருத்தை வலியுறுத்துகிறார்கள். ஏற்கெனவே, முள்ளுக்குறிச்சியில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. அதனால், அருகிலுள்ள கிராமத்தில் நிச்சயமாக இந்த அரசு வரும் நிதியாண்டிலே கால்நடை மருத்துவ நிலையம் அமைத்துத் தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, உரிகம் ஊராட்சிக்குட்பட்ட கோட்டையூர், மஞ்சுகாண்டபள்ளி, தக்கட்டி, அர்த்தக்கல் போன்ற 8 ஊராட்சிகளில், 60-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள். மலைவாழ் மக்களின் ஜீவாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு உள்ளது. அந்தப் பகுதியிலே 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. ஆகவே கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சைக்காக 25 கிலோ மீட்டர் தூரமுள்ள அஞ்செட்டி கால்நடை மருத்துவமனைக்கு டெம்போ, லாரி போன்ற வாகனங்களிலே கால்நடைகளை ஏற்றிச் செல்கின்ற துர்பாக்கிய நிலை உள்ளது. ஆகவே, உரிகம் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தளி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து, உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பின் இந்த அரசு அதனைப் பரிசீலிக்கும்.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல வாரியம் அமைத்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், முதலிலே உட்காருங்கள் எல்லோரும். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை. நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் பற்றியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழர் திருநாளாம் பொங்கல் விழாக் கொண்டாட்டங்களின்போது சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், ஏனைய நகரங்களிலும் மற்றும் பேரூர்களிலும், தமிழ்க் கலாசாரத்தின் சிறப்புகளைப் பறைசாற்றும் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும், சுற்றுலாத் துறையும், தமிழக அரசின் இயல், இசை, நாடக மன்றத்தின் தகுதிச் சான்றிதழ் பெற்ற தனியார் அமைப்புகளும் இணைந்து நடத்தும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினையொட்டியும், கடந்த 13-4-2007 அன்று சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் நாட்டுப்புறக் கலைஞர்கள் பேரணி நடத்தி அளித்த கோரிக்கையினைக் கருத்தில் கொண்டும், பாரம்பரியக் கலைகளை வளர்த்து, அந்தக் கலைகளையே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென தனியே ஒரு நல வாரியம் அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



2007 ஏப்ரல் 20] [கலைஞர் மு. கருணாநிதி]

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் இந்த வாரியத்தின் தலைவராகவும், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் ஆகியோர் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களாக முனைவர் கே.ஏ. குணசேகரன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. வி. தமிழ்ச்செல்வன், பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி திரு. ஆர். தனஞ்செயன், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வி. அரசு, கூத்துப் பட்டறை திரு. முத்துச்சாமி, சிஸ்டர் சந்திரா, திண்டுக்கல், சிலம்பாட்டக் கலைஞர் திரு. ஜான் பாபா, ஜெயா அருள்பதி, திருமதி சின்னப்பொண்ணு குமார் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, என்ன?

**திரு. ஜி.கே. மணி**: நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமாக, தமிழர்களின் கலாசாரத்தைப் போற்றிப் பாதுகாத்து வருவது நாட்டுப்புறக் கலை—தமிழர்களின் பழங்காலக் கலை, இலக்கியங்கள். ஆனால், நாளடைவில் அது நலிந்துகொண்டு வருவதால் நாட்டுப்புறக் கலைகளே இல்லாமல் ஆகிவிடுமோ என்ற அச்சம் தமிழ்நாட்டில் நிலவி வருகிற இந்தச் சூழ்நிலையில், நாட்டுப்புறக் கலைஞர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பேரணியை நடத்தி, அந்தப் பேரணியின்வாயிலாக எங்களையெல்லாம் அழைத்திருந்தார்கள். அந்தப் பேரணியிலே கலந்துகொண்ட நாங்கள், மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழினத்தின்மீதும், தமிழ் கலையின்மீதும் மாறாத பற்றுக் கொண்டிருப்பவர்கள்; ஆகவே இதை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். ஆகவே, நலிந்துவிட்ட கலைஞர்கள், படிக்க வாய்ப்பில்லாமல் குழந்தைகளுக்கு மட்டுமில்லாமல் தங்களுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாகியிருக்கிற இந்த நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்க்கையில் புத்துயிர் ஊட்ட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலே இதற்கு ஒரு நல வாரியம் அமைத்து, அதற்காக உறுப்பினர்களையும் தேர்வு செய்து, அதேவேளையில் வருகிற தமிழர் திருநாளாம் தைத் திங்களில் நாடு முழுவதும் நிகழ்ச்சிகள் நடத்த

வாய்ப்பளிக்கிற வகையிலே ஒரு நல்ல அறிவிப்பைச் செய்த முத்தமிழறிஞர் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகள் மற்றும் உறுப்பினர்கள் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பிலும், என் சார்பிலும், தமிழக நாட்டுப்புறக் கலைஞர்களுடைய சார்பிலும், மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேரணி, அந்த ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி முடிவுபெற்று மனு கொடுப்பதற்காக நானும் அதனுடைய தலைவர் தமிழ்ச்செல்வன் அவர்களும், செந்தில்நாதன் அவர்களும், சென்னைத் தோழர்களும் வந்திருந்தோம். மாண்புமிகு செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அவர்களைப் பயன்படுத்தி இந்த மனுவையும் கொடுத்திருந்தோம். இவ்வளவு விரைவாக அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கவில்லை. எடுத்த காரியத்தை விரைந்து முடிக்கின்ற நற்பண்போடு இதனைச் செய்திருப்பதற்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான நல வாரியத்தை அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேயும், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பிலேயும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். விரைந்து நடவடிக்கை எடுத்து நாட்டுப்புறக் கலை நசிந்துவிடாமல் பாதுகாத்திருக்கிற முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ள நிலையில் தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கும் முடிவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 56-ன்கீழ் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் கர்நாடக மாநில அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ள நிலையில், தமிழக அரசு இது தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் முடிவு குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி.ஜெயக்குமார், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. கோ. அரி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மற்றும் திரு. வேல்முருகன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும் கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5-2-2007 அன்று காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பில், அந்தத் தீர்ப்பின்மூலமாக தமிழகத்திற்கு பில்லிகுண்டுலு என்ற இடத்தில் 192 டி.எம்.சி. வழங்கப்பட வேண்டுமென்றும், அதில் புதுச்சேரி மாநிலத்திற்கு 7 டி.எம்.சி. நீர் தர வேண்டுமென்றும், ஆக தமிழகத்திற்கு 185 டி.எம்.சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான செய்தியை ஆரம்பத்திலேயே பதிவு செய்கிறார். 192 டி.எம்.சியை கர்நாடக பார்டரிலே தர வேண்டுமென்பது இறுதித் தீர்ப்பு. பாண்டிச்சேரிக்குத் தருவது என்பது அங்கிருந்தல்ல, மேட்டூருக்குக் கீழே நமக்கு வருகிற 232 டி.எம்.சி.யிலிருந்துதான் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதே தவிர, அந்த 192 டி.எம்.சியிலே பாண்டிச்சேரிக்குக் கொடுக்க வேண்டுமென்று அல்ல.

[2007 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்கள் கொடுத்தால்தானே நாம் கொடுக்க முடியும். அவர்கள் கொடுக்கவில்லையென்றாலும், நாம் கொடுக்க வேண்டுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பாண்டிச்சேரிக்கு, அமராவதியில், பவானியில் மிச்சம் இருக்கிற 20 டி.எம்.சி. போக எவ்வளவு போதவில்லையோ அதை மேற்கொண்டு கொடுப்பார்களே தவிர, அங்கே கொடுக்க வேண்டுமென்பதல்ல, இடைக்காலத் தீர்ப்பில் அப்படி இருந்தது, இந்தத் தீர்ப்பில் அப்படி அல்ல.

*முற்பகல் 10-30*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ, பாண்டிச்சேரிக்கு 7 டி.எம்.சி. தண்ணீரை நாம் தரவேண்டும். ஆக, 185 டி.எம்.சி. தண்ணீர்தான், நமக்குக் கர்நாடக மாநிலத்திலிருந்து வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அப்படித்தானே வரும் கணக்கு? இதுபோக, ஏற்கெனவே பவானி அணைக்கட்டு கட்டப்பட்டு, அதற்கு வரப்பெறுகின்ற நீரின் அளவிலிருந்து 6 டி.எம்.சி. நீரும், அமராவதி அணைக்கட்டிற்கு வருகின்ற நீரிலிருந்து 3 டி.எம்.சி. நீருமாக, 9 டி.எம்.சி. நீரை கேரள மாநிலத்திற்குத் தர வேண்டுமென்று அந்தத் தீர்ப்பினுடைய சாரத்தில் வழங்கப் பட்டிருக்கின்றது. ஆக, தமிழகத்திற்கு இந்தத் தீர்ப்பின்மூலமாக சாதகமான அம்சங்களைக் காட்டிலும், பாதகமான அம்சங்கள் நிறையவே இருக்கின்றன என்று சொல்லி, நாமெல்லாம் மிகுந்த மன வேதனையையும், எதிர்ப்பையும் தெரிவித்தோம்.

மாண்புமிகு அம்மா அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, குரலாக, இந்தத் தீர்ப்பினை நாம் உடனே உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு, 1972-ல் மத்திய அரசினுடைய நதி நீர் ஆணையம், ஓர் உண்மையைக் கண்டறியும் குழுவினை அமைத்து, அதனுடைய அறிக்கையாகக்கூட, தமிழகம் மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கு 666.60 டி.எம்.சி. நீர், உபயோகப்படுத்தப்படுகின்ற நீரின் அளவு என்று அந்த அறிக்கையின்வாயிலாக நாம் தெரிந்து கொண்டிருக்கின்றோம். அதே மத்திய அரசினுடைய நதி நீர் ஆணையம், அந்த உண்மை கண்டறியும் குழு, கர்நாடகத்திற்கு 176.82 டி.எம்.சி.தான் தேவையென்று அறிக்கையும் தந்திருக்கிறது. கேரளாவிற்கு 5 டி.எம்.சி. நீர் தேவை என்று தந்திருக்கிறது.



2007 ஏப்ரல் 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆனால், அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும், இப்போது நாம் பெறுகின்ற நீரின்அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இடைக்காலத் தீர்ப்பாக, 205 டி.எம்.சி. தண்ணீரை நாம் பெற்றுவந்த நிலையில், மிகக் குறைந்த அளவாக 185 டி.எம்.சி.-யும், அதிலே 9 டி.எம்.சி-ஐ, நாம் கேரள மாநிலத்திற்குத் தருகின்ற ஓர் அவல நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பாக, இரண்டு முறை அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பல்வேறு சாதக பாதகங்களைப் பற்றி, அங்கே பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் கூறினார்கள். நாங்களும், மாண்புமிகு அம்மா அவர்களினுடைய கருத்தாக, கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், கசப்பான, உணர்வுபூர்வமான செய்திகள் இவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னோம். அந்தவகையில், நாம் யாரையும், அவர்கள் எவ்வளவு மிகப்பெரிய பொறுப்பில் இருந்தாலும், அவர்களையெல்லாம் நம்பாமல், சட்டபூர்வமான நடவடிக்கை ஒன்றுதான் நீதி கிடைப்பதற்கு இருக்கின்ற ஒரு வாய்ப்பு என்பது, கடந்த காலங்களில் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அனுபவம் என்பதனை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்தாக, மேற்கொண்டும் நடுவர் மன்றத்திற்குச் செல்வதால், எந்தவிதப் பயனும் அங்கு ஏற்படப்போவதில்லை; ஆகவே, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதுதான் ஒரே தீர்வு என்று நாங்கள் அங்கு எடுத்துச் சொன்னோம். ஆனால், அந்தக் கூட்டம், அனைத்துக் கட்சியினுடைய கூட்டம், 15-4-2007 அன்று முடிவிற்கு வந்தபிறகு, அரசினுடைய செய்தி வெளியீட்டில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், முதலில் நடுவர் மன்றத்திலும், அடுத்து தேவைப்பட்டால் உச்ச நீதிமன்றத்தில் நாம் முறையீடு செய்யலாம் என்று அந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது என்று தமிழக அரசினுடைய செய்திக் குறிப்பில் செய்தியாக வெளிவந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 10-35*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய ஒரு கட்சியினுடைய, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், இவ்வளவு தவறான ஒரு கருத்தை நெஞ்சறிந்து சொல்லக்கூடாது. ஏனென்றால், அவரைப்பற்றி நான் வைத்திருக்கின்ற உயர்ந்த மதிப்பிற்கு அது விரோதமாக ஆகிவிடக்கூடும் என்பதால், நான் மிகப் பணிவன்போடு

கேட்டுக்கொள்கின்றேன். எல்லோரும், அந்த அவையிலே இருந்தவர்களெல்லாம் இங்கேயும் இருக்கின்றார்கள், எல்லோரும் சேர்ந்துதான் இந்த முடிவை எடுத்து, எடுப்பதற்குக்கூட காரணம், ஆளுங்கட்சி சார்பாகப் பேசியவர்கள், அல்லது அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்ட பெரும்பாலோர், அத்தனைபேரும், உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன்பு, முதலில் இதைப்பற்றி மறு ஆய்வு மனு செய்ய நடுவர் மன்றத்திற்குத்தான் செல்லவேண்டும்; அதற்குப் பிறகு தேவைப்பட்டால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஏன் வந்தார்கள் என்றால், உங்களுக்குத் தெரியும், நாம் அதை மறைக்கக்கூடாது, நாமே எடுத்த முடிவு. உங்கள் பக்கத்திலே நம்முடைய வீரபாண்டி ஆறுமுகம்தான் அமர்ந்திருந்தார். இன்னும் சொல்லப்போனால், இன்னொரு பக்கத்திலே வழக்கறிஞர் ஜோதிதான் அமர்ந்திருந்தார். நான் பக்கத்திலே இருந்து பேசினேன்.

நான் என்ன பேசினேன்? "உங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள்; நீங்கள் அதையே வலியுறுத்திச் சொல்கின்றீர்கள்; ஆனால், இங்கே பெரும்பாலோர், இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலுள்ள பெரும்பாலோர், உச்ச நீதிமன்றத்திற்கு முதலிலே செல்ல வேண்டியது இல்லை, முதல் முதலில் நாம் செல்ல வேண்டிய இடம், நடுவர் மன்றத்தினுடைய மறு ஆய்வுக்காக என்று சொன்னார்கள். நான் அப்பொழுதுதான், பிரதான எதிர்க்கட்சியைப் புறக்கணித்துவிட்டு, அதனுடைய கருத்தை அலட்சியப்படுத்திவிட்டு, ஒரு முடிவு எடுக்கக்கூடாது, இரண்டுக்கும் பொதுவாக, இரண்டு கட்சிகளினுடைய கருத்துகளையும் இணைத்து, நான் ஒரு தீர்மானம் நிறைவேற்றுகிறேன், அதை நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரிடத்திலும் படித்துக் காட்டிவிட்டேன், அவர்கள் அதிலே ஒன்றிரண்டு திருத்தங்கள் செய்திருக்கிறார். அவரும் இதற்கு ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறார், அவருக்கும் okay தான். ஆகவே, இதைப் படிக்கிறேன்" என்று நான் படித்த பிறகு, நீங்கள் மாற்றிக் கொண்டீர்கள். மாற்றிக் கொண்டதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியும், பக்கத்திலே உள்ளவரிடத்திலே மாட்டிக் கொண்டீர்கள். ஆகவே, மாற்றிக்கொண்டீர்கள், அதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவும் நேரெதிரில் இருந்த இத்தனை பேருடைய சாட்சிகளோடு நடந்திருக்கும்பொழுது, அதை அப்படியே தலைகீழாக மாற்றி தீர்மானத்தை நீங்கள் புதிதாக கற்பனை செய்து பேசுவது அழகல்ல, முறையும் அல்ல.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, என்றைக்கும் நான் முதலில் என்ன சொல்கின்றேனோ அதையேதான் கடைசிவரை சொல்வேனேயொழிய, முதலில் சொன்னதில் ஏதாவது மாற்றம் இருந்தால் அதையும் சொல்லிவிட்டுச் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதை மாற்றிச் சொல்கின்ற பழக்கம் எனக்கு இல்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். நாங்கள் அன்றைக்கு என்ன சொன்னோம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சொல்லிவந்த சாராம்சம் எல்லாம் உண்மைதான். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை வாசிக்கவில்லை. தீர்மானத்தை அவர்கள் கையிலே எழுதி, எங்களிடம் சில திருத்தங்கள் தேவையா பாருங்கள் என்று கொடுத்தார்கள். நாங்கள் அதைப் பார்த்து சில திருத்தங்களைச் சொன்னோம். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். நாங்கள் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடம் சில திருத்தங்களைச் சொன்னோம். ஆனால், அந்தத் திருத்தங்கள் அந்தத் தீர்மானத்தில் வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சியினுடைய ஒட்டுமொத்தத் தீர்மானமாக, ஏகமனதான தீர்மானமாக அந்தத் தீர்மானங்களை வாசிக்கவில்லை. அதாவது. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் சொல்வது எழுத்துகளையோ, வார்த்தைகளையோ அல்ல, மன்னிக்க வேண்டும், கருத்துகளைச் சொன்னேன். இரண்டு கருத்துகளும் இணைந்த கருத்துகளாக, இரண்டு கருத்துகளில் ஒரு கருத்தை விடவேண்டாம், அந்தக் கருத்தும் இருக்கட்டும், இந்தக் கருத்தும் இருக்கட்டும்; இரண்டையும் இணைத்து தீர்மானம் ஆக்குவோம் என்று சொன்னேன். அதற்குத்தான் உங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தீர்கள். இதற்கு மேல், என்னால் எந்தக் கோயிலிலும் வந்து ஆணையிடவும் முடியாது, சத்தியம் செய்யவும் முடியாது. இதுதான் பெரிய கோயில் நமக்கு.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல அனைத்துக் கட்சித் தலைவர்களும், முதலில் நடுவர் மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யவேண்டும் என்றும், பின்னால் தேவைப்பட்டால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்றும்தான் சொன்னார்கள். நாங்கள் உறுதியாக எங்களுடைய நிலைப்பாடாக, மேல்முறையீடு செய்வதனால் எந்தப் பலனும் இல்லை; ஏற்கெனவே நடுவர் மன்றத்திற்குச் சென்று இந்தத் தீர்ப்பு வாங்குவதற்கே 16 ஆண்டு காலம் ஆகிவிட்டது; மீண்டும் மேல்முறையீடு செய்வதற்கு நடுவர் மன்றத்தை நாடுவதினால் எந்தப்

பலனும் இல்லை, ஆகவே, உச்ச நீதிமன்றத்திற்குத்தான் செல்ல வேண்டும் என்று நான் இறுதியாகச் சொன்னேன். இறுதியாகச் சொல்லி, எங்களுடைய கருத்தாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்தாகத்தான், நான் அதைப் பதிவு செய்தேன். ஆனால், எந்தவித தீர்மானமும் நிறைவேற்றாமல்தான் அந்தக் கூட்டம் அன்றைக்கு முடிந்தது. அதுதான் உண்மை. ஆனால், நாங்கள் வெளியே வந்ததற்குப் பின்னால்தான், அரசினுடைய செய்தியாக இந்தச் செய்தி வெளியீடு வந்ததேயொழிய, வேறொன்றும் இல்லை என்பது, இங்கே இருக்கின்ற அத்தனை தலைவர்களுக்கும் தெரியும். (குறுக்கீடு) இல்லை, அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை அவர்கள் கையில் வைத்துப் படித்தார்கள். ஆனால், நாங்கள் சொன்ன திருத்தங்கள் அதிலே வரவில்லை. நாங்கள் சொன்ன திருத்தங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மறுத்து அறிக்கை கொடுத்திருக்கிறீர்களா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் என்னைச் சொல்ல விடமாட்டேன் என்கிறீர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானம் வெளிவந்த அன்றைக்கே நீங்கள் சொன்ன திருத்தங்கள் அதிலே வரவில்லை என்றால், அன்றைக்கே மறுத்து அறிக்கை ஒன்றைக் கொடுத்திருக்க வேண்டும். இவ்வளவு நாள் பொறுத்திருந்து, இப்பொழுது அம்மா சொன்ன பிறகு, இங்கே வந்து சொல்வது சரியல்ல. இது நல்லதும் அல்ல. இது, நாம் எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம், காவிரி பிரச்சினையில் என்பதைத்தான் வலியுறுத்த வேண்டும், என்பதைத்தான் நாட்டுக்கு அறிவிக்க வேண்டும், என்பதைத்தான் கர்நாடகத்திற்கு ஒரு அறிவுறுத்தலாக நாம் ஆக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, சட்டசபையிலேயே சண்டை போட்டுக்கொண்டார்கள், காவிரிப் பிரச்சினையிலே என்கின்ற அளவுக்கு நிலைமை வரவேண்டாம். நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்திலே முக்கியமானது, காவிரி நதிப் பிரச்சினையில் கர்நாடக மாநில அரசு உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ள நிலையில் தமிழக அரசு இந்த விஷயத்தில் தற்போது மேற்கொண்டிருக்கும் முடிவு



என்ன என்பதுதான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கேள்வியாகும். அதுதான் இதிலே இடம்பெற்றிருக்கிறது. அதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். அதை மாத்திரம் சொல்லிவிடுகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைமட்டும் சொல்லுங்கள். கோர்ட்டுக்குப் போகிறோமா, இல்லையா என்பதை மாத்திரம் சொல்லுங்கள். மற்றவற்றையெல்லாம் சொல்ல வேண்டாம். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) நான், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கின்றேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானத்தைப் படித்துப் பார்த்து நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாக அதைப் பதிவு செய்துகொள்ளுங்கள் என்றுகூட, அன்றைக்கு, அந்தக் கூட்டத்திலே சொன்னோம். மற்ற கட்சியினுடைய சில கருத்துகள் இருந்தன. எங்களுடைய கருத்தாக, ஒத்த கருத்தாக, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டுமென்ற கருத்து மட்டும் இருந்தது. ஆனால், மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும், மேல்முறையீடு செய்ய வேண்டும். அதற்கு பின்னால், உச்ச நீதிமன்றம் செல்ல வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சொல்லப்போனால் வெளிப்படையாக, அங்கு பக்கத்திலேயிருந்த திரு. ஜோதி அவர்கள் குறுக்கிட்டு இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப்போல பேசுகின்றபோது, முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கேட்டார்கள். நான் பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவரைக் கேட்கிறேன் என்று சொன்னார். அப்போது இவர் பேசாமல்தான் இருந்தார். (குறுக்கீடு) நீங்கள் அப்போது பேசாமல்தான் இருந்தீர்கள். நான் அப்போது சொன்னேன், திரு. ஜோதி பேசியவுடன் கேட்டேன். பிரதான எதிர்க்கட்சித் தலைவருடைய பதில் என்ன என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது உடனே ஜோதிதான் எழுந்து பதில் சொன்னார். நான் அந்தக் கூட்டத்திலேயே கேட்டேன். "அவர் பேசாமல் இருக்கிறார்,

நீங்களா பிரதான எதிர்க்கட்சித் தலைவர்" என்று கேட்டேன். (குறுக்கீடு) நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே என்று அன்றே கேட்டேன். ஆகையினாலே, அங்கு பேசாமல் இருந்துவிட்டு, இப்போது மாற்றிச் சொல்வது அழகல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், நீங்கள் சப்ஜெக்ட்டுக்குள்ளே மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) கோர்ட்டுக்கு போகும் விஷயம் என்ன?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்கள், தவறான கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சட்டப்பேரவை நிகழ்ச்சி காவிரிப் பிரச்சினை குறித்துப் பேசி அதிலே நமக்குள்ளே பல குழப்பங்கள், தேவையற்ற கசப்புணர்வுகள் ஏற்பட்டு, தமிழகம் இந்தப் பிரச்சினையிலே இரண்டாகத்தான் பிரிந்திருக்கிறது; சட்டசபையிலே அது நிரூபிக்கப்பட்டது என்ற இனிய செய்தியை கர்நாடகத்துக்காரர்களுக்குச் சொல்வதைத் தவிர்க்க வேண்டுமேயானால், நான் மற்ற தலைவர்கள் எல்லாம்கூட பேசத் தேவையில்லை; அவர்கள் எல்லாம் பேசி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லியது தவறு என்று, நாங்கள் அங்கே சாட்சிக்கு இருந்தோம் இதுதானே சொல்லப்போகிறார்கள். அதுகூடத் தேவையில்லை. அவர்களுடைய கேள்வி, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். கர்நாடகா என்ன செய்ததோ அதை நாமும் செய்யலாம் என்பதுதான். கர்நாடகம் என்ன செய்திருக்கிறது என்றால், 'ஹிந்து' பத்திரிகையிலே இன்றைக்கு வந்திருக்கிறது. "The Karnataka Cabinet has cleared the draft of the State's Petition on the Cauvery disputes, to be filed before the Supreme Court and also the Cauvery Water Disputes Tribunal. The Cabinet authorised a team of legal experts to make any minor changes, if required."

இதைத்தான் நாமும் செய்யப்போகிறோம். இதைத்தான் அன்றைக்கு முடிவு எடுத்தோம். அதிலே என்ன தவறு இருக்கிறது? கர்நாடகா அரசு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகப் போகிறது. அதேநேரத்தில் மறு ஆய்வு மனுவையும் நடுவர் மன்றத்திலே கொடுக்கப் போகிறது. அதைத்தான் நாமும் செய்யப் போகிறோம், அதைத்தான் நாம் அன்றைக்கு முடிவு எடுத்தோம்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கருத்துகளைச் சொன்னதற்கு பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசினுடைய நிலைப்பாட்டைச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து என்ன என்று கேட்டார்கள். நீங்கள் அனைவரும் கேட்டீர்கள். கருத்து என்னவென்று. நான் சும்மா இருந்துவிடவில்லை. அப்போதுகூட நான் சொன்னேன், எதிர்க்கட்சித் தலைவர் இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று சொல்லிவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாக, மேல்முறையீடு செய்வதில் எந்தவிதப் பலனும் இல்லை. நேரடியாக உச்ச நீதிமன்றம் செல்வதுதான் ஒரேவழி என்று நான் அன்றைக்குச் சொன்னேன். அந்தக் கூட்டத்தினுடைய மினிட்சை எடுத்துப் பார்த்தால் அதுதான் பதிவாகியிருக்கும். அதுதான் உண்மை. ஆனால், இப்போது உச்ச நீதிமன்றத்திற்கு நாம் நேரடியாகச் செல்ல முடியாது என்று இரண்டு அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலும் சொல்லப்பட்டது. சட்ட வல்லுநர்களைக் கலந்து பேசி உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாகச் செல்லமுடியாது; முதலில் நடுவர் மன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும்; பிறகுதான் உச்ச நீதிமன்றம் செல்ல முடியும் என்ற கருத்து அங்கு சொல்லப்பட்டது. ஆனால், நேற்று கர்நாடக மந்திரி சபையின் கூட்டம் கூட்டப்பட்டு, அவர்கள் நேரடியாக உச்ச நீதிமன்றம் செல்ல வேண்டும் என்ற முடிவை அவர்கள் அங்கே எடுத்திருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய தமிழக அரசு, உச்ச நீதிமன்றம் செல்லப்போகின்றதா அல்லது நடுவர் மன்றத்திற்குச் செல்லப்போகின்றதா என்பதுதான் நான் இன்றைக்கு கேட்கின்ற கேள்வியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை வைத்திருக்கின்றார். முக்கியமான மூலக் கேள்வி. கர்நாடக அரசு போன்று நீங்கள் உச்ச நீதிமன்றம் செல்லப்போகிறீர்களா அல்லது ஏற்கெனவே நீங்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நிறைவேற்றிய தீர்மானத்தைப்போல, முதலில் நடுவர் மன்றத்திற்கு மறு ஆய்வுக்குச் செல்லப்போகிறீர்களா என்பது இந்த இரண்டு கேள்விகள். நடுவர் மன்றத்திற்கு மறு ஆய்வுக்கு செல்வது நம்முடைய நன்மைக்காக. கர்நாடகத்துக்காரர்கள் உச்ச நீதிமன்றம் செல்வது அவர்களுடைய நன்மைக்காக. அவர்களுடைய

நன்மை என்றால், இந்தத் தீர்ப்பையே, இறுதித் தீர்ப்பையே இல்லாமல் செய்ய அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று, நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பே செல்லாது என்று ஆக்கிவிட்டால், பழைய நிலை தொடரும். நாம் மீண்டும் இந்த 50 ஆண்டு காலத்தை மறுபடியும் சந்திக்க நேரிடும். எனவேதான், நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வது இப்பொழுது அல்ல, பிறகு என்று அன்றைக்கே மிக எச்சரிக்கையோடு குறிப்பிட்டிருக்கின்றோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அனைத்துக் கட்சி சார்பிலே 15 ஆம் தேதி அன்று எடுத்த அந்த முடிவின்படி, முதலில் நடுவர் மன்றத்திற்கு மறு ஆய்வுக்காக செல்வது; தேவைப்பட்டால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வது. உச்ச நீதிமன்றத்திற்கு கர்நாடகம் செல்வதற்குக் காரணம், அந்தத் தீர்ப்பையே அழித்துவிட்டால், அவர்களுக்கு பெரும் இலாபம். நூற்றுக்கு நூறு இலாபம். தமிழ்நாட்டிற்கு இலாபம் இல்லை. தமிழ்நாட்டிற்கு பெரும் நஷ்டம். இதை நான் அல்ல —தி.மு.க.-வைச் சேர்ந்த நான் அல்ல; அல்லது வேறு கட்சிகளைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் அல்ல; விவசாயிகளினுடைய முன்னேற்றத்திற்காக நீண்டகாலமாகப் பெரும்பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற தஞ்சைத் தரணியைச் சேர்ந்த நண்பர் ரங்கநாதன் என்கின்ற மிராசுதார் சங்கத்தின் தலைவர்— அவர்தான் உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கைப் போட்டு, நடுவர் மன்றம் நமக்குக் கிடைத்ததற்குக் காரணமாக இருந்த அந்த ரங்கநாதன், அவரையே அன்றைக்கு அழைத்து நாங்கள் பேசியபொழுது, அந்தக் கூட்டத்திலே அவர் சொன்ன கருத்து, உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாகச் செல்லக்கூடாது. முதலிலே கலந்தாய்வைச் செய்யக்கூடிய நம்முடைய நடுவர் மன்றத்திற்குச் சென்று, அவர்களிடத்திலே நம்முடைய கோரிக்கைகளை வைத்து, அந்தத் தீர்ப்பைப் பெற வேண்டும். அப்படிக் கிடைக்கவில்லை என்றால்தான் உச்ச நீதிமன்றம் என்ற கருத்தைத் தங்களுக்கு நேராகவே ரங்கநாதன் அவர்கள் சொன்னதை நீங்கள் காதாரக் கேட்டீர்கள், எல்லோரும் அறிவார்கள்.

## 5. கவன ஈர்ப்பு

### கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு நிதியைத் தொடக்கக் கல்விக்கு ஒதுக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை



அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்பக் கல்வியை அரசின் கட்டுப்பாட்டில் முழுமையாகக் கொண்டு வருவதற்கும், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியில் 50 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்வதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கடந்த மூன்றாண்டுகளில் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் தொடக்கக் கல்வித் துறைக்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| ஆண்டு | கல்வித் துறைக்கான மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | தொடக்கக் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| 2005-2006 | 4348.01 | 2156.38 | 49.59 |
| 2006-2007 | 5438.87 | 2758.15 | 50.71 |
| 2007-2008 | 7056.56 | 3597.80 | 50.99 |

மேலே குறிப்பிட்டவாறு கல்வித் துறைக்கான மொத்த ஒதுக்கீட்டில் தொடக்கக் கல்வித் துறைக்கு ஐம்பது சதவிகிதத்துக்குத் (50%) தான் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆரம்பக் கல்வி முழுக்க முழுக்க அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிற இந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இந்த அறிக்கையிலே, தொடக்கக் கல்விக்கு 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் கடந்த மூன்று ஆண்டு காலமாக நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேவேளையில், ஆரம்பக் கல்வி முழுக்க

[திரு. ஜி.கே. மணி] [2007 ஏப்ரல் 20

முழுக்க அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்ற ஒரு செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, 50 விழுக்காடு என்பது கல்விக்கு ஒதுக்குகிற, உயர் கல்விக்கும் சேர்த்து ஒதுக்குகிற மொத்த நிதியிலா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், ஆரம்பக் கல்விக்கு சொல்லி இருக்கிறீர்கள். அதிலே பள்ளிக் கல்விக்கு எவ்வளவு என்று சொன்னால், இன்னும் பொருத்தமுடையதாக இருக்கும் என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

இப்போது 50 விழுக்காட்டிற்கு மேலே தொடக்கக் கல்விக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, ஆரம்பக் கல்வி முழுக்க முழுக்க வெற்றி பெறுகிற நிலையில், மக்களுக்குப் பயனளிக்கிற நிலையில் இல்லை என்பதை நான் இங்கே தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இப்போது தொடக்கப் பள்ளிகளினுடைய எண்ணிக்கையை நாம் அதிகரித்துக் கொண்டே போகிற வேளையில், ஒரு பக்கம், பள்ளிகளை மூடிவருகிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. காரணம், அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளிலே குழந்தைகளுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதற்குக் காரணம், பள்ளிகளில் கட்டட வசதி குறைவு, அடிப்படை வசதிகள் குறைவு, ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்ற நிலையை உணர்ந்து இப்போது தனியார் பள்ளிகளுக்கு மாணவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், தொடக்கப் பள்ளிகளுடைய மொத்த எண்ணிக்கை 40,000. அதிலே ஒதுக்கப்பட்டிருக்கிற ஆசிரியர்களின் பணியிடங்கள் ஒரு இலட்சத்து 86 ஆயிரம். ஆனால், இப்போதிருக்கிற ஆசிரியர்களின் எண்ணிக்கை வெறும் 81 ஆயிரம் மட்டுமே. ஆகவே, இவ்வளவு பணியிடங்கள் இருக்கின்றனவேதவிர, ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. பள்ளிகளிலே இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்துகொண்டிருக்கிறது. அதேவேளையில் தனியார் நடத்துகிற ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதாவது, நர்சரி பள்ளிக்கூடங்களான மழலையர் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளி என்கிற ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இப்போது



2007 ஏப்ரல் 20] [திரு. ஜி.கே. மணி]

ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்கள் 24 ஆயிரம் பள்ளிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி, பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது, கல்வித் தரம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லி, அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அல்லது ஓரளவுக்கு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும்கூட அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு, ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகளை அனுப்புவதே இல்லை. முழுக்க முழுக்கத் தனியார் பள்ளிகளுக்கு, ஆங்கில வழிப் பள்ளிகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இப்படி மாறி வருகிற சூழ்நிலையில்தான் எதிர்காலத்திலே அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிற பள்ளிகள் கேள்விக்குறியாகிவிடும் என்பதை நான் மட்டும் சொல்லவில்லை; சமச்சீர் கல்வி வேண்டுமென்று அதற்கு அரசாங்கம் முயற்சித்து நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் துணை வேந்தர் முனைவர் முத்துக்குமரன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்திருக்கிறது. அந்தக் குழுவின் சார்பிலே அரசுக்கு அவர் பரிந்துரை செய்திருக்கிறார். அவர் சொல்லியிருப்பது, 'முழுக்க முழுக்க கல்வியிலே முதல் இடத்திலே இருப்பது அரசு உதவி பெறாத பள்ளிக்கூடங்கள், தனியார் நடத்தக்கூடிய அரசு உதவி பெறாத பள்ளிக்கூடங்கள் முதல் இடத்திலே இருக்கின்றன, நன்றாக இருக்கின்றன. இரண்டாவதாக இருப்பது, அரசின் உதவி பெறக்கூடிய பள்ளிக்கூடங்கள், மோசமாக இருப்பது அரசுப் பள்ளிகள்' என்று சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன வார்த்தைகளைச் சொல்வோம் என்று சொன்னால், 'The best Schools are the unaided Schools, the second best are the aided Schools, the worst Schools are the Government Schools' என்று ரொம்ப மோசமாகச் சொல்லியிருக்கிறார். இப்படி அரசாங்கத்தினுடைய நிலைமையை அரசு அமைத்திருக்கிற குழுவின் தலைவரே சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆகவே, இங்கே நான் குறிப்பிட விரும்புவது, 'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது'. பிஞ்சு உள்ளங்களாக இருக்கிற அவர்களுக்கு, ஆரம்பக் கல்வி மிக முக்கியமாகக் கொடுத்தாக வேண்டும். அது அரசின் கட்டுப்பாட்டிலே முழுக்க முழுக்க இருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள்கூட அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். எங்கே அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது? எல்லாம் தனியார்வசம் மாறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுருக்கமாகக் கேளுங்கள்.

[2007 ஏப்ரல் 20

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல, இப்போது நடுநிலைப் பள்ளிகள், தமிழ்நாட்டிலே 7 ஆயிரம் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே உடற்கல்வி ஆசிரியர்கள் வெறும் 7 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். 7 ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு, 7 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஆகவே, உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லை, கலை ஆசிரியர்கள் இல்லை, ஓவிய ஆசிரியர்கள் இல்லை. இந்த நிலைமை ஏன்? பள்ளிக் குழந்தைகளுக்கு இன்னும் இசை முதலான எல்லாவற்றையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். எல்லாக் கலைகளிலும் திறமை பெற்றவர்களாக அந்தக் குழந்தைகள் வளர வேண்டும். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் இருக்கிறது. மத்திய அரசுகூட அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அதிக நிதியை ஒதுக்குகிறது. கடந்த ஆண்டுகளில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் தமிழக அரசுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்தது என்ற நிலை தெரியாமலே இருந்தது. இப்போது அதிகம் வரக்கூடிய அந்த நிதியில் ஆசிரியர் பணியிடங்களைக் கூடுதலாக உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு நீங்கள் முழுக்க முழுக்க அரசின் கட்டுப்பாட்டிலே ஆரம்பக் கல்வியைக் கொண்டுவரவேண்டும். உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி, உயர் கல்வி, தனியார் துறையிலே இருந்தாலும் மெல்ல மெல்லக் குறைக்கிற அதேவேளையில், முழுக்க முழுக்க ஆரம்பக் கல்வியை தனியாரிடம் ஒப்படைக்காமல் அரசின் கட்டுப்பாட்டிலே கொண்டுவர வேண்டுமென்ற செய்தியை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து அமர்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே ஆரம்பக் கல்விக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவம் குறித்தும், அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த அரசு, இந்த 11 மாத காலங்களிலே கல்வித் துறையிலே மிக அதிகமான முக்கியத்துவம் கொடுத்து ஒரு துறையிலே ஈடுபாடு காட்டியிருக்கிறது என்று சொன்னால் அது ஆரம்பக் கல்விதான் என்பதை மிக நன்றாக அறிவீர்கள்.



2007 ஏப்ரல் 20] [திரு. தங்கம் தென்னரசு]

இதே மாமன்றத்திலே நான் சில நாட்களுக்கு முன்பாக பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றுகிறபோதுகூட தொடக்கக் கல்வித் துறைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதையும், தொடர்ந்து அந்த முக்கியத்துவம் வரக்கூடிய ஆண்டுகளிலும் வழங்கப்படும் என்பதையும் நான் உறுதிசெய்து உங்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன்.

இங்கே, நம்முடைய மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை 7,056.56 கோடி ரூபாய். இது பள்ளி கல்வித் துறைக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்ட தொகை, இதிலே உயர் கல்விக்கென்று ஒதுக்கப்படவில்லை. உயர் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை என்பது தனியாக இருக்கிறது. இதிலே 3,597.80 கோடி ரூபாய் தொடக்கக் கல்விக்காக மாத்திரம் ஒதுக்கியிருக்கிறோம். ஏறத்தாழ 51 விழுக்காடு; அதைத்தான் அன்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு அவர்கள் கேட்டார்கள். எனவே, ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை முழுக்க முழுக்க தொடக்கக் கல்விக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இஃதன்னியில் நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன், நீங்கள் தொடர்ச்சியாகச் சொல்கிறபோது ஒன்றைச் சொன்னீர்கள். பள்ளிக்கூடங்களுக்காகக் கட்டக்கூடிய கட்டட வசதிகள் தொடக்கப் பள்ளி என்று சொன்னால் ஆசிரியர்கள் மற்றும் திட்டச் செலவுகள் தவிர்த்து, தொடக்கக் கல்வியிலே கொடுக்கக்கூடிய புதிய திட்டங்களை இந்தத் திட்டத்திலேதான் கொண்டுவந்திருக்கிறோம்.

இந்த வருடத்திலிருந்து 'செயல்வழிக் கற்றல்' என்ற முறையிலே முழுமையாகக் கொண்டு வரக்கூடிய அந்த மிகப்பெரிய திட்டம். அதேபோல self learning என்று சொல்லக்கூடிய தானாகக் கற்றுக்கொள்ளக்கூடிய திட்டம். அதேபோல் ஆசிரியர்கள் அவரவர்களாக, கற்பிக்கக்கூடிய கருவிகளை, ஆங்காங்கே அவர்களாக உருவாக்கிக்கொண்டு கற்பிக்கக்கூடிய திட்டம். ஆக, இத்தனை திட்டங்களும் தொடக்கக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு கொண்டுவந்திருக்கக்கூடிய திட்டங்கள்.

நான் இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்குத்தான் இதுவரை இல்லாத வகையில் ஒரு தொடக்கப் பள்ளிக்கூடத்திலே கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்களில் 11-வது நிதிக்குழு அல்லது

10-வது நிதிக்குழு மூலமாகக் கட்டலாம். சட்டப்பேரவை அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்துகூடக் கட்டலாம்; அல்லது மத்திய அரசினுடைய எஸ்.எஸ்.ஏ. திட்டத்தின் மூலமாகக் கட்டலாம். இந்தப் பள்ளிகளுக்கு கட்டடப் பணி நடந்து வந்திருக்கிறது. ஆனால் முதல்முறையாக ஒரு சிறப்புத் திட்டமாக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், பள்ளிக்கூடங்களிலே இருக்கக்கூடிய அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்; பல பள்ளிக்கூடங்கள் ஓட்டுக் கூரைகளாக இருக்கின்றன; காம்பவுண்ட் சுவர் எல்லாம் இல்லாமல் இருக்கின்றன, அல்லது தளம் பெயர்ந்திருக்கின்றன என்று பல்வேறு குறைபாடுகள் அவர்கள் கவனத்திற்கு வந்தபோது, அவர்களே எங்களை அழைத்து, அவரே ஆய்வு நடத்தி தமிழகத்தினுடைய வரலாற்றிலே இல்லாத அளவிற்கு ஒரு பெரும் திட்டத்தை, ஒரு கனவுத் திட்டத்தை உருவாக்கி, ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, 138 கோடி ரூபாய் இப்போது அதற்காக ஒதுக்கி, தளபதி அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தொடக்கக் கல்விக்காக ஒரு சிறப்பான சீராய்வுத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் பணியிடங்களைப் பொறுத்துகூட இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். ஆசிரியர் பணியிடங்களிலே 2006-2007 ஆம் ஆண்டிலே எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், தொடக்க கல்விக்கு 2,353 ஆசிரியர்களை நேரடியாக நியமனம் செய்து இருக்கிறோம். பட்டதாரி ஆசிரியர்கள் 2,345 பேர்; அதிலே 1,218 பேர் பதவி உயர்வு மூலமாக, மீதி இருக்கக்கூடிய 1,127 பேர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலமாக நியமித்து இருக்கிறோம். ஏன்? இந்த ஆண்டேகூட வரக்கூடிய மே மாதம் ஓய்வு பெறக்கூடியவர்கள் பட்டியலையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த முறை கேட்கிறபோது, எந்த முறையும் இல்லாத முறை, இந்த ஆண்டே வரக்கூடிய காலிப் பணியிடங்களையும் கருத்தில் கொண்டு, நீங்கள் அறிவித்து விடுங்கள். அந்தக் காலிப் பணியிடங்களையும் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத வகையிலே நியமிக்க வேண்டுமென்று சொல்லி இடைநிலை ஆசிரியர்களாக 5,553 பேர், பட்டதாரி ஆசிரியர்களாக 2,611 பேருக்கு முதன்முதலாக முன்கூட்டியே இப்போது ஒப்புதலை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதேமாதிரி அனைவருக்கும் கல்வியிலேகூட நீங்கள் கேட்டீர்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒதுக்கீடு வருகின்றபோது அதற்கு எந்த அளவிலே ஆசிரியர்கள் பணியிடங்களில் நிரப்பப்பட்டிருக்கிறார்கள்



என்று. அதிலே போன வருடம் 720 கோடி ரூபாய் அளவிலே 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்' மூலமாக திட்ட ஒதுக்கீடு இருந்தது. அதிலே 25 விழுக்காடு மாநில அரசினுடைய பங்குத்தொகை, மீதி இருக்கக்கூடிய 75 சதவீதம் மத்திய அரசினுடைய பங்குத் தொகையாக இருக்கிறது. அதன் வாயிலாக 7,979 பட்டதாரி ஆசிரியர்களை 6,7,8 ஆகிய மூன்று வகுப்புகளில் நியமிப்பதற்காக நாம் அனுமதியினைப் பெற்று அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மே மாதம் 15 ஆம் தேதி அளவில் அந்தப் பணிகள் முடிவடையும் என்று நாங்கள் கருதுகிறோம்.

முற்பகல் 11-00

உடற்கல்வி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலும்கூட இந்த மானியக் கோரிக்கையிலேகூட நான் அறிவித்திருக்கிறேன். உடற்கல்வி ஆசிரியர்கள் தேவையானவர்கள் தகுந்த முறையில் நியமிக்கப் படுவார்கள், கலை ஆசிரியர்களையும் தேவைக்கேற்ப நியமிப்பதிலே எந்தவிதமான தயக்கமும் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5912, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தொலை தூரப் பயணம் செய்யும் (அல்ட்ரா டீலக்ஸ்) சொகுசு பேருந்துகளில் பயணிகளைக் கவரும் வண்ணம் வசதிகளை ஏற்படுத்தி அதிகப் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5991, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் சென்னை வரை சொகுசு மிதவைப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6027, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து செல்லும் அனைத்துப் பேருந்துகளையும் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6061, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள முக்கியக் கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லாமல் இருக்கின்றபடியால் கூடுதலாகப் புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6118, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 700 பழைய பேருந்துகளை ஏலம் விட்டு புதிய பேருந்துகளை வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6268, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவிலில் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6305, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேருந்துகளில் படிக்கட்டுப் பயணத்தைத் தடுக்கவும் தவிர்க்கவும் அனைத்துப் பேருந்துகளிலும் தானியங்கிக் கதவுகள் பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6367, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6404, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6431, திரு. ல. ராதாகிருஷ்ணன்.



**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி-கடலையூர், மாலை 5-40-க்குச் சென்று வந்த தடம் எண் 19-பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதால் பள்ளிக் குழந்தைகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். நிறுத்தப்பட்ட தடம் எண் 19 பேருந்தை மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தில் மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6541, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட கோடங்கிபட்டி, செல்லப்பம்பாளையம், கொங்கநாட்டான் புதூர், சங்கராயபுரம் ஆகிய கிராமங்களுக்கு உடனடியாகப் போக்குவரத்து வசதி செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6641, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6683, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, படவீடு பேரூராட்சி, குமாரபாளையம்-சங்ககிரி செல்லும் டவுன் பஸ் அல்லிநாயக்கன்பாளையம் வழியாகச் சென்ற வழித் தடம் நின்று நிறுத்தப்பட்டுவிட்டதை, மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6739, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு பேரூராட்சியை மையமாகக் கொண்டு ஒரு புதிய பணிமனை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7096, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7129, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மற்றும் சிவகிரி எல்.எஸ்.எஸ். பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7267, திரு. வே. மாரிமுத்து.



**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாங்கண்ணி-திருப்பதி விரைவுப் பேருந்து இயக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7332, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டியிலிருந்து கல்லூத்து பெருமாள்பட்டிக்குச் செல்லும் பேருந்தை காட்டுப்பட்டி, பொம்மன்பட்டி வழியாக ரெட்டியபட்டிக்கு இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத தீர்மானம் எண் 7435, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7578, திரு. த.-அ. மேகநாதன்.

**திரு. த.-அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் தொகுதியிலிருந்து திருப்பூருக்கு புதிய விரைவுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7666, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் நடக்கும் விபத்துகளைத் தடுக்கும்பொருட்டு, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள், விதிகளுக்குப் புறம்பாக வாகனம் ஓட்டுபவர்களுக்கு உடனடியாகத் தண்டனை வழங்குவதற்கு டாக்டர், நீதிபதி, காவல் துறை, போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அடங்கிய ஒரு (மொபைல் நீதிமன்றம்) நடமாடும் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7695, திரு. வீர. இளவசரன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் பல கிராமங்களுக்குப் புதிதாக பஸ் வசதி செய்வது குறித்தும், மேலும், பல கிராமங்களுக்குப் பஸ் வசதியை நீட்டித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7708, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையத்திலிருந்து புஞ்சை புளியம்பட்டி வரை பகத்தூர், எஸ். புங்கம்பாளையம் வழியாக புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7893, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேங்காய்ப் பட்டணத்திலிருந்து கருங்கல்—குளச்சல் வழியாக மருத்துவக் கல்லூரி இருக்கும் ஆசாரிப்பள்ளத்திற்குப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8223, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் (பரமத்தி-வேலூர் வட்டம்) - சென்னை அரசு விரைவுப் போக்குவரத்து வழித்தடத்தில் ஓடும் பழைய பேருந்தினை மாற்றி புதிய பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8348, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம், ஜமுனா மாத்தூர், சேத்துப்பட்டு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அடங்கியுள்ளன. எனவே, இந்தப் பகுதி மக்களின் நலன் கருதி கலசப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்து பணிமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8413, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அதிகமான வாகனங்கள் உள்ள பல்லடம் பகுதியில் ஆர்டிஓ. அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9503, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்று வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சிதம்பரம்-சேத்தியாத்தோப்பு வழித்தட எண் 26 பேருந்தினை மீண்டும் பழைய வழித்தடத்தில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8656, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதி, திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்திற்கு விழுப்புரத்திலிருந்து கரப்பாக்கம், செம்மார்-டி.வி. நல்லூர், பெரியசெவலை வரை புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8776, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு-பழனி பேருந்துகளை வெள்ளோடு, சென்னிமலை வழியாக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9276, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9302, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் உள்ள பொன்னேரி முதல் காட்டூர் தடம் 95டி பேருந்து நீண்ட நாட்களாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை மீண்டும்

இயக்க வேண்டியது குறித்தும், ஜி41 போன்ற தடம் எண் உள்ள பேருந்துகளை இயக்க அரசு முன்வர வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9343, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9449, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவிநாசி தொகுதியில் காலை, மாலை நேரங்களில் 1. மேட்டுப்பாளையம்-அன்னூர் அவினாசி வழியாக திருப்பூர் 2. புளியம்பட்டி-அவினாசி வழியாக திருப்பூர் 3. நம்பியூர்-அவினாசி வழியாக திருப்பூர் 4. நம்பியூர்-வடுகபாளையம் அவினாசி வழியாக திருப்பூர் 5. கருமத்தம்பட்டி-அவினாசி வழியாக திருப்பூர் 6. புளியம்பட்டி-குட்டகம் அவினாசி வழியாக திருப்பூர் ஆகிய வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9482, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, எத்திலோடு பஞ்சாயத்தில் 18 ஊர்களில் உள்ள மாணவ, மாணவிகள் நிலக்கோட்டை சென்றுதான் படிக்க வேண்டியிருப்பதால் மேற்கூறிய 18 ஊர்களுக்கும் பஸ் வசதி முற்றிலும் பற்றாக்குறையாக உள்ளன. எனவே, 18 ஊர்களுக்கும் பஸ்



வசதி கூடுதலாக ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9556, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் பல கிராமங்களுக்கு இதுவரை போக்குவரத்து வசதி செய்து தரப்படவில்லை. எனவே, போக்குவரத்து வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9637, திருமதி ஜி. லதா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9726, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரிகளுக்குச் செல்ல பேருந்துக் கட்டணத்தைப் பாதியாகக் குறைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9630, முனைவர் மு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9640, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து எர்ணாகுளத்திற்கு அரசு விரைவுப் பேருந்து வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9894, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்ககிரியிலிருந்து சுண்ணாம்புக்குட்டை, காவடிக்காரனூர் வழியாக கொங்கணாபுரம், ஒண்டிப்பனை, அ.புதூர் வழியாக இளம்பிள்ளைவரை புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9950, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், துங்கபுரத்திற்கு குன்னம்— மருதையான் கோவில் வழியாகப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9986, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டை சீவலப்பேரி வழியாக கலியாவூருக்கு புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10019, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியில் இயக்கப்படுகின்ற அனைத்து நகரப் பேருந்துகளும் மிகவும் மோசமான நிலையிலுள்ளதை மாற்றி, புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10062, திரு. எஸ். இராசசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10343, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரிலிருந்து புதுவைக்கு திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம் வழியாக புதிய பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10494, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு-தாம்பரம்-அசோக்பில்லர் தடம் வழியாக காலை அலுவலக நேரத்திற்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10780, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையிலிருந்து சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்வரை பெண்கள் மட்டும் பயணம் செய்யும் ஒரு நகரப் பேருந்தை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10929, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி, ஆலத்தம்பாடி விக்கிரபாண்டியம் வழியாக மன்னார்குடிவரை பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11540, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, கேரளாவில் இருந்து வரும் கேரள அரசுப் பேருந்துகள் மிக வேகமாக வருவதால் விபத்துகள் நேரிட்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதால் அதனைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11621, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளித்து பெண்களே பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,00,03,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம், போக்குவரத்து ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு கோரிக்கைகள்மீதும் சேர்ந்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, 15 நிமிடங்கள் பேசலாம்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வம், தமிழக மக்களின் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ராஜகிரி என்ற குக்கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராக, மாணவர் அணிச் செயலாளராக, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணித் துணைத் தலைவராக, தஞ்சை மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவராக, சுமார் 12 ஆண்டுகாலம் பாபநாசம் ஒன்றியக் கழகச் செயலாளராக என்னை நியமனம் செய்து, வரலாறு படைத்திட்ட

@ 511 முதல் 563 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



இந்த மாமன்றத்தில் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைமீது நானும் பேசுவதற்கு, தேர்தலில் போட்டியிட அனுமதியளித்து, நான் வெற்றிபெற கடுமையாக உழைத்து இந்த மாமன்றத்தில் அமரச் செய்த இதய தெய்வம், ஏழையெளிய மக்களின் காவல் தெய்வம், சமூக நீதி காத்த வீராங்கனை, கருவறையிலிருந்து கல்லறை வரை உதவக்கூடிய, வரலாறு படைக்கும் அரிய பெரிய உலகம் போற்றும் உன்னத உயர்ந்த திட்டம், ஏழை விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்க்கும் திட்டமான உழவர் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், இதயம் காப்போம் திட்டம், ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் திட்டம், ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டம், விவசாயத்தில் பசுமைப் புரட்சித் திட்டம், நீண்டகாலமாகத் தீர்க்க முடியாமல் இருந்த சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் தாகம் தீர்த்த புதிய வீராணம் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் பொறிக்கக்கூடிய திருக்கோயில், தர்கா மற்றும் தேவாலயங்களில் அன்னதானத் திட்டம் போன்ற அற்புதமான திட்டங்களை அறிவித்ததோடு அல்லாமல் செயல்படுத்திக் காட்டிய சிங்கநிகர் தலைவி, வரலாற்றின் நாயகி, புரட்சித் தலைவி, எங்கள் குல விளக்கு, தமிழகத்தின் ஒளிவிளக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சிம்ம சொப்பனமாய் விளங்கும் தங்கத் தாரகை, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

என்னைப் பெற்றெடுத்த வணக்கத்திற்குரிய தாய் பொன்னம்மாள், தந்தை சி. ராமு அவர்களையும் வணங்குகின்றேன். தாய், தந்தை என்னை பெற்றார்கள், வளர்த்தார்கள், அது அவர்களின் கடமை. ஆனால் இந்தத் தமிழகத்தின் பார்வையில் படும் அளவிற்கு என்னை அடையாளம் காட்டி முகவரி தந்த எங்கள் குல தெய்வம், அம்மா அவர்களுக்கு, என் உயிர் உள்ளவரையும் நன்றிக் கடன் பட்டவனாக, என்னுடைய உயிரையும் பணயம் வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் ஆணைகளைச் செய்து முடிக்கின்ற உண்மை விசுவாசியாக இருப்பேன், இறப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அம்மா அவர்களின் ஆட்சி ஏற்பட வேண்டும்; ஏழையெளிய மக்களின் வாழ்வில் ஒளி பிறக்க வேண்டும்; வாழ்வு வளம்பெற வேண்டும் என்று எனக்கு வாக்களித்த பாபநாசம் சட்டமன்ற

வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்காகப் பாடுபட்ட கழக நிர்வாகிகளுக்கும், கழக அடிமட்டத் தொண்டர்களுக்கும், அயராது பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாக இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று அந்த மக்களுடைய வாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறுபான்மை மக்கள் நலன் கருதி, குறிப்பாக, இஸ்லாமிய மக்களின் நலன் கருதி, இடஒதுக்கீடு வேண்டி ஒரு கமிஷன் அமைத்தார்கள். அதற்கு இந்த அரசு முக்கியத்துவம் தராமல் தள்ளி வைத்துள்ளது. எனவே கமிஷனின் முழு நடவடிக்கைகளையும் உடனே அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கும்பகோணத்தைத் தலைமையகமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்கப்பட வேண்டும். என்னுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதி பெரும்பாலும் விவசாயத்தைச் சார்ந்த பகுதியாகும். இங்கு விவசாயம் சம்பந்தப்பட்ட வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். தொழில் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக கயிறு தொழிற்சாலை மற்றும் குடும்பம் சார்ந்த சிறு தொழில்கள் தொடங்க அரசு உதவ வேண்டும்.

*முற்பகல் 11-25*

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். குறிப்பாக, ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டினைக் கருதி நிலம் கையகப்படுத்தும்போது விலை நிர்ணயத்தை அதிகப்படுத்தி நிலம் ஆர்ஜிதம் செய்து ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

பழுதடைந்துள்ள ஆதிதிராவிட மக்களின் தொகுப்பு வீடுகளைப் பழுது பார்க்க அதிக நிதி ஒதுக்கிட வேண்டும். பாபநாசம் தொகுதிக்குட்பட்ட பழுதடைந்துள்ள பழைய நகரப் பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை விட வேண்டும். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி புதிய வழித் தடங்களில் பேருந்துகளை விட வேண்டும். தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நகரப் பேருந்து தடம் எண் 43, 70, 48ஏ, 48 பி, 14, 16, 42, 37, 10ஏ, 68 ஆகிய நகரப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்பட வேண்டும்.



என்னுடைய பாபநாசம் தொகுதியில் உள்ள அய்யம்பேட்டை பேரூராட்சியிலிருந்து சென்னைக்கு கும்பகோணம் வழியாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் ஒரு அல்ட்ரா டீலக்ஸ் பஸ் விட வேண்டும். அய்யம்பேட்டை, சக்கராப்பள்ளி, வழுத்தூர், பண்டாரவாடை உள்ளிட்ட சுமார் 300 கிராமங்களிலிருந்து தனியார் பேருந்து மூலம் வெளிநாடு செல்பவர்களும், குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்கள் மற்றும் அலுவல் காரணமாக சென்னை செல்லும் மக்களும் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, இதில் தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் அல்ட்ரா டீலக்ஸ் பேருந்து விடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கும்பகோணத்திலிருந்து அரியலூர் புகைவண்டி நிலையத்திற்கு வர்த்தகர்களின் நலன் கருதி விடியற்காலை 5-00 மணிக்கு பாபநாசம் வழியாக அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாகப் பேருந்து இயக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் இரவு 10-00 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு இசி.ஆர். ரோடு வழியாக, மயிலாடுதுறை வழியாக குடந்தைக்கு அல்ட்ரா டீலக்ஸ் பஸ் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சைக்கும் கும்பகோணத்திற்கும் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதற்கு இடையில் அதிகமான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது. அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, அவசர சிகிச்சை தேவைப்படுகிறது. பிரசவத்திற்காக அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, தஞ்சைக்கும், கும்பகோணத்திற்கும், நடு மையமாக உள்ள பாபநாசம் தாலுகா தலைநகரமாக உள்ள பாபநாசத்தில் அரசு மருத்துவமனை உள்ளது. அதில் போதிய மருத்துவர்கள், பெண் மருத்துவர்கள் இல்லாமலும், போதிய மருந்துகள் இல்லாமலும், அங்கே scan வசதியும் இல்லாமலும், போதிய பிரசவ படுக்கை வசதியும் இல்லாமலும் உள்ளது. மேலும், பழுதடைந்து பழைய கட்டடமாக உள்ளது. ஆகவே, இவை அனைத்தும் உடனடியாகச் சரிசெய்யப்பட வேண்டும். அதேபோல், அய்யம்பேட்டை அரசு மருத்துவமனை, முருகனின் அறுபடை வீடான சுவாமிமலை அரசு மருத்துவமனை, பாபநாசம் தொகுதி, கும்பகோணம் தாலுகா சோழபுரத்திள்ள அரசு மருத்துவமனை ஆகியவற்றிலும் மேற்கண்ட நிலைதான் உள்ளது. எனவே, கவலைக்குரிய இந்த

நிலையைப் போக்கிட வேண்டும். சுகாதார நிலைய மருத்துவர்கள் தங்குவதற்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

மக்களின் அவசியத் தேவையான குடிநீர் வழங்கப்பட வேண்டும். அறிவிக்கப்படாத மின்சார வெட்டு உள்ளது. எனவே, மின்சாரம் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பாபநாசம் வட்டம், கபிஸ்தலத்தில் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை சென்ற மழை வெள்ளத்தால் இடிந்துவிட்டது. அதைப் புதிதாகக் கட்டித் தர வேண்டும்.

கபிஸ்தலத்தில் வாடகைக் கட்டடத்தில், அதுவும் பழுதடைந்துள்ள காவல் நிலையத்திற்குப் புதிதாக சொந்தமாக அரசு காவல் நிலையம் கட்டப்பட வேண்டும்.

பேரூராட்சிகளில் சுகாதார வளாகங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டித்தரப்பட வேண்டும்.

பாபநாசம் பகுதி, மிகவும் நெருக்கடியான மக்கள் நெரிசல் உள்ள பகுதியாகும். போக்குவரத்து மிகவும் தடைப்படுகின்றது. எனவே புறவழிச் சாலை ஏற்படுத்தித் தரவேண்டும்.

தஞ்சை மாவட்டம் நீலத்தநல்லூர், பெரம்பலூர் மாவட்டம் மதனத்தூர் இங்கே கொள்ளிடம் பாலம் அமைக்கும் பணி உடனே தொடங்க வேண்டும்.

கும்பகோணம்-தஞ்சை சாலையிலுள்ள ராஜகிரியிலிருந்து நான்கு ஆற்றுப் பாலம், திருமலைராஜன், குடமுருட்டி, அரசலாறு, காவிரிப் பாலத்தைக் கடந்து, திருவையாறு-கும்பகோணம் சாலைப் பகுதிக்குச் செல்லக்கூடிய பாலங்கள் மக்கள் நடக்கும் பாலங்களாக உள்ளன. அவை, பஸ் வாகனங்கள் செல்லக்கூடிய அளவிற்கான பாலங்களாக அமைக்கப்பட வேண்டும்.

எங்கள் அம்மா ஆட்சியில் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனே குடும்ப அட்டை வழங்கப்பட்டது. ஆனால், இன்றைய அரசு, ஒன்பது மாதங்களுக்கு மேலே ஆகியும் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கவில்லை. உடனே குடும்ப அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

சோழபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட வேண்டும்.



பழுதடைந்துள்ள பழைய பள்ளிக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும்.

விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி விவசாயக் கடன் வழங்கப்பட வேண்டும்.

தாட்கோ மூலம் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு, தேசிய வங்கிகள்மூலம் கடன் உதவி செய்ய மறுக்கப்படுகின்றது. வங்கிக் கடன் பெற உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். வீடு கட்டும் சங்கம்மூலம் மக்களுக்குக் கடன் வழங்கப்பட வேண்டும்.

பாபநாசம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், இப்போது பேரூராட்சி திருமண மண்டபத்தில் இயங்கி வருகிறது. எனவே, புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

பாபநாசம் தொகுதியில், வெற்றிலை சாகுபடி நீண்டகாலமாக அதிக அளவில் செய்யப்பட்டு வருகிறது. இதற்குச் சரியான சந்தை வசதியில்லாத காரணத்தால் விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். எனவே, சந்தை வசதி செய்துதர அரசு முன் வரவேண்டும்.

மேலும், பத்திரிகைத் துறையில் உள்ளவர்கள், நிருபர்கள், தொலைக்காட்சிச் செய்தி சேகரிப்பாளர்கள் குடும்ப நலன் கருதி கீழ்க்கண்டவற்றை அரசு செயல்படுத்திட வேண்டும்:

மகன்கள், மகள்கள் படிப்பதற்காக தொழில் கல்வி, மருத்துவம், மற்றும் பொறியியல் மேல் படிப்புப் படிப்பதற்கு இடஒதுக்கீடு செய்து, சலுகையும் தந்து அதற்கான கட்டணத்தை அரசு ஏற்க வேண்டும்.

அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்தில் செல்ல இலவச பயண அட்டை வழங்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியரின்மூலம் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். பணிப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். மானியத்துடன் வீடு கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறை அல்லது வங்கியின் மூலம் கடன் உதவி வழங்கப்பட வேண்டும்.

பத்திரிகையாளர், தொலைக்காட்சி செய்தி சேகரிப்பாளர்களை அழைத்து அரசு அதிகாரிகள் தொகுதி வளர்ச்சி விரிவாக்கக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

மக்களின் அத்தியாவசியத் தேவையான எண்ணெய், பருப்பு, மிளகாய், புளி போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் அனைத்திற்கும் வரலாறு காணாத அளவிற்கு விலைவாசி உயர்ந்து கொடிகட்டிப் பறக்கின்றது. இந்த விலைவாசி ஏற்றத்தினைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிமென்டின் விலை எண்ணிப் பார்க்க முடியாத நிலையில் உள்ளது. இதைத் தடுத்து எங்களின் தங்கத் தலைவி அம்மா ஆட்சியில் இருந்ததுபோல், விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போது திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுகாவில் உள்ள அன்னுக்குடி போன்ற எட்டு ஊராட்சிகளை முன்பிருந்ததைப்போல உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி பாபநாசம் தாலுகாவில் இணைத்து தஞ்சை மாவட்டத்தில் சேர்க்க வேண்டும்.

*முற்பகல் 11-30*

ஏழைகளின் ஏந்தல் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்திட்ட அம்மா அவர்களின் ஆட்சியில் போர்க்கால அடிப்படையில் வெள்ள நிவாரணங்கள் வழங்கப்பட்டன. தமிழகக் கடற்கரையில் சுனாமி தாக்கியபோது, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது.

அனைத்து மாநில லாட்டரிச் சீட்டை ஒழித்து ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்தார் எங்கள் அம்மா.

நாட்டு மக்களுக்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்கும் வாழ்பவர் எங்கள் அம்மா. காவிரி டெல்டா மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைக்காக காவிரி நதிநீர் வேண்டி அம்மா அவர்கள் தன் உயிரைத்துச்சமென மதித்து நான்கு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து காவிரி நீர் பெற்றுத் தந்தவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் பதிவேட்டில் பதிய வேண்டுமென உண்ணாவிரதம் மேற்கொண்டார் எங்களின் அம்மா. முல்லைப் பெரியாறு, பாலாறு பிரச்சினைக்கு முதல் குரல் கொடுத்தவர் எங்கள் அம்மா.

இந்திய நாட்டைக் காப்பதோடு மட்டுமல்லாமல் இந்தியப் பெருநாட்டின் வளர்ச்சிக்காகவும் போராடியவர் எங்கள் அம்மா. இந்திய-அமெரிக்கா அணு ஆயுத ஒப்பந்தத்தினால் ஏற்படும் பாதிப்பு, அழிவு, இழப்புகளை எடுத்துக்கூறி முதல் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்



எங்கள் அம்மா. அன்னிய நாட்டவரின் ஆதிக்கத்தை எதிர்த்தவர் எங்கள் அம்மா.

எங்கள் நெஞ்சில் மட்டுமல்லாமல் ஏழையெளியவர்களின் நெஞ்சிலும் ஏந்தலாகக் குடிகொண்டிருக்கும் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் எங்கள் சந்தனத் தலைவன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலவச சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தபோது, அதை, தட்டு ஏந்தி பிச்சை எடுக்கும் திட்டம் எனக் கொச்சைப்படுத்தி, நிறைவேற்ற முடியாத திட்டமெனக் கூறியபோது எம் பாட்டுடைத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற மடி ஏந்தியாவது நிதி பெற்று இதனைத் தொடர்ந்து நிறைவேற்றுவேன் என்று சொன்ன புரட்சித் தலைவர் திட்டத்தைத் தொடர்ந்துதான், முட்டை போடுகிறேன் என்று வானளாவப் பேசுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இலவச முட்டை போடுகிறேன் என்று கூறியவர்கள் அம்மா நிறைவேற்றிய, கேபிள் டி.வி.-க்களை அரசுடைமையாக்கும் திட்டத்தை நிறைவேற்றி எல்லோருக்கும் இலவச கேபிள் டி.வி. இணைப்பு கொடுக்கவில்லையே? இதிலிருந்து பார்க்கையில் விவசாயிகளுக்காக, ஏழையெளிய தமிழக மக்களுக்காக ஆட்சி நடத்தியவர் புரட்சித் தலைவி அம்மா என்பது குன்றின் மேல் இட்ட விளக்குபோல் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

கடன் தள்ளுபடி என்று தம்பட்டம் அடித்துக்கொள்கின்ற இந்த அரசுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடன் தள்ளுபடி என அறிவிப்புச் செய்து, நாளிதழ்களில் சாதனையாக அறிவித்தும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களில் பெயர்ப் பட்டியலை வைத்தும் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்த தொகையை கடிதம்மூலம் தெரியப்படுத்தியும் உள்ளீர்கள். ஆனால், தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் உள்ள ஆதனூர் கூட்டுறவுச் சங்கம், கூனஞ்சேரி கூட்டுறவுச் சங்கம், உமையாள்புரம் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கபிஸ்தலம் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்றுள்ளவர்கள் கடன் தள்ளுபடி செய்துள்ள அறிவிப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால், விவசாயிகள் உற்பத்தி செய்த அரைவைக் கரும்பை திருமண்டங்குடியில் உள்ள திருஆரூரான் சர்க்கரை ஆலைக்கு அனுப்பிய விவசாயிகளுக்கு திருஆரூரான் சர்க்கரை ஆலை தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்புகிறார்கள். தொகையைப் பெற்றுக்கொண்ட சங்கங்கள் உரிய விவசாயிகளுக்குத் தராமல் தள்ளுபடி செய்ததாகக்கூறி கடனில் வரவு வைத்துக்கொண்டார்கள். விவசாயிகள் அனைவரும் ஏன் பணத்தைத் தராமல் தள்ளுபடி செய்யப்பட்ட கடனில் வரவு வைத்தீர்கள் எனக்

கேட்டபோது, அரசு அறிவித்ததோடு சரி, இதுவரை அதற்கான பணத்தை அனுப்பவில்லை, எனவே, தர இயலாது எனக் கூறிவிட்டார்கள். அதன்பிறகு எல்லா விவசாயிகளும், பெண்கள் உள்பட 26-3-2007 அன்று தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். 27-3-2007 அன்றும் உண்ணாவிரதம் தொடர்கிறது, போலீஸ் குவிக்கப்படுகிறது; பதற்றமான சூழ்நிலை உருவாகிறது. இதுசம்பந்தமாக எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு அண்ணன் அவர்களிடமும், மாண்புமிகு எங்களுடைய கொறடா அண்ணன் அவர்களிடமும் நிலைமையைக்கூறி அவர்களின் அனுமதியோடு இந்த அவையில் பேச ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் 27-3-2007-ல் அளித்தேன். அதைப்பற்றி பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை. ஆனால், காவல் துறை, போராட்டம் நடத்தியவர்களைக் கைது செய்து மாலையில் விடுவித்தார்கள். இதுதான் கடன் தள்ளுபடி செய்த மாபெரும் சாதனை. சொன்னதைச் செய்பவர் எங்களின் அம்மா, நடக்காததைச் சொல்வதுதான் இன்றைய அரசின் நிலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் அம்மா அவர்களின் ஆட்சியில் போக்குவரத்துத் துறை ஒரு பொற்காலத் துறையாகத் திகழ்ந்தது. ஆனால், இன்று போக்குவரத்துத் துறை போகாத துறையாக உள்ளது. போக்கு மட்டும்தான் இருக்கின்றதே தவிர, வரத்துதான் இல்லை. பலதடவை பன்மடங்கு டீசல் விலையை உயர்த்தினாலும் மக்களின் நலன் கருதி பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் போக்குவரத்தை மிக உன்னதமாக, சிறந்த முறையில் நடத்தியவர் எங்கள் அம்மா.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஆங்காங்கே பேருந்துகள் பழுதடைந்து நின்று கொண்டிருக்கும். சில இடங்களில் பேருந்து என்ஜின் புகைந்துகொண்டிருக்கும். பேரீச்சம்பழம் விற்பவர்கள், பழைய இரும்பு வாங்குபவர்கள் முட்டுகட்டி இருக்கும் பேருந்துகளைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். ஆனால், எங்களின் அம்மா ஆட்சியில் பொதுமக்கள் பேருந்தின் அழகைப் பார்த்து தனியார் பேருந்துகளோடு போட்டியிடுகின்ற அளவுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், Body கட்டவில்லை என்கிறார். (குறுக்கீடு) சரி, பேசுங்கள். Body கட்டவில்லை என்கிறார், உங்கள் பதில் என்ன?



**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய அம்மா ஆட்சியிலே அழகழகான பேருந்துகள், மக்கள் அவற்றைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள் என்று அவர் சொல்கின்றார். அப்படி அம்மா ஆட்சியில் மக்கள் சுற்றிச் சுற்றி வந்து, வாங்கப்பட்டவை 5,384 பேருந்துகள். ஆனால், இன்றைய தினத்திலே, ஆட்சிக்கு வந்து 12 மாத காலத்திற்குள் வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 5,600. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று பேசுங்கள். அதைப்பற்றி ஒன்றுமில்லை. எங்களுடைய பேருந்துகள் நன்றாக இருக்கின்றன என்று சொல்லுங்கள். ஆனால், நீங்கள் நன்றாக இல்லை என்று சொன்னால், பழைய வண்டிகளைப் பெயின்ட் அடித்தார்கள் என்று சொன்னால், அது சரியில்லை. வாருங்கள், ஓரிடத்திலே போய்ப் பார்ப்போம். நீங்கள் ஓர் சட்டமன்ற உறுப்பினர். நீங்கள் பேசுகின்றபோது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Body கட்டினீர்களா, இல்லையா, அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, விடுங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம்.

முற்பகல் 11-35

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நிலைமையை நேரடியாக விளக்குகின்றேன். தற்போதுள்ள போக்குவரத்து நிலையைப் பார்க்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொந்த ஊருக்குப் போவதற்கு கோயம்பேடு மத்தியப் பேருந்து நிலையம் செல்ல வேண்டும். அதற்கு கலைவாணர் அரங்கம் நிறுத்தத்திலிருந்து 27B என்ற எண் உள்ள மாநகரப் பேருந்தில்தான் செல்ல வேண்டும். பேருந்தில் ஏறியவுடன் இடம் கிடைப்பதில்லை. யாராவது இறங்குவதற்கு எழுந்தவுடன் அதில் போய் அவசர அவசரமாக உட்கார்ந்தால், இருக்கை இருக்குமிடத்தில் உள்ளேபோய்விட்டேன். காரணம், அந்த இடத்தில் இருக்கை இல்லாமல் வெறும் இரும்பு பிரேம் மட்டுமே இருந்தது என்பதைத் தெள்ளத்தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேண்டுமென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 27B பஸ்சினை வந்து பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது உங்களுடைய ஆட்சியிலே நீங்கள்

சொன்னீர்களே, Body என்று சொன்னீர்களே, கூண்டு கட்டிய வண்டி (சிரிப்பு) மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு உங்களுடைய ஆட்சியில் 2001-2006 வரை வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 360. எங்களுடைய **முதல்வர் அ**வர்கள் இந்த ஆண்டு, இந்த ஆறு மாத காலத்தில் மாநகரப் போக்குவரத்துக்கு மட்டும் வாங்கப்பட்ட பேருந்துகள் 480. அந்த 480 பேருந்துகளும் இப்போது Body கட்டி ரோட்டில் போய்க் கொண்டிருக்கின்றன. நீங்கள் உங்கள் ஆட்சியில் வாங்கிவிடப்பட்ட வண்டியில் ஏறி, அதில் சீட் இல்லை என்று சொன்னால் அதற்கு நாங்கள் என்ன செய்வது? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு Hindu பத்திரிகையில்கூட Metro Bus-சினைப் பற்றி பாராட்டி ஒரு பெரிய கட்டுரையே வந்திருக்கிறது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் வாங்கிய பேருந்திலே நீங்கள் ஏறிச் சென்றீர்கள் என்று சொன்னார்கள். பேருந்திலே குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைய வேண்டியது அமைச்சருடைய கடமையா இல்லையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஏற்கெனவே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர். சென்னை மாநகரத்தில் மொத்தம் 2,800 பேருந்துகள் இருக்கின்றன; Spare Bus-களோடு சேர்த்து. 2,400 பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. கடந்தகாலத்தில் நாள் ஒன்றுக்கு 140, பேருந்துகள் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்த பேருந்துகள் இப்போது எடுத்திருக்கின்ற நடவடிக்கையின் காரணமாக Break down என்று வருவது வெறும் 60 பேருந்துகள்தான். ஏதோ ஓர் இடத்திலே, ஒரு பேருந்திலே 2,400 பேருந்துகளில் ஓர் இடத்திலே Seat இல்லை என்று சொன்னால் மறுநாளே அதற்கு Seat போட்டிருப்பார்கள். Seat இல்லாததை உடனடியாக ஒரு பெரிய குறையாக நீங்கள் சொல்வது சரியல்ல. உங்களுடைய ஆட்சியிலேதான் ஒரு பெரிய பொந்து, அதிலே குழந்தை உள்ளே விழுந்ததாகச் செய்திகள் வந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை நாங்கள் குற்றம் சொல்லமுடியுமா? 2,400 பேருந்துகளிலே தினந்தோறும் maintenance என்பது, ஒரு நாள் repair ஆனால் மறுநாள் அதைச் சரிசெய்திருப்பார்கள். அதுதான் நிலைமை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள்.



**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்வது, அந்த மாதிரி இருந்ததா இல்லையா என்பதுதான் கேள்வியே தவிர, சரிசெய்திருப்பீர்கள். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. இருந்த நிலைமைகளைக் கூறுகின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்ட மின்வெட்டைப் போன்று அறிவிக்கப்படாத பேருந்துக் கட்டண உயர்வை இந்த அரசு தற்போது செயல்படுத்தி வருகிறது. M சர்வீஸ் என்றும், Air Bus Service என்றும், தாழ்தளப் பேருந்து என்றும் சொல்லி வடிவத்தை மட்டும் மாற்றி. . .

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டிற்கு தயவுசெய்து நீங்கள் பொறுத்தருள வேண்டும். கன்னிப் பேச்சு, அதிலே குறுக்கிடக்கூடாது என்றுதான் நான் இருந்தேன். இருந்தாலும் முழுக்க முழுக்கத் தவறான தகவல்களை இந்த அவையில் தந்துகொண்டிருக்கிறார். நீங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்று கருதித்தான், நீங்கள் போட்ட அரசாணையை நான் இங்கே எடுத்து வந்திருக்கிறேன். இவையெல்லாம் உங்கள் ஆட்சியிலே போடப்பட்ட அரசாணைகள். (அவையில் சில தாள்களை எடுத்துக் காட்டினார்) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களிடம் வேண்டுமானால் தருகிறேன். பேருந்துக் கட்டணத்தை M service என்று வருகிறபோது, அதிலே 50 காசு கூடுதலாக ஏற்றிக்கொள்ளலாம் என்று அனுமதி அளித்ததும் நீங்கள்தான். அதிலே Special service ஆக ஆக்கவேண்டும் என்று சொன்னால், இரண்டு ரூபாய் சாதாரணக் கட்டணம்; ஒரு Stage-க்கு இரண்டு ரூபாய் என்றிருந்ததை 2.50 ரூபாயாக ஆக்கி, அதை Special service என்று சொன்னால் ஐந்து ரூபாயாக ஆக்கிக்கொள்ளலாம் என்று சட்டம் போட்டதும் நீங்கள்தான். ஒவ்வொன்றுக்கும் அரசாணை இங்கு இருக்கிறது. ஏற்கெனவே அந்தப் பேருந்துகள் விடப்பட்டன, குற்றம் சொல்லவேண்டும் என்று இதைச் சொல்லவில்லை. ஆனால், அரசாணை வெளியிடப்பட்டது உங்களுடைய ஆட்சியிலே. நீங்கள் அதைச் செயல்முறைப்படுத்தவில்லை. காரணம், நீங்கள் புதிய பேருந்துகளை வாங்கவில்லை. பழைய பேருந்தை வைத்தே நீங்கள் கட்டணம் ஏற்றினால் எந்த மக்கள் ஏறுவார்கள்? இப்போது உங்களுடைய அந்த அரசாணைகளை புதிய பேருந்துகள் மூலம் நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறோம். அதுதான் நிலைமை. நாங்கள் ஏற்றினோம், நாங்கள் ஏற்றினோம் என்று நீங்கள் தயவுசெய்து சொல்லாதீர்கள். முழுவதற்கும் அரசாணைகள் வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, M Service, L.S.S. என்ற பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கொரு வர்ணத்தைப் பூசி இருக்கிறார்கள், மஞ்சள் வர்ணம். அதிலே நான் பேச விரும்பவில்லை. இருந்தாலும்கூட, 2 ரூபாயிலிருந்து 2.50 ரூபாயாக ஏற்றியது, அதற்கான ஆணை அப்போது பிறப்பிக்கப்பட்டிருந்தது என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது அப்படிப்பட்ட நிலை அல்ல. 2.50 ரூபாயிருந்தால் 5 ரூபாய், 7.50 ரூபாய் இருந்தால் 15 ரூபாய் என்று, ஏற்றியிருப்பதை இந்த நாட்டு மக்களே அறிவார்கள்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, M Service என்பதற்குத்தான் நீங்கள் சொன்னது ரூ.2.50-லிருந்து ரூ.5/- Special Service-க்கு நீங்களே சட்டம் போட்டிருக்கிறீர்கள். இதைப்போல 2 மடங்குக் கட்டணம் ஏற்றிக்கொள்ளலாம் என்று உங்கள் ஆட்சியிலே நீங்கள் போட்ட G.O.–அரசாணை இங்கே இருக்கிறது. (குறுக்கீடுகள்) வேண்டுமானால் ஆளுக்கு ஒரு copy எடுத்து உங்கள் கைகளில் கொடுக்கிறேன். என்னிடம் அரசாணையை வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன். நீங்கள் அரசாணை இல்லாமல் (குறுக்கீடுகள்) . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் முதலிலே 2 ரூபாயிலிருந்து 2.50 ரூபாய் ஏற்றினோம் என்று சொன்னார். இப்போது இரண்டு மடங்காக ஏற்றியிருக்கிறோம் என்று ஒத்துக்கொள்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசு ஆணையைச் சொல்கிறேன். ஒன்று L.S.S., நீங்கள் உங்கள் ஆட்சியிலே போட்டது L.S.S. அதற்குப் பிறகு M Service., L.S.S. என்று வருகின்றபோது, 50 பைசா கூட்டிக்கொள்ளலாம். கூடுதலாக வாங்கலாம். M Service என்று வருகின்றபோது, இரண்டு மடங்குக் கட்டணமாக அதை வாங்கலாம். அதேபோல, நீங்கள் Special Service, நவீன சொகுசு



இரகப் பேருந்துகள் விடுகின்றபோது, ஏற்கெனவே இருக்கின்ற கட்டணத்தைப்போல, இரண்டு பங்கு வாங்கிக்கொள்ளலாம் என்று அரசாணையிலே இருக்கிறது. இதை முன்னாள் அமைச்சருக்கு நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படியே பேசிக் கொண்டு போகக்கூடாது. G.O.-வில் என்ன உங்களுக்குப் பிரச்சினை? (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், (குறுக்கீடு) G.O.-வில் பிரச்சினை இருக்க வேண்டிய அவசியம் இல்லையே! உங்கள் உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர். Sir, G.O.-வில் you cannot differ. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் எத்தனை சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது? அதைப் போன்ற பேருந்துகளின் சதவிகிதத்தைப்பற்றித்தான் நான் கேட்கிறேன். ஆனால், இப்போது உயர்த்தியிருக்கிற சதவிகிதத்தைப் பார்க்கிறபோது, பல மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான், தமிழகத்திலே, சென்னை மாநகரத்திலே வாழ்கின்ற மக்கள் இப்போதும் குறிப்பிட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் தினந்தோறும் ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 2,400. அதிலே தாழ்தளப் பேருந்துகள் 150; Yellow line, Blue line என்று ஓடுகின்ற பேருந்துகள் 110. இந்த 260 பேருந்துகளில் மட்டும்தான் இந்தக் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மற்றபடி 2,400 பேருந்துகளில் 260 போக, 2,140 பேருந்துகளில் சாதாரணக் கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. இதிலே அனைத்துப் பேருந்துகளிலுமே கட்டணம் கூடுதலாக வாங்கவில்லை. 260 பேருந்துகளில் மட்டும்தான் இந்தக் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதுவும் நீங்கள் நிர்ணயித்த அந்த பஸ் கட்டணம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய ஆட்சியிலே போடப்பட்ட அந்த ஆணை என்றாலும் இதை இவர்கள் தொடர்ந்து செயல்படுத்துகிறார்களா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்த ஆணை பிறப்பித்தார்களே தவிர, ஒருசில வழித்தடங்களில்தான் சென்றன. ஆனால், எல்லா வழித்தடங்களிலும் இப்போது செல்கின்றன. ரூ.2.50 டிக்கெட்டிற்குப் பதில் 5 ரூபாய் பெற்றுக்கொள்கிறார்கள். டிக்கெட் என் கையில் இருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ளலாம்.

*(மாண்புமிகு உறுப்பினர் கையில் பயணச் சீட்டை உயர்த்திக் காண்பித்தார்)*

இன்று சென்னை மாநகரத்தில் மட்டும் சுமார் 25 இலட்சம் ரூபாய் ஒரு நாளைக்கு அதிகமாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை இந்த அவைமுன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் சாப்பிட்டு விட்டீர்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்வதிலிருந்து, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன ஆட்சி செய்தார்களோ, அதைத்தான் இவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதைத் தெள்ளத்தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் தத்துவத்தைப் பின்பற்றி எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிற்சங்க நிர்வாகிகளையும் மற்ற ஊழியர்களையும் அவர்களுடைய தோழனாயிருந்து, ஆட்சி நடத்தினார்கள். ஆனால், இன்று தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகம், தி.மு.க.வின் அங்கமான தொழிலாளர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகளின் வசம் உள்ளது. அவர்கள் யாரை மாற்ற வேண்டும், எந்த ஊருக்கு எந்த வண்டிக்கு அனுப்ப வேண்டும் என்றாலும் தொ.மு.ச. நிர்வாகிகளைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும். எனவே M.D., G.M., B.M., போன்ற அதிகாரிகளை எடுத்துவிட்டு சங்கத் தலைவரை M.D. ஆகவும், கோட்டத் தலைவரை G.M., ஆகவும், Depot தலைவரை B.M. ஆகவும் நியமனம் செய்துவிடலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன். (குறுக்கீடு) கடைசி பக்கம் போய்விடுங்கள். அதுதான் கடகட என்று படிக்கிறீர்களே!

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து ஊழியர்களின் நலன் கருதி அவர்களுடைய பிள்ளைகள் தொழிற் கல்வி கற்க கல்விக் கண் திறந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தி.மு.க. ஆட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ்குமார். (குறுக்கீடுகள்) இல்லை, 15 நிமிடங்களுக்கு 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) முடிக்கச் சொல்லுங்கள். ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லச் சொல்லுங்கள்.

*முற்பகல் 11-45*

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 ஆண்டுகாலம் நஷ்டத்தில் இயங்கிய போக்குவரத்துத் துறையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் 497 கோடி ரூபாய் இலாபம் ஏற்படுகின்ற அளவுக்கு அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். ஆனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது அளித்துள்ள போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு மானியக் கோரிக்கை புத்தகத்தில், 8 ஆம் பக்கத்தில் 3.1 வரிசை எண்ணில் 2006-2007-ல் 303 கோடி ரூபாய் நஷ்டம் என்றும், 2007-2008-ல் 497 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) இதன்மூலம் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், 18 ஆண்டு காலமாக நஷ்டத்தில் இயங்கி வந்த போக்குவரத்துத் துறையிலே அம்மா அவர்கள் 2005-2006-ல் 14 கோடி ரூபாய் இலாபம் ஈட்டித் தந்துள்ளார்கள். அம்மா அவர்களால் இலாபத்தில் இயங்கி வந்த போக்குவரத்துத் துறை, தி.மு.க. ஆட்சியில் படுபாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் தமிழகம் தலைதூக்கி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முடியாது. திரு. ராஜகுமார் (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் எல்லாம் முடிந்துபோய் விட்டது. (குறுக்கீடுகள்) ஒரு second இருங்கள். அவர் முடிக்கட்டும்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அரசு அமைய வேண்டுமென்று கூறி, தந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார். திரு. ராஜகுமார் 10 நிமிடங்கள்தான், Point to Point டீ, காபி-க்குக்கூட எங்கேயும் நிறுத்தக்கூடாது. திரு. ராஜகுமார் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், திரு. ராஜகுமார் பேசிய பிறகு நான் உங்களைக் கூப்பிடுகிறேன். திரு. ராஜகுமார் பேசுங்கள்.

***திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதம் போற்றும் மகத்தான தலைவி எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன். இந்த அவையிலே 1957-லே அடியெடுத்து வைத்து அரசியலிலே பல சாதனைகள் புரிந்து, ஐந்தாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று பொன்விழா காண இருக்கின்ற முத்தமிழ் அறிஞரே, இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏழையெளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களது மேம்பாட்டிற்காக மிகுந்த அக்கறையோடு நல்ல பல திட்டங்களை உருவாக்கி, செம்மையாக அரசை வழிநடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பெருமகிழ்வோடு வணங்குகின்றேன்.

உள்ளாட்சியிலே நல்லாட்சி தரும் நோக்கோடு உடல் நலனில்கூட அக்கறைகொள்ளாமல் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து, கிராம, நகர மக்களின் வளர்ச்சியிலே கவனமெடுத்து அரசின் முன்னேற்றத்திற்காக முழுக் கவனம் செலுத்திவருகின்ற தமிழகத்தின் எதிர்காலமே, எங்கள் அன்புத் தளபதியே உங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இப்போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் அன்புத் தலைவர் நைனா அவர்களுக்கும், அண்ணன் திரு. பீட்டர் அவர்களுக்கும், ஒத்துழைப்பு அளித்த என் சக உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்து, முதலிலே மாண்புமிகு ராஜீவ் காந்தி



அவர்களுடைய பெயரிலே விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி Academy நிறுவ உத்தரவிட்ட இவ்வரசுக்கு காங்கிரஸ் கட்சி சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வரசினை எப்படிப் பாராட்டுவது? ஒவ்வொரு துறையிலும் சிறந்த அமைச்சர்களைக் கொண்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களைத் தீட்டிய முதலமைச்சரைப் பாராட்டுவதா; அனைத்தையும் மேற்பார்வையிடுகின்ற மூத்த அமைச்சர்களைப் பாராட்டுவதா; துறையினுடைய அமைச்சர்களைப் பாராட்டுவதா; அதிகாரிகளைப் பாராட்டுவதா என்று சிந்திக்கின்ற அளவுக்கு ஒவ்வொரு துறையிலும் இருக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து நல்ல முடிவுகளை எடுக்கின்ற இவ்வரசினை மக்கள் நிச்சயமாகப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது இன்றைய மானியக் கோரிக்கையிலே கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்தவர்களுக்குப் புரியும்.

உதாரணமாக கடந்த ஆட்சிக் காலத்தில் 5,600 புதிய பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டன. இவ்வாட்சி பொறுப்பேற்று இந்த 10 மாதங்களில் 5,000-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது, பாராட்டத்தக்கது. இன்று நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இத்துறையை யார் போக்குக்கும் விடாமல் மிகுந்த கவனத்துடன் ஒவ்வொரு பிரச்சினையிலும் தனிக் கவனத்தை எடுத்து செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதற்கு உதாரணங்கள். நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது; புதிய வழித்தடங்களை உருவாக்கியது; நவீன ரக Ultra Deluxe பேருந்துகளை உருவாக்கியது; தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டது; காலியாக உள்ள அனைத்துப் பணிகளுக்கும் ஆட்களைப் பணியமர்த்தும் செயல்பாடு; நிர்வாகக் கோளாறுகளைச் சீர் செய்தது; பொங்கல் பரிசு; 20 சதவிகிதம் ஊக்கத் தொகை; இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் 5,000-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாகவே இருந்தன. இன்று 5,000 பணியிடங்கள் மட்டுமல்ல, மேலும் 8,000 பணியிடங்களுக்கும் சேர்த்து வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய இந்தத் திட்டம் பாராட்டுக்குரியது.

அதேபோல, விரைவுப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் மிகப் பழமையான பேருந்துகளே இயங்கி வந்தன. அப்பேருந்துகளில் அமர்ந்து பார்த்தால் மற்ற பேருந்துகள் விரைவாகச் செல்வதை அறிய முடியும்.

அந்த நிலைகளையெல்லாம் இப்போது மாற்றி, Ultra Deluxe நவீன இரகப் பேருந்துகள் இயக்கப்படுவதை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

மயிலாடுதுறையிலிருந்து, சென்னை வருவதற்கு அகல இரயில் பாதை பணி நடைபெற்றுக் கொண்டு இருப்பதால், மேலும் இரண்டு புதிய Ultra Deluxe நவீன இரகப் பேருந்துகளை இயக்குவதற்கு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

அதைப்போல, மாநகரப் பேருந்து, இப்போது பெருகி வருகிற மக்கள் தொகைக்கேற்ப, 4,000 பேருந்துகளாக இயக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது எல்லா வண்டிகளையும் சீர்செய்து 2,500 பேருந்துகளுக்கு மேல் இயக்கி, சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, கர்நாடகாவில் இயங்குவதைப்போல, அண்டை மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளைத் தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து நடத்த அரசு முன்வர வேண்டும். இதனால் நம்முடைய அரசுக்கு நிதிச் சுமை குறையும். அதிக வருமானத்தை அரசு பெற முடியும். அதற்கு உரிய வகையில் மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து, அந்த வாகனங்களை வாடகைக்கு எடுத்து ஓட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு அனைத்துத் தொழிற்சங்கங்களுடைய பொறுப்பாளர்களையும் அழைத்து, கருத்துகளையும் கேட்டறிந்து, அவர்களுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டது பாராட்டத்தக்கது.

தொழிலாளர்களுடைய ஓய்வூதியத் திட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகள் குறித்து தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி, வருமான வரி விலக்குப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். இதனால் தொழிலாளர்களுடைய எதிர்கால நலன் பாதுகாக்கப்படும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசில் எதைக் கேட்டாலும் நியாயமான பிரச்சினையாகக் கருதி, உடனே செய்து தருகின்ற மத்திய அரசு இதனையும் செய்து கொடுக்கும் என்று நம்புகிறோம்.

டீசல் விலை உயர்ந்தாலும்கூட, பல்வேறு காலகட்டங்களிலே கட்டணத்தை உயர்த்தாமல் நடத்தி வருவது பாராட்டுக்குரியது. இதற்காக கடந்த பட்ஜெட்டில் 200 கோடி ரூபாயும், இந்த நிதியாண்டில் 300 கோடி ரூபாயும் அரசு மானியம் வழங்கியிருப்பது பெருமைக்குரியது. இந்த மானியத்தை இந்த அரசு மட்டும்தான் பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



தாங்கள் புதிய திட்டமாக, peak hours-ல் கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவது என்று தீர்மானித்திருப்பது சிறப்பானதாகும். இதேபோல, கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் peak hour நேரங்களிலே பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலர்கள் பலர் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதையும் கருத்தில்கொண்டு, peak hour நேரங்களிலே கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது பல்வேறு கிராமங்களை இணைக்கக்கூடிய வகையில், சிற்றுந்துகள் சிறப்பாக இயங்குகின்றன. ஆனால், அவற்றை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு சிற்றுந்துகளை அரசே ஏற்று நடத்தத் திட்டமிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தற்போது இயங்கி வருகின்ற சிற்றுந்துகள், mini-bus-கள் பல கிராமங்களுக்கு முறையாகச் செல்வதில்லை எனப் பொது மக்கள் பலர் புகார் அளிக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய permit-படி முறையாக mini பேருந்துகள் அந்தக் கிராமங்களுக்குச் செல்கின்றனவா என்பதை தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு மேற்பார்வையிட வேண்டும். இப்படிப் பல்வேறு கிராமங்களை, நகரங்களை இணைக்கக்கூடிய புதிய வழித்தடங்களை உருவாக்கி, புதிய பேருந்துகளை அளிக்க வேண்டும்.

R.T.O. ஆய்வாளர்கள் தமிழகம் முழுவதும் 47 அலுவலகங்களில் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு வாகனங்களை அளிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து முறைகளைத் துரிதமாகக் கவனிக்கக்கூடிய பணிகள் அவர்களுக்கு இருக்கின்றன. அவற்றைக் கவனிக்கக்கூடிய வகையிலே வாகனம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல, தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்த காலம் மூன்று ஆண்டுகளாக இருந்ததை, கடந்த அரசு ஐந்து ஆண்டுகளாக மாற்றிவிட்டது. அதை மூன்று ஆண்டுகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எனது தொகுதியிலே நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, கொண்டல்-பாலாக்குடி என்கிற கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமமா

இருக்கிறது, பஸ்கள் நிறுத்தப்படுவதே இல்லை. இந்த நிலையை நீங்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதோடு, ஏற்கெனவே இரண்டு முறை நாங்கள் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தியிருக்கிறோம். தற்போது மூன்றாவது முறையாக ஐந்து இலட்சம் ரூபாய் அரசு கடனாகக் கொடுக்க முன்வந்திருக்கிறது. நாங்கள் ஒரு சிற்றுந்து வாங்கி, நடத்த எண்ணம் இருக்கிறது, அதற்கு அரசிடமிருந்து ஒப்புதல் வாங்கித் தாருங்கள் என்று என்னிடம் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு சுய உதவிக் குழுக்களுக்கு தனிக் கவனம் செலுத்தி பல்வேறு பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது. இவர்களது விழிப்புணர்வை அறிந்து, அவர்களுக்கு இந்தச் சிறப்பான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மயிலாடுதுறையிலே, நீண்டகாலமாக புதிய பேருந்து நிலையம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கான நிலங்களை ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியில் தகுந்த ஏற்பாடும் செய்திருந்தார்கள். அதன் நடவடிக்கைகள் மீண்டும் தொய்வடைந்திருக்கின்றன. அதனை விரைவாகச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையிலே, முழுமையாகச் சேதமடைந்து விட்டால், அவர்களுக்கு மீண்டும் தொகுப்பு வீடுகள் கட்டித் தரக்கூடிய திட்டம் மற்றும் நிதி ரொம்பக் குறைவாக இருக்கிறது. ஏனென்றால் புதிய பயனாளிகளுக்கு நாம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய நிலை உள்ள காரணத்தால், பழைய வீடுகளுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தரக்கூடிய ஒரு திட்டத்திற்கு நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல, தொகுப்பு வீடுகளைப் பழுதுநீக்கம் செய்வதற்காக ஒரு புதிய திட்டத்தை நம்முடைய அரசு உருவாக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இப்போது எம்.எல்.ஏ. தொகுதி நிதியைத் தவிர, வேறு எந்த நிதியும் இதற்காக இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 11-55*

நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் என்னுடைய வேண்டுகோளையெல்லாம் வலியுறுத்தியிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) அந்த வகையிலே, ஆறு ஆண்டுகளுக்குமுன் நிறுத்தப்பட்ட நகரப் பேருந்துகளான 16-ஏ, 9 ஆம் நம்பர் மற்றும் 26 ஆம் நம்பர் நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கும், மயிலாடுதுறை-மாப்படுகை-திருமங்கலம்-முருகமங்கலம் வழியாகப் புதிய பேருந்து இயக்குவதற்கும், மயிலாடுதுறை, மணல்மேட்டிற்கு, பட்டவர்த்தி-மேலாநல்லூர் வழியாகப் புதிய பேருந்தினை இயக்குவதற்கும், சென்னை செல்வதற்கு மணல்மேடு வழியாகச் செல்லக்கூடிய வகையிலே ஒரு பேருந்தினை மாற்றி இயக்குவதற்கும் ஆவன செய்யவேண்டும்.

மயிலாடுதுறையில் இருக்கின்ற ஆர்.டி.ஓ. யூனிட் அலுவலகத்திற்காக மூன்று ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) அதற்கு விரைவாகக் கட்டடம் கட்டித் தர ஏற்பாடு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ராஜகுமார்:** அரசு சார்பில் இலவசப் பட்டா வழங்குகின்ற திட்டத்திலே, மயிலாடுதுறையைப் பொறுத்தவரையிலே, அந்தப் பகுதியில் தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் போன்ற ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலங்களில், பல ஆண்டுகளாக பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா கிடைப்பதில்லை. இவர்களுக்கு வேறு இடங்களில் பட்டா வாங்கிக் கொடுக்காமல், நம்முடைய அரசு அந்த நிதியை அவர்களுக்கு அளித்து, அவர்களிடமிருந்து அந்த நிலங்களைப் பெற்று, அங்கு வசிப்பவர்களுக்கே பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகம் 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடம். அது மிக மோசமான நிலையில் இருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையிலே, பாப்பாக்குடி—முட்டத்திற்கு இடையே கொள்ளிடம் ஆற்றில் பாலம் அமைக்க, கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே, கேட்டதற்கு நபார்டுமூலமாகச் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தீர்கள். அதை விரைவாகத்

தொடங்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மேலும் மிக முக்கியமான சாலைகளையும், MDR சாலையான மயிலாடுதுறையிலிருந்து பட்டவர்த்தியிலுள்ள சாலையையும், ODR சாலையான ஐயாவையாணர் சாலையையும் சீர்செய்வதற்கும், கும்பகோணம்-சீர்காழி சாலையில் விடுபட்டுள்ள, நகர எல்லைக்குட்பட்ட சாலையை மேம்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்து, அவர்களும் ஆடவர் கல்லூரி கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எங்களுடைய பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி. விவசாயிகள் இருக்கின்ற பகுதியாதலால், அந்த நிதியைக் கட்ட இயலாது என்பதால், அரசே கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். ராஜகுமார்:** வில்லியநல்லூர், ஆத்தூர், கடலங்குடி மற்றும் திருமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளைத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். அதேபோல, 46 ஆண்டுகளாக மயிலாடுதுறை நகரிலே இருக்கின்ற பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுகிறேன். அரசு பெரியார் மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், மணல்மேட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தித் தரவும் வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்-மா. ஆதனூர் இடையே கொள்ளிடம் ஆற்றில், நீர்த்தேக்கத்துடன்கூடிய ஒரு சாலை அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதை விரைவாகத் தொடங்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**திரு. எஸ். ராஜகுமார்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. It is not at all connected with the Demand. Demand-க்கும், நீங்கள் பேசுவதற்கும் சம்பந்தமில்லை. (குறுக்கீடு) திரு. செ. புஷ்பராஜ். (குறுக்கீடு)



**திரு. எஸ். ராஜகுமார்:** அனைவருக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல்வர் கலைஞரின் வாழ்க்கைப் பயணத்தைப் பேருந்துகளோடு ஒப்பிடலாம். கலைஞர் அளவுக்குத் தமிழகம் முழுவதும் உற்சாகமாக ஓடிய பேருந்து உண்டா? தலைவர் கலைஞர் அளவிற்கு மக்களைச் சுமந்த பேருந்து உண்டா? தமிழக மக்களைச் சுமந்ததால், தமிழைச் சுமந்ததால், எல்லாப் பேருந்துகளை விடவும், அவர் அதிகமான முட்களையும், கற்களையும் சந்தித்தார். ஆனால், அவர் பயணங்கள், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, சட்டப்பேரவையில் குளித்தலை முதல் சேப்பாக்கம் வரை அவரது வெற்றிப் பேருந்துக்கு break down வந்ததேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்று இரயில் சக்கரங்கள் முன்னால் படுத்தவர், இன்று அசோகச் சக்கரத்தையே இயக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பொற்பாதங்களை வணங்கி போக்குவரத்து மானியக் கோரிக்கைமீதான எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மனிதர்களின் வாழ்க்கையில் பயணங்கள் முடிவதில்லை. இரண்டு தேதிகளுக்கு இடையில், ஏராளமான பயணம் போகின்ற சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் உண்டு. கல்வி நிலையங்களுக்குச் சென்று அறிவைப் பெற, வேலைகளுக்குச் சென்று பணம் ஈட்ட, சக மனிதர்களின் சுக துக்கங்களில் பங்குகொள்ள, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இருக்கின்ற எளிய போக்குவரத்து வசதிதான் பேருந்துகள். தமிழகம் முழுவதும் அந்தப் பேருந்துகளை இயக்குகின்ற, பராமரிக்கின்ற பணியில் சுமார் 1,25,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் மக்களுக்கு வசதியான பயணத்தைத் தருகின்றார்கள்.

1971-ல், தனியார்களின் சட்டைப் பைகளுக்குத் தாராளமாகப் பாய்ந்து கொண்டிருந்த மக்கள் பணத்தை, பேருந்துகள் பொதுவுடைமை என்ற திட்டத்தால், அரசாங்கத்தின் களஞ்சியத்திற்கு மடைதிறந்து விட்டவர் நமது மகத்தான முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் முதலாளிகள், அந்த வழக்கில், உயர் நீதிமன்றத்தில் வெற்றி பெற்றாலும், உச்ச நீதிமன்றம், தலைவர் கலைஞரை உச்சி குளிரப் பாராட்டியது. 1996 முதல் 2001 வரை, கலைஞர் ஆட்சியில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளை அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி அவர்கள் அமைச்சராக இருந்தபோது, மக்களின்

மகிழ்ச்சியான பயணத்திற்குத் தந்தோம். கடந்த ஆட்சியில் சுமார் 5,000 பேருந்துகள் மட்டுமே வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. ஒப்பிட்டுப் பார்க்கும்போது புள்ளிவிவரங்களே சொல்கின்றன. கடந்த ஆட்சியில் போக்குவரத்துத் துறையை தனியார்மயமாக்க முன்வந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பேருந்துகளை மீண்டும் அரசுடைமையாக்குவோம்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) அறிக்கை விட்டதால் தனியார் முதலாளிகள் அஞ்சி அத்திட்டத்திற்கு முன்வரவில்லை. அத்திட்டம் கைவிடப்பட்டது. எனவே அப்பொழுதும் தொழிலாளர்களின் முதல்வர் டாக்டர் கலைஞர்தான். (குறுக்கீடு)

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இருங்கள் தம்பி. திரு. செங்கோட்டையன் ஏதோ சொல்ல விரும்புகிறார், இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப்பேச்சிலே நீங்கள் பாராட்டிப் பேசுவதிலே எங்களுக்குக் கவலையில்லை. உறுப்பினர் சொல்கிறபோது முந்தைய ஆட்சிக்காலத்தில், (குறுக்கீடு) கேளுங்கள், முந்தைய ஆட்சிக் காலத்தில் தேசியமயமாக்கப்பட்ட நிலையிலேயிருந்து, அந்த ஆட்சி மாறி, தனியார் பேருந்துகள் இயக்கப்பட்டன என்று சொன்னார்கள். உங்கள் ஆட்சியிலேதான் மினி பஸ்களை நீங்கள் தனியாருக்கு வழங்கினீர்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மினி பேருந்து என்பது unserved sector-க்கு. எந்தப் பகுதியிலே பேருந்துகள் இல்லையோ, கிராமப் பகுதிகளுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடு unserved area-வில் 16 கிலோமீட்டரும், served area-வில் 4 கிலோ மீட்டரும் என்று ஒரு புதிய திட்டத்தை அறிவித்து, அது ஏற்கெனவே, ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் போகின்ற தடத்திற்குச் செல்லாமல் இருக்கவேண்டுமென்று சட்டம் போட்டுக் கொடுத்தது. ஆனால் உங்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த அரசுப் பேருந்துகளை தனியாருக்குக் கொடுப்பதாக முடிவு எடுக்கப்பட்டது. இப்போது இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 'அவர்கள் தனியாருக்குத் தந்தால், நான் வந்தால் அரசுடைமையாக்குவேன்' என்று



சொன்னார்கள். அதனால் நின்றது என்று அவர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் காலத்திலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது பேருந்துகளைத் தனியாருக்கு வழங்குவதற்காக எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை என்பதை முதலிலே அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, unserved area என்று சொல்லப்படுகிற கிராமப்புறங்களிலே பேருந்துகளை இயக்குவதற்காகத்தான் தனியாருக்கு வழங்கினோம் என்று சொன்னார்களே! தனியாருக்கு வழங்குகிறபோது அதனுடைய கட்டணங்கள் உயர்த்தப்படுகிறதே! ஏன்? அரசே அதை ஏற்றுக்கொண்டு, குறைந்த கட்டணத்திலே நாட்டு மக்களுக்காக உங்களால் அந்தப் பேருந்துகளை ஏன் இயக்க முடியவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தத் துறையை 5 ஆண்டுகாலத்திற்கு மேல் வைத்திருந்தவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். தனியாருக்குத் தந்ததால் எந்த இடத்தில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது? கட்டணம் ஒரே அளவில் இருக்க வேண்டுமென்று அரசு சட்டம் போட்டு அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இன்றளவும், தனியார் பேருந்துகள் என்றாலும், அரசுப் பேருந்துகள் என்றாலும் ஒரே கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்து வருடங்களில் வாங்கிய பேருந்துகளோடு ஒப்பிடும்போது 11 மாதங்களில் 2,230 பேருந்துகளை வாங்கி தமிழக மக்களின் பயணங்களை சொகுசு ஆக்கி இருக்கின்றோம். அவர்களின் பயணத்தைப் புத்துணர்ச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் மாற்றியுள்ளோம். ஆனால் கடுகளவுகூட கட்டணத்தை உயர்த்தவில்லை. சிரமத்தை அரசே ஏற்றுக்கொண்டு மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதால் நமது அரசு மகத்தான அரசு என்று

நாடே சொல்கிறது; பல ஏடுகளும் சொல்கின்றன. இந்த நிதியாண்டில் 350 கோடிக்கு 3,000 பேருந்துகளை வாங்கி தமிழக மக்களின் பயணங்களை உலகத் தரத்திற்கு உயர்த்தவிருக்கின்ற நம்முடைய தமிழக அரசை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

இந்த 11 மாத கால ஆட்சியில், கிராமங்களுக்கு 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பஸ் பயண தூரத்தை 35 கிலோ மீட்டராக மாற்றியிருப்பது தமிழகத்தின் கிராமங்களுக்குப் புத்துணர்வு அளிக்கிறது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரில் 40 கிலோ மீட்டர் என்ற அளவை 50 கிலோ மீட்டர் தூரமாக மாற்றி தாழ்தள சொகுசுப் பேருந்தாக மாற்றியுள்ளதை சென்னை மாநகர மக்களும், புறநகர் மக்களும் மனதாரப் பாராட்டுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தனியார் பேருந்துகளைவிட சொகுசான அதி நவீன வசதிகள் உள்ள Ultra Delux Bus-களை தமிழக அரசு இயக்குவதைப் பார்த்து, தமிழக மக்களும், தனியார் துறை முதலாளிகளும் பிரமித்து நிற்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறையில் கடைநிலை ஊழியர்கள் முதல் உயரதிகாரிகள்வரை அனைவருக்கும் ஊதிய உயர்வு, பணி உயர்வு வழங்கி, போக்குவரத்துத் துறையின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தி இருக்கிறார்கள். அதனைப் பாராட்டுகிறேன்.

இரு சக்கர வாகனங்கள் பயன்படுத்துகின்றவர்கள் தலைக் கவசம்-Helmet அணிய வேண்டும் என்பதை கட்டாயச் சட்டமாகக் கொண்டு வந்து, விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற இருக்கின்ற நம்முடைய கழக அரசை வளமாகப் பாராட்டுகின்றேன்.

கடந்த ஆட்சியிலே போக்குவரத்து ஊழியர்கள் 20 சதவிகிதம் போனஸ் கேட்டு சிறை சென்று போராடினார்கள்; மணியடித்துப் போராடினார்கள்; பட்டை நாமம் போட்டுப் போராடினார்கள்; சவபாடை ஏந்திப் போராடினார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது துயரமும், ஏமாற்றமும்தான்.

தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள், தொழிலாளர்கள் போராடாமல் அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தாயுள்ளத்தோடு வாரி வழங்கியுள்ளீர்கள். இந்த நிகழ்வுகளுக்கு



ஒவ்வொரு போக்குவரத்துத் தொழிலாளியின் குடும்பமும், தங்களை நெஞ்சிலே ஆலயமாக வைத்து உங்களை நன்றியோடு வணங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்துறையில் நானும் ஒரு தொழிற்சங்கத் தலைவராக இருப்பதால் நன்றியோடு உங்களைத் தொழுகின்றேன். கொள்கைக் குறிப்பில், சென்னைக்கு 2,600 பேருந்துகள் என்பது பற்றாக்குறையாக உள்ளது. கடற்கரைசாலையில் அதிகத் தொழிற்சாலைகள் உள்ளதால் அந்தப் பகுதிகளுக்கும், புறநகர்ப் பகுதிகளுக்கும் அதிக அளவு பேருந்துகள் இயக்க வேண்டும்.

பிற்பகல் 12-05

பணிக்காலங்களில் இறந்தவர்களின் குடும்ப வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்புத் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களின் ஓய்வுக்குப் பிறகு, அவர்கள் நிம்மதியாக இருக்கவேண்டும் என்பதற்காக பெரிதும் எதிர்பார்த்த பென்ஷன் திட்டம் நம்முடைய ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. வழக்கம்போல அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது. தொ.மு.ச. உயர் நீதிமன்றத்தின் கதவுகளை உரிமைக் கரங்களால் தட்டிய பிறகு, பறிக்கப்பட்ட பென்ஷன் திட்டம் மீண்டும் 2005-ல் வழங்கப்பட்டது. அந்தத் திட்டத்தை வலுவாக்க, பயனுடையதாக மாற்ற, மாண்புமிகு மத்திய நிதித் துறை அமைச்சர் அவர்களின் உதவியைப் பெற்று சிறப்பாக அமல்படுத்துங்கள் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், இங்கே பாருங்கள். ஒரு தடவை, இரண்டு தடவை எழுந்திருந்து நின்றால் ஒரு மரியாதை இருக்கும். ஒவ்வொரு நிமிடமும் எழுந்து நின்றால்... (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கீடு) திரு. புஷ்பராஜ் நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. புஷ்பராஜ் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு தடவை, இரண்டு தடவை எழுந்து நின்று பேசலாம். நிமிடத்திற்கு நிமிடம் எழுந்திருந்து நின்றால், then you are losing your resepct.

**திரு. செ. புஷ்பராஜ்:** போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகின்ற நடத்துனர்கள், பணியின்போது பயணச் சீட்டைத் தவறவிட்டால் கடந்த நமது ஆட்சியின்போது பயணச் சீட்டின் அச்சடிப்புச் செலவு

மட்டுமே வசூலிக்கப்பட்டது. ஆனால், தற்போது தவறவிட்ட பயணச் சீட்டின் மொத்தக் கட்டணமும், உதாரணமாக ஒரு இலட்சமாக இருந்தாலும் அவற்றைக் கட்ட வேண்டிய நெருக்கடியான சூழ்நிலையுள்ளது. இதனை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் கே.என். நேரு அவர்கள் பரிசீலனை செய்து அச்சடிப்புக் கட்டணம் மட்டுமே கட்ட ஆவன செய்து உத்தரவு வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2006-2007-ல் 679 புதிய வழித்தடங்கள் விடப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் ஓடிய வழித்தடங்களை நிறுத்தினார்கள். இப்போது புதிய வழித்தடங்களை மக்கள் வரவேற்கிறார்கள்.

தொடர் விபத்தின் காரணமாக போக்குவரத்து ஓட்டுநர்கள் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். தொழிலாளர் குடும்பங்களின் துயரத்தைக் கருத்தில்கொண்டு இந்த நிரந்தரப் பணி நீக்கத்தை (Termination) மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூட்டி சுமார் 7.5 ஆக norms உயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கனரக ஓட்டுநர் பயிற்சிக்காக கும்மிடிப்பூண்டி, திருச்சி போன்ற இடங்களில் உள்ளதைப்போல விழுப்புரத்தில் ஒரு கனரக ஓட்டுநர் பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்ததை கடந்த ஆட்சியில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் என்று மாற்றி தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து இருக்கிறார்கள். அதனை மீண்டும் மூன்று ஆண்டு ஊதிய ஒப்பந்தம் என்று கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் 17 நாட்கள் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடினார்கள் என்பதற்காக இரண்டாயிரம் தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். உயர் நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு மீண்டும் அவர்கள், வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆனால், பல பேருக்கு பல்வேறு காரணங்களால் Review பலன்கள் கிடைக்கவில்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. செ. புஷ்பராஜ்:** ஆனால், போராடுவதுதான் மனிதனுக்கு அழகு என்ற அடிப்படையில் போராடிய அந்த 17 நாட்களையும் பணி நாட்களாக மாற்றித் தந்தவர் கலைஞர்தான். இந்திய தொழிற்சங்க வரலாற்றில் எத்தனை முறை திருப்பி, திருப்பிப் பார்த்தாலும், தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இந்த வரலாறு நடந்ததே இல்லை. மரியாதைக்குரிய ஜீவா அவர்களை நெஞ்சில் சுமந்து இருக்கும் கலைஞரால்தான் இந்த ஆச்சரியத்தை இங்கு நடத்த முடியும்.

ஆட்டோ சங்க ஓட்டுநர்கள் மற்றும் பொது மக்களை அழைத்துப் பேசி, புதிய கட்டணங்களை நிர்ணயித்து..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நல்ல கருத்துகளையெல்லாம் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. செ. புஷ்பராஜ்:** முதல் 2 கிலோ மீட்டருக்கு குறைந்தபட்சம் 14 ரூபாய்; அதன்பிறகு ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூபாய் 6 என நிர்ணயம் செய்யப்பட்டதை ஆட்டோ ஓட்டுநர்களும், பொதுமக்களும் வரவேற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தம்பி புஷ்பராஜ், பேச்சினை நிறைவு செய்யுங்கள்.

**திரு. செ. புஷ்பராஜ்:** கலைஞர் அவர்கள், பெரியார், அண்ணா, தி.மு.க. என்ற ஸ்டெம்புகளின்மீது சிறு இடர்பாடுகளும் படவிடாமல் அரை சதத்தை அற்புதமாக அடித்திருக்கிறார் சரித்திரப் புகழ்பெற்ற நமது சட்டப் பேரவையில். அவரை நோக்கி வீசப்பட்ட சுழற்பந்துகளும், வேகப்பந்துகளும் sixer களாக, boundary களாகப் பறந்து கொண்டே இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் தூக்கி வீசப்பட்டவர்கள் இவற்றைப் புரிந்துகொண்டால் நல்லது. குளித்தலை முதல் சேப்பாக்கம் என்ற இரண்டு விக்கெட்டிற்கு இடையே ஓடிக்கொண்டே இருக்கின்ற இவரை ரன் அவுட் செய்ய முடியவே முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. புஷ்பராஜ், இல்லை, முடியாது. திரு. வேல்முருகன், ஒரு நிமிடம், உங்களுக்கு 13 நிமிடங்களுக்கு மேல் ஒரு second போனாலும் நிறுத்திவிடுவேன்.

**திரு. தி. வேல்முருகன்:** 15 நிமிடங்கள், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 நிமிடங்களுக்கு அனுமதி வாங்கியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியவே முடியாது. திரு. செ. புஷ்பராஜ், உங்கள் உரை முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள். திரு. தி. வேல்முருகன்.

*பிற்பகல் 12-10*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய போக்குவரத்துக் கொள்கை என்பது, தமிழ்நாட்டினுடைய போக்குவரத்துக் கொள்கைக் குறிப்புப் புத்தகத்திலே குறிப்பிட்டிருப்பதுபோல, "தமிழ்நாட்டில் அரசுப் பேருந்து போக்குவரத்து அமைப்பு மற்ற அரசு அமைப்புகளைவிட பெரும்பாலான பொது மக்களின் ஆதரவையும், தொடர்பையும் அதிகமாகப் பெற்றுள்ளது. பேருந்துப் போக்குவரத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவதுடன், பொது மக்களுக்கு அறிவார்ந்த, திறமையான, இடரற்ற மற்றும் பாதுகாப்பான சேவையை அளிப்பதே போக்குவரத்துத் துறையின் குறிக்கோளாகும். சிறப்பான பேருந்துப் போக்குவரத்துச் சேவை மக்களிடையே அரசின் மீதான நல்லெண்ணத்தை உண்டாக்கும்" என்ற உங்களுடைய அறிவிப்பிற்கு இணங்க, தமிழகத்தினுடைய போக்குவரத்துத் துறையின் வரலாற்றில், அது எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், தோழமைக் கட்சியாக இருந்தாலும், கூட்டணிக் கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சியினுடைய சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தாலும், தங்கள் தொகுதியிலே உள்ள சிற்றூராக இருந்தாலும், பேரூராக இருந்தாலும், தங்கள் பகுதிகளுக்குப் பேருந்துகளைப் புதிதாக விடவேண்டுமென்று வேண்டுகோள் வைக்கின்றபோதும், சட்டப்பேரவையினுடைய கேள்வி நேரத்தின்போதும், எதற்கும் இடம் கொடுக்காமல், கட்சி பாகுபாட்டிற்கு இடமளிக்காமல், எந்த உறுப்பினர் கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல், அனைத்துக் கிராமப்புறங்களுக்கும் போக்குவரத்து வசதியைப் புதிதாக உருவாக்கித் தந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சர், அண்ணன் நேரு அவர்களை இந்த மன்றத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய போக்குவரத்துக் கொள்கை என்பது, தனியார் ஊர்தி



போக்குவரத்து முறைகளைக் குறைத்து, பொது போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதுதான் மிகச் சிறந்த போக்குவரத்துக் கொள்கையாகும். அந்த அடிப்படையில் இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற போக்குவரத்து நிறுவனம் மிகச் சிறப்பாக, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, செயலாற்றி வருவதற்கு சில உதாரணங்களைக் கொள்கைக் குறிப்பின்மூலமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 17,833 பேருந்துகளை உள்ளடக்கிய இந்தத் துறை, கடந்த ஆண்டு, போக்குவரத்துத் துறையினுடைய வரலாற்றில், எந்த அளவிற்கும், எவர் ஆட்சிக் காலத்திலும் செய்ய முடியாத அளவிற்கு, நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 14.05 கோடி ரூபாயை ஒருநாள் வசூலாக ஈட்டி, கடந்தகால அனைத்துச் சாதனைகளையும் முறியடித்திருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோல், ஒரு நாளைக்கு இயக்கப்படும் தூரம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தபோதுகூட, வெறும் 68.40 இலட்சம் கிலோமீட்டர். ஆனால், கடந்த ஆண்டு 67 இலட்சம் கிலோமீட்டர். இந்த ஆண்டு 68.40 இலட்சம். அதிலும் ஒரு இலட்சம் கிலோமீட்டர் அதிகமாக இப்போது பயண தூரத்தை நம்முடைய போக்குவரத்து உபயோகம் என்பது, கடந்திருக்கிறது. அதேபோல், நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டு 1 கோடியே, 76 இலட்சம். ஆனால், தற்போது 1 கோடியே, 77 இலட்சத்து, 32 ஆயிரம் பயணிகளை ஏற்றி இறக்கியிருக்கிறது. ஆகவே, உபயோகம், கட்டணம் என்று எதை ஒப்பிட்டுப் பார்த்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், போக்குவரத்துக் கழகம் மிகச் சிறப்பாக இயங்குகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

ஆனால், அதேநேரத்தில் கொள்கைக் குறிப்பில் துறை அதிகாரிகள் தவறுதலாகக் குறிப்பிட்டிருப்பார்களோ என்று நான் கருதுகிறேன். விபத்துகளின் எண்ணிக்கை மட்டும் ஒரு இலட்சம் கிலோமீட்டர் என்ற விகிதத்திலே, கடந்த ஆண்டு மொத்தம் 1,870 விபத்துகள் நடந்திருக்கின்றன. அதில் உயிரிழப்பு விபத்துகள் வெறும் 325 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல, இறந்தவர்களுடைய எண்ணிக்கை 376 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த

ஆண்டு கொள்கைப் புத்தகத்திலே மொத்த விபத்துக்களுடைய எண்ணிக்கை 7,527. ஆக, ஒரே ஆண்டில் இந்த அளவிற்கு விபத்து எண்ணிக்கை அதிகமாகியிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் கருதுகிறேன். ஒருவேளை அதிகாரிகள் தவறுதலாகப் புள்ளிவிவரங்களைக் கொடுத்திருப்பார்களென்று சொன்னால், மகிழ்ச்சி. அல்லது, உண்மையிலேயே இதுபோன்று அதிக விபத்துகள் ஏற்பட்டிருக்குமென்று சொன்னால், அது பேரதிர்ச்சிக்குள்ளாக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கவனத்தோடு இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், உயிரிழந்தவர்களுடைய எண்ணிக்கை, 1,558 என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு வெறும் 376 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, ஓரேயாண்டில் மூன்று மடங்கு உயர்ந்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இதைச் சரிசெய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த ஆண்டு 2006-2007-ல் 303 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஆண்டு நம்முடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டபோது, அது 513 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல், கணிப்பை மீறி, இப்போது இந்த அரசின் சிறந்த நிர்வாகத்தின்மூலமாக சிறப்பாக இந்த நட்டத்தைக் குறைத்ததற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், எஞ்சின், டீசல் சிக்கனம். இதில் ஓராண்டு மட்டும் 50 கோடி ரூபாயை இந்த அரசு மிச்சப்படுத்தியிருக்கிறது. அதற்குப் பாராட்டைச் சொல்கிற அதேவேளையில், பேருந்துகளை இயக்குகிறபோது, Hino Engine என்று சொல்லக்கூடிய engine-ஐ, அசோக் லேலண்டு நிறுவனம் தயாரிக்கிறது. ஓசூரிலே இருக்கின்ற அதனுடைய plant-ன் மூலமாக அந்த Hino Engine-ஐத் தயாரிக்கிறார்கள். அந்த Hino Engine, சராசரிப் போக்குவரத்து ஒரு லிட்டருக்கு 4.87 கிலோமீட்டர் என்பதை, கிட்டத்தட்ட 7.50 கிலோமீட்டர் ஒரு லிட்டர் டீசலுக்கு தருவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, அதுபோன்ற Engine-களை நாம் பயன்படுத்தி பேருந்துகளை இயக்க ஆரம்பித்தால், மிக அதிக இலாபம் ஈட்டுவதற்கும், சேமிப்புத் தொகை 50 கோடி என்பது கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்குமேல் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-15

அதேபோல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2004-2005-ல் 212 கோடி ரூபாய் செலவினம் அதிகமாக இருந்தது. ஆனால், 2005-2006-ல் 1,501 கோடி ரூபாயாக இருந்த செலவினம், நிர்வாகத் திறமையின்மூலமாக, 2006-2007-ல் 1,724 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு 212 கோடி ரூபாய் அதிகமாக இருந்த செலவினத்தினை இந்த ஆண்டு வெறும் 158 கோடி ரூபாயாக குறைத்திருப்பது, இந்த அரசினுடைய நிர்வாகத் திறமையைக் காட்டுகிறது.

அதேபோல், பேருந்துகள் வாங்குகின்ற விகிதத்தை எடுத்துக்கொண்டால், இந்த 11 மாத காலங்களில் 5,200 பேருந்துகளை வாங்கி, போக்குவரத்துத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கு மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், இப்போது நைஜீரியா என்று சொல்லக்கூடிய ஒரு நாட்டில், வெறும் 95 இலட்சம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில், 13,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், 75 இலட்சம் மக்கள் வாழ்கின்ற சென்னை மாநகரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல வெறும் 2,600 பேருந்துகளிலே, 2,400 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 2,400 பேருந்துகளிலே வெறும் 1,500 பேருந்துகள் மட்டும்தான் சிறப்பாக இயங்கக்கூடியவையாக இருக்கின்றன. அதை மாற்றி, இப்போது பல்வேறு புதிய பேருந்துகளை இயக்குகின்ற நம்முடைய அரசு, இந்த நகரத்திற்கு கூடுதலாக இன்னும் 3,000 பேருந்துகளை இயக்கி, ஒரு சீரான பேருந்து வசதியை, சைக்கிளில் செல்பவர்களும், நடைபாதையில் செல்பவர்களும், எந்தத் தொந்தரவுக்கும் ஆளாகாதவாறு ஒரு புதிய நடைமுறையைக் கொண்டு வரவேண்டும்.

இப்போது பல உலக நாடுகளிலும், இந்தியாவிலேகூட பல்வேறு மாநிலங்களிலே, ஆந்திராவில், விசாகப்பட்டினத்தில், டில்லியில், இன்னும் பல்வேறு மாநிலங்களிலே இந்த P.R.T. என்கிற முறை கொண்டுவரப்பட்டு சிறப்பான ஒரு பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறைகளையெல்லாம் நம்முடைய தமிழக அரசு கண்டறிந்து, அவற்றை இங்கு கொண்டு வருவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு, நம்முடைய போக்குவரத்துத் துறை முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பாட்டாளி மக்கள் கட்சியின்

சார்பாக வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது இந்தியாவினுடைய மத்திய அமைச்சராக இருக்கின்ற திரு. ரெட்டி அவர்களே சொல்லியிருக்கிறார், P.R.T. முறை என்கிற இந்த முறையைக் கையாண்டு அரசு நடத்தும் என்று சொன்னால், 35 சதவீதம் மானியமாக, மத்திய அரசு, நாங்கள் நிதி தர இருக்கிறோம் என்று.

கடந்தகால ஆட்சியில்கூட மோனோ இரயில் திட்டத்தைக் கொண்டுவந்தபோது அந்த மோனோ இரயில் திட்டம் வேண்டாம், மெட்ரோ இரயில் திட்டம் வேண்டும் அல்லது அதற்கு ஈடாக இந்த P.R.T. முறையை இந்த அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்று எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையிலேயும் நாங்கள் போராட்டம் நடத்தியிருக்கிறோம். எதற்காக இதையெல்லாம் பதிவு செய்கிறேன் என்று சொன்னால், இப்போது நாளுக்கு நாள் வாகனப் போக்குவரத்து அதிகரித்து வருகிறது. ஒரு ஆண்டுக்கு மட்டும் 10 இலட்சம் வாகனங்கள் தமிழகத்திலே கூடுதலாக வருகின்றன. அவற்றிலே கிட்டத்தட்ட 8 இலட்சம் வாகனங்களுக்குமேல் கார்களாகவும், இரு சக்கர வாகனங்களாகவும், மகிழுந்துகளாகவும் அல்லது சிற்றுந்துகளாகவும் இந்தப் போக்குவரத்து பெருகிக்கொண்டே வருகிறது. இப்படிப் போக்குவரத்து பெருகப் பெருக, மாசு அதிகமாக ஏற்படுகிறது. காற்றிலே கலக்கின்ற மாசினால், அதுவும் புகையினால் ஏற்படுகின்ற நோய்கள், மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற பல்வேறு விதமான நோய்கள் எல்லாம் இப்போது உருவாகின்றன என்பதை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கணித்திருக்கிறார்கள். இதை எல்லாம் கருத்திலேகொண்டு அந்த P.R.T. முறையிலே, அதுவும் C.N.G. என்று சொல்லப்படுகின்ற, டெல்லியில் வாயுவைப் பயன்படுத்தி இயக்கக்கூடிய அந்த முறையைக் கொண்டுவந்தால், நாட்டு மக்களுக்கும் நல்லது, போக்குவரத்துக்கும் நல்லது, வாகனங்களிலே செல்பவர்களுக்கும் இடவசதி இருக்கும். ஏனைய பல்வேறு வசதிகளைக் கொண்டிருக்கிற அந்த முறையை நம்முடைய அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உதாரணத்திற்கு ஒரு புள்ளிவிவரம். 1970 ஆம் ஆண்டு 20 கோடி மகிழுந்துகள் இந்தியாவிலே இருந்தன. ஆனால், இப்போது 2007 ஆம் ஆண்டு, 85 கோடியாக அவை அதிகரித்துள்ளன என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. 2030 ஆம் ஆண்டில், இது உலக அளவில் இரண்டு மடங்காக அதிகரிக்கும். இந்தியாவில் மட்டும் ஓராண்டுக்கு ஒரு கோடி தானியங்கிகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 10 இலட்சம் ஊர்திகள்



மகிழுந்துகள் என்று புள்ளிவிவரம் சொல்கிறது. நாளுக்கு நாள் மகிழுந்துகள் உற்பத்தி அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்று சொன்னால், அதனால் சென்னை போன்ற நகரங்களிலும், கோவை, திருச்சி போன்ற மாநகரங்களிலும், பேருந்துகள் செல்வதற்கு இடமில்லாத வாய்ப்புகள் ஏற்படும். இதைக் கருத்திலே கொண்டு, இந்த அரசு சரியான ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும். நீங்கள்கூட 1,300 கோடி ரூபாயிலே, மாநகரத்திலே புதிய பேருந்துத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அப்படி அறிவித்திருக்கிற அந்தத் திட்டம் P.R.T. திட்டமாக இருந்தால் நாங்கள் அதை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, எட்டு ஆண்டுகளுக்கு மேல் பழமையான பேருந்துகள் நம்முடைய மாநகரத்திலே கிட்டத்தட்ட 1,300 வண்டிகள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அவற்றை மாற்றி, உடனடியாக, எட்டு ஆண்டுகளுக்கு மேலான வண்டிகளை எல்லாம் எடுத்துவிட்டு, புதிய பேருந்துகள் ஓட்டுவதற்கு, இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் 8 இலட்சம் பேர் காற்று மாசுபடுவதால் இறந்துவிடுகிறார்கள் என்று புள்ளிவிவரம் சொல்கிறது. அவற்றிலே 1,50,000 பேர், கூடுதலான பேர் இந்தியாவிலேயும், தமிழகத்திலேயும் இறந்துவிடுவதாக புள்ளிவிவரம் எச்சரித்துக் கொண்டிருக்கிறது. இதை எல்லாம் கருத்தில்கொண்டு, நம்முடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே நாம் பேசுகின்றோம் என்பதற்காக, நேற்றையதினம் சென்னையிலே பல பகுதிகளுக்குச் சென்று நமது போக்குவரத்துக் கழகம்மூலம் இயக்கப்படுகின்ற பேருந்துகளைப் பார்த்தேன். அதிலே, 15-ஜி, 25-ஜி, 27-ஹெச், 6-டி, 1-ஈ என்ற பேருந்துகள் அண்ணா சாலையிலிருந்தும், அண்ணா சதுக்கத்திலிருந்தும், புறப்படுகின்ற பேருந்துகளை நான் பார்க்கின்றபோது, அதில் அழகாக 'கலைஞர் நகர்' என்று தமிழிலே பெயரிடப்பட்டிருக்கிறது. வந்து சேருகின்ற இடம் 'அண்ணா சதுக்கம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதுபோல அந்த நிறுத்தத்திற்கு

'கண்ணகி சிலை' என்ற பெயர் இருக்கிறது. ஆனால், தமிழுக்காகப் போராடிய தலைவர்கள், தமிழினத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் இயங்குகின்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகளினுடைய விளம்பரப் பலகைகளிலே ஒரு பேருந்தில்கூட தமிழ்ப் பலகைகள் இல்லை. எல்லாம் ஆங்கிலம். நாதெள்ளசம்பத்துச் செட்டி விளம்பரம், இன்னும் பல்வேறு விளம்பரங்கள். ஏதோ, ஒரு புதிய படம் வருகிறது, அந்தப் படத்திற்கான விளம்பரம், எல்லாப் பேருந்துகளின் பின்பக்கத்திலும் ஆங்கில விளம்பரங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்த ஆங்கில விளம்பரங்களை அகற்றிவிட்டு, தமிழக அரசு போக்குவரத்துத் துறைக்கு வருமானம் வருகிறது என்று சொன்னாலும்கூட, அது தமிழிலே இருக்க வேண்டுமென்கிற வரைமுறையை நம்முடைய அரசு கொண்டு வர வேண்டுமென்று, இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல Bus Day என்ற ஒன்றை மாணவர்கள் கொண்டாடுகிறார்கள். அதனைக் கொண்டாடுகின்றபோது, பஸ் மேலே ஏறி அந்தக் கூரையிலே எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் அவர்கள் மகிழ்ச்சியிலே போகும்போது, திடீரென்று ஓட்டுநர் பிரேக் போட்டால், அவர்கள் விழுந்தார்கள் என்றால் பின்னால் வரும் வாகனம் ஏற்றி நசுக்கிவிட்டுப் போய் விடும். உயிரிழப்புகள் ஏற்பட்ட பிறகு நாம் விழித்துக்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதைக் காட்டிலும், அதைத் தடை செய்துவிட்டு, பல ஆண்டு காலம் அந்த வழித்தடத்தில் பணிபுரியும் ஓட்டுநர்களை அந்த மாணவர்கள் அழைத்துப் பாராட்டி கௌரவிக்கும்வகையில் அந்த நிகழ்ச்சிகளை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சென்னையிலே தொடங்கி கன்னியாகுமரிவரை செல்கின்ற ஓட்டுநர்களை இடையிலே மாற்றுவதற்கு, அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சி மையம் மாதிரி அவர்கள் ஒரு இடத்திலேபோய், தனியார் ஓட்டல்களிலே போய் நிறுத்திவிட்டு, ஒரு டீக்கும், வடைக்கும் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். பயணிகளும் அங்கே சாப்பிடுவார்களாம், அதிலே அந்த ஓட்டல் அதிபர்களுக்கு இலாபம் வருமாம். அப்படி கிள்ளுக்கீரை மாதிரி அந்த டிரைவருக்கும், கண்டக்டர்களுக்கும் ஓசியிலே சாப்பாடு கொடுப்பார்களாம். இந்த முறை வேண்டாம். போக்குவரத்துத் துறையைச் சிறப்பாக நடத்தி வருகின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த ஓட்டுநர்-நடத்துநர்களுக்கு, ஒரு புத்துணர்ச்சி முகாம் போன்று ஒரு சென்டரை



பாதி தூரத்திலே ஏற்பாடு செய்து, அந்த இடத்தில், அவர்களுக்கு தேநீர் வசதி, அவர்கள் முகம் கழுவதற்கான சோப்பு போன்ற அனைத்து வசதிகளையும் கொடுத்து அதனை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களுக்கு மேலாண்மை இயக்குநர்கள் எல்லாம், இந்த டி.எம்., பி.எம்., ஜி.எம்., அவர்கள் எல்லாம் எம்.டி-யாக வருகிறார்கள். இவர்களால் அந்தத் தொழிற்சங்கவாதிகளையோ, அங்கேயிருக்கின்ற ஓட்டுநர்களையோ அதிகமாக தங்கள் கைக்குள்ளே வைத்துக்கொண்டு, இந்தப் போக்குவரத்து நிருவாகத்தைச் சீரமைப்பதற்கு பல்வேறு நிலையிலே சிரமம் இருக்கின்றது. அதிலும் சிலர் சிறப்பாகச் செயலாற்றுகிறார்கள், நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், அதேநேரத்தில், ஒவ்வொரு போக்குவரத்துக் கழகங்களுக்கும், இந்த 7 போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்து பேருந்துப் போக்குவரத்தைத் திறம்பட செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னால் இந்தப் போக்குவரத்துத் துறையை இலாபகரமாக நடத்திக் காட்டுவதற்கு முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல இப்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற காலணிகள், துணிமணிகள் எல்லாம், மோசமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் நல்லவைகளாக வாங்கித் தர வேண்டும். எங்களுக்கு இலவச பாஸ் தருகிறீர்கள்; மாணவர்களுக்கு இலவச பாஸ் தருகிறீர்கள்; ஊனமுற்றோருக்கு இலவச பாஸ் தருகிறீர்கள்; மொழிப்போர்த் தியாகிகளுக்கு இலவச பாஸ் தருகிறீர்கள்; எல்லோருக்கும் இலவச பாஸ் தருகின்ற நம்முடைய போக்குவரத்துத் துறை, 24 மணி நேரமும் எந்த நேரத்திலும் சேவையைச் செய்வதற்கு காத்துக் கொண்டிருக்கிறது. களத்திலே இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கின்ற காவல் துறை நண்பர்களுக்கும் கட்டாயம் அந்த இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்து விடுகிறேன், ஒரேயொரு நிமிடம். 15 நிமிடங்கள் வாங்கியிருக்கிறேன். 15 நிமிடங்கள் வாங்கியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினருடைய நேரம் போய்விடும்.

**திரு. தி. வேல்முருகன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு போனஸ். இப்போது சிறப்பான இலாபம் ஈட்டுகின்ற அளவிற்கு, நிவர்த்தி செய்து வருகின்ற நம்முடைய போக்குவரத்துக் கழகம் அவர்களுக்கு 25 சதவிகிதம் போனஸ் தருவதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும்.

அதேபோல ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்று, அவர்களுக்கு அந்த ஓய்வூதிய நிதியைத் தங்குதடையில்லாமல் வழங்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். அதுமாதிரி ஏற்கெனவே அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். ஓய்வுபெறுபவர்களுக்கு நீங்கள் இலவச பாஸ் தருகிறீர்கள். ஆனால் அதை மாற்றி, ஓய்வூதியம் வாங்குகின்றவர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்கள், இருவருக்குமே அந்த இலவச பாஸ் அனுமதியை... (மணியடிக்கப்பெற்றது) 15 நிமிடங்களுக்கு அனுமதி வாங்கியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) திரு. வேல்முருகன், காலையில் சொல்லியபடி உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 13 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அடுத்த உறுப்பினர், திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. வேல்முருகன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஜாண் ஜேக்கப், அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பா.ம.க. விற்குப் பிறகு, . . .

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறையின் அமைச்சர் அவர்களுடைய பணிவான கவனத்திற்கு, கடந்த கால ஆட்சியின்போது, இலாயக்கற்ற பேருந்துகள் என்று ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்தி, அவற்றை ஏலம் விடுகின்றபோது, 77 பேருந்துகளை, வெறும் 5 இலட்சம் ரூபாய்க்கு மட்டும் ஏலம்விட்டு அரசுக் கணக்கிலே வரவு



வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய 37 பேருந்துகள் வெறும் மூன்று இலட்சம் ரூபாய் அவற்றிற்கு விலை. இதில் மிகப்பெரிய முறைகேடு நடந்திருப்பதாக நாங்கள் அஞ்சுகிறோம். அந்தத் தொகை எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் இருக்கின்றது. அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களினுடைய ஆண்டறிக்கைகளைப் படித்தபோது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை.

பிற்பகல் 12-25

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** வாய்ப்பினைத் தந்த சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனது கருத்துகளைப் பதிய வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை என்கிறபோது, குறைகளும், நிறைகளும் கலந்திருப்பது இயல்பு. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலேயே நிறைகளைப் பற்றிப் பேசும்போது, அனைத்துத் தரப்பு மக்களையும் மனம் குளிரச் செய்து, சாதனை படைத்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சியினர் குறைகளைத் தேடித் தேடியே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

கடந்தமுறை ஆட்சிக்கு வந்தவர்கள், “கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி” எனச் சொல்லிக்கொண்டு ஆட்சி நடத்தினார்கள். அனைத்துத் தரப்பினரையும் காலி செய்துவிட்டுச் சென்றார்கள். போக்குவரத்துத் துறையையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அதிலும் அவர்கள் காலி இடங்களைக்கூட கண்டுகொள்ளவில்லை. பொது மக்களும், தொழிலாளர்களும் போதும், போதும் என்று ஆகிவிட்டார்கள். அவற்றையெல்லாம் விலாவாரியாக விளக்க நான் விரும்பவில்லை. காரணம், அவை எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.

அவர்கள் சீரழித்துவிட்டுச் சென்ற போக்குவரத்துத் துறையை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புனரமைப்புச் செய்து, புதுவாழ்வு தந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், ஒளிரும் விண்மீனாக இந்தத் துறை மிளிர்ந்துகொண்டிருக்கிறது என்றால் அது மிகையல்ல. சிறந்த

நிர்வாகத்தால், நஷ்டத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இலாப நோக்கை நோக்கிப் பயணித்து வருவதிலிருந்தே இதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்கூட மணம் உண்டு" என்பதை முழுமையாக நம்புகிற நாங்கள், கூட்டணிக் கட்சியின் பணிகளை, செயல்பாடுகளை உள்ளபடியே மனம் திறந்து பாராட்டுகிறோம்.

தமிழகத்தில் தனியார் பஸ்கள் அரசுடைமை ஆக்கப்பட்டபோது, அவற்றின் எண்ணிக்கை 600. ஆனால், இன்று நிர்வாகத்தின், தொழிலாளர்களின் உழைப்பால், பொதுமக்களின் நல்லாதரவால், அபார வளர்ச்சி பெற்று 17,269 ஆக வளர்ந்து, 16,200 வழித் தடங்களில் பயணிக்கின்றன. 1,000 spare பஸ்கள் உள்ளன என்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயமாகும். சராசரியாக 400 முதல் 600 கிலோ மீட்டர்கள் வரை பயணிக்கும் இப்பேருந்துகள், தினமும் ஒரு கோடியே 69 இலட்சம் பயணிகளைச் சுமக்கின்றன. எனவே, இத்துறையானது தமிழக அரசின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. பெரும் வசதி படைத்தவர்களைத் தவிர, அத்தனை பேரும் தினமும் பயணிப்பது அரசுப் பேருந்துகள் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது. எனவே, இத்துறைக்கு தமிழக அரசு இன்னும் அதிக ஊக்கம் கொடுக்க வேண்டும்.

இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் இயங்குகிற பேருந்துகள், தமிழக அரசுப் பேருந்துகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனால், பல்வேறு சிக்கல்களையும், நெருடல்களையும் போக்குவரத்துக் கழகங்கள் சந்திக்கின்றன. எனவே, எத்தனையோ வளர்ச்சிப் பணிகளுக்கு தமிழக அரசு மானியத்தை அள்ளி வழங்குகிறபோது, இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இன்னும் அதிக மக்கள் சேவையாற்ற வேண்டுமென்ற கருத்தை எண்ணத்தில் கொண்டு, அதிக மானியம் வழங்க வேண்டும் என்று இம்மன்றத்தின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றவாறு புதிய பேருந்துகளை அரசு இயக்க வேண்டும். குறிப்பாக, அரசுப் பேருந்துகளையே நம்பியுள்ள குமரி மாவட்டத்தில் இன்னும் குறைந்தபட்சம் 200 புதிய வழித்தடங்களையாவது இயக்க வேண்டும். மக்களுக்குப் போதிய அரசுப் பேருந்துகள் இல்லாததால், வேன்களையும், சிற்றுந்துகளையும் நம்ப வேண்டியுள்ளது. அவை போட்டிபோட்டுக் கொண்டு அரசுப் பேருந்து வருவதற்கு முன்பாகவே மக்களை ஏற்றிக்கொண்டு



சென்றுவிடுகின்றன. இங்கு சிற்றுந்துகளுக்கு permit வழங்கப்பட்டுள்ள வழித்தடத்திற்கும், அவை இயங்குகின்ற தடத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதனால், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. கிராமங்களில் ஓர் ஊருக்கு ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று பேருந்துகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்கின்றன. பின்னர், பல மணி நேரத்திற்குப் பேருந்துகள் செல்வதில்லை. இதனால், கிராமப்புறங்களில் வசிக்கும் பொது மக்களும் மகிழ்ச்சியாக இல்லை. எனவே, போக்குவரத்துத் துறையின் சிறந்த நிர்வாகத்தை மாவட்ட அளவில் ஏற்படுத்த வேண்டும். இதற்குப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஓர் ஆலோசனைக் கூட்டத்தை மாதந்தோறும் செயல்படுத்த வேண்டும். பேருந்துகளின் நேரத்தைச் சீராக்கினாலே மக்களுக்கு வசதியும், போக்குவரத்துக் கழகங்களுக்கு நல்ல வருவாயும் கிடைக்கும்.

கேரள மாநிலத்தில் target-க்கு மேல் வருவாய் கொண்டுவந்தால் ஓட்டுநர், நடத்துநர்களுக்கு collection bata அதிகம். இத்திட்டத்தை இங்கு செயல்படுத்தினால் மத்தியில் இரயில்வே துறை இலாபத்தில் இயங்குவதுபோல, தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் இலாபத்தில் இயங்கும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், நாகர்கோவில் மண்டலம், டீசல் சிக்கனத்தில் அகில இந்திய அளவில் சாதனை படைத்துள்ளது. இதில் அதிகாரிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொழிலாளர்கள் யாரும் மகிழ்ச்சியடையவில்லை. காரணம், டீசல் சிக்கனத்திற்கு அதிகாரிகள் காட்டும் கெடுபிடியின் காரணத்தால், டீசல் சிக்கனமும், அதற்கான பரிசும் கிடைத்துள்ளது. அதற்குப் பிரதிபலன் பெரும் வருவாய் இழப்பு. எடுத்துக்காட்டாக, தமிழக அரசு, குமரி மாவட்டம், இராணித்தோட்டம் பணிமனையில் மட்டும் நடைமுறைப்படுத்திப் பாருங்கள். டீசல் சிக்கனம் தேவையில்லை, வருமானத்தைக் காட்டுங்கள் என்று சொல்லுங்கள், இலாபம் தானாகவே வரும். அகில இந்திய அளவில் சிறந்த பஸ் பாடி கட்டும் நிறுவனமாக குமரி மாவட்டத்திலுள்ள இராணித்தோட்டம் பணிமனை திகழ்ந்தது. கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் தனது தேவைகளை இந்த நிறுவனம் மூலமே நிறைவேற்றி வந்தது. மிகத் திறமையான ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இன்று சம்பந்தமில்லாத பணிகளில் உள்ளனர். மீண்டும் இங்கு நிரந்தரமாக பஸ் பாடி கட்டும் பிரிவைத் தொடங்க வேண்டும். இதனால், அரசுக்கு இலாபமும் நற்பெயரும் கிடைப்பதுடன் ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

**பிற்பகல் 12-30**

2,000 பேருந்துகளுக்கு ஒரு கழகம் அமைக்கப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. மதுரை கோட்டத்தை இரண்டாகப் பிரித்தால் நாகர்கோவிலைத் தலைமையகமாகக்கொண்டு கன்னியாகுமரி மண்டலப் போக்குவரத்துக் கழகம் அமைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பல்கலைக்கழகங்கள், அரசு நிறுவனங்கள் என அனைத்துத் துறைகளுக்கும் குமரி மாவட்டத்தவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, போக்குவரத்துத் துறையின் தலைமை அலுவலகத்தையாவது நாகர்கோவிலில் அமைத்துத் தந்தால் தமிழக முதல்வர் கலைஞர்மீதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மீதும் குமரி மாவட்ட மக்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை இம்மாமன்றத்தின்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் பற்றிய சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த 27-3-2007 ஆம் நாள் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் பல நல்ல கருத்துகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தீர்கள். இவற்றை நீங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தி நற்பெயரும் நன்மதிப்பும் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முந்தைய கலைஞர் ஆட்சியில் இருந்ததுபோல ஊதிய ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை என கொண்டுவர வேண்டும். இறந்துபோன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு உடனடியாக வேலை வழங்க வேண்டும். ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போன்ற பென்ஷன் வழங்க வேண்டும். தற்போது பணியில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் மின் வாரியத்தைப்போல் ஊதியம் வழங்க வேண்டும். போக்குவரத்துத் துறையையும் வாரியம் ஆக்க வேண்டும். கம்பெனி சட்டத் திட்டத்தின்படி over time வேலை பார்ப்பவர்களுக்கு இரட்டைச் சம்பளம் வழங்க வேண்டும். ஆனால், போக்குவரத்துக் கழகத்தில், குமரி மாவட்டத்தில் முழுச் சம்பளம்கூட வழங்காமல், அரைச் சம்பளம், முக்கால் சம்பளம் வழங்கப்படுகிறது. திருவிழா ஸ்பெஷலுக்கு டிரைவர் மற்றும் கண்டக்டர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு (மணியடிக்கப்பெற்றது) 14 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. இது அரசு ஆணையா அல்லது அதிகாரிகள் ஆணையா என்பது தெரியவில்லை. மேலும், காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். விபத்துக் காலங்களில் ஓட்டுநர், நடத்துநர்கள் சொந்த ஜாமீனில் வெளியே வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.



முந்தைய ஆட்சியைவிட தற்போது 300 கோடி ரூபாய் வசூல் அதிகமாகி உள்ளதாகத் தெரிகிறது. இது தமிழக அரசின் நிர்வாகத் திறமைக்குக் கிடைத்த வெகுமதி ஆகும். இன்னும் சொல்லப்போனால், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு Collection incentive இல்லை. மற்ற பணியாளர்கள் அனைவருக்கும் கிலோ மீட்டர் incentive வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே, தமிழக அரசு collection incentive என அறிமுகம் செய்தால் இன்னும் வருவாய் அதிகரிக்கும். சுருக்கமாகச் சொன்னால், இரயில்வே துறையைப் போன்று தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையும் இலாபம் ஈட்டும் என்பது உறுதி. மேலும், கடந்த ஆட்சியில் போடப்பட்ட ஊதிய நிலுவைத் தொகையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜேக்கப், நேரமாகிவிட்டது.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** தொகுதிப் பிரச்சினை. அடுத்ததாக, குமரி மாவட்ட மக்களின் குமுறல் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1-11-1956 ஆம் நாள் நாங்கள் கண்ணீரும், செந்நீரும் சிந்தி தாய் தமிழகத்துடன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் வரலாற்றில் 50-வது பொன்விழா காணும் வரலாற்று நாயகர், தமிழகத்தின் முத்தமிழ் அறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை*
*மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை"*

என்று சென்ற ஆட்சியிலே 17 நாட்கள் சிறைச்சாலையிலே போர்க்கோலம் பூண்டிருந்த போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

25 இலட்சம் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வசதியும், ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆகியும் பஸ் கட்டணத்தை உயர்த்தாமலும் இருக்கிற தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திண்டுக்கல்லிலிருந்து கம்பம் செல்லக்கூடிய பேருந்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நான் பயணம் செய்தேன். மழைக் காலமாக இருந்ததால் பேருந்துக்குள் குடை பிடிக்க வேண்டிய நிலை இருந்தது. உட்காருவதற்கு சீட் தேடினேன், சீட்டிலே பாதி இல்லை. நிற்கலாம் என்று கம்பியைத் தேடினேன், கம்பியும் இல்லை. இறங்கலாம் என்று படியைத் தேடினேன், படியும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஓட்டுநரிடம் பேருந்துக்குரிய அடையாளமே இல்லையே என்று நான் புலம்பியபோது, அவர் கூறினார், 'அது இல்லை, இது இல்லை என்று என்னிடம் சொல்லி எந்தப் பலனும் இல்லை, இங்கே எனக்கு பிரேக்கே இல்லை' என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) பிரேக்கே இல்லாத பேருந்து ஓட்டிய அந்த அரசுக்கு மக்கள்தான் பிரேக்கைப் போட்டார்கள். தமிழகத்தில் ஆறாயிரம் பேருந்துகள் ஓட்டவே முடியாத பழைய பேருந்துகள் இருந்துகொண்டிருக்கின்றன. சென்னை மாநகரத்தில் 1990 ஆம் ஆண்டு முதலிலிருந்து இன்று வரை கிட்டத்தட்ட 2,000-க்கும் மேற்பட்ட பழுதுபட்ட வாகனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் கடந்த கால ஆட்சியிலே அது இல்லை, இது இல்லை என்று குறிப்பிடுகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசும்போது அது இருந்தது இது இருந்தது என்று சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் பேசுங்கள் அம்மா. (குறுக்கீடு) அவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** எது இருந்தது, எது இல்லை என்பதனை மக்கள் கடந்த காலத்தில் நிரூபணம் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஆறு வருடம் அல்லது ஏழு இலட்சம் கிலோ மீட்டர் என்று ஓடினால் அந்த வண்டியினுடைய ஆயுள் முடிந்துவிடும். அதற்குமேல் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதே சமயத்தில் இப்போது ஆறாயிரம் பேருந்துகள் தமிழகத்திலே அப்படிப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருந்தவற்றை மாற்றி, புதிய பேருந்துகள் ஆயிரம் வாங்கியுள்ளதாக நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்



கூறியுள்ளார்கள். அதை நான் வரவேற்கின்றேன். மேலும் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு, இலவச பஸ் பாஸ் மாணவர்களுக்கு கழகம் தந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் 1,386 கோடி ரூபாயை அரசு, போக்குவரத்துக் கழகங்களுக்கு கொடுத்தால்தான் புதிய பேருந்துகளை வாங்குவதற்கு அதைப் பயன்படுத்த முடியும் என்ற கருத்தையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

உலகம் முழுவதும் பொதுப் போக்குவரத்தின் அவசியம் தற்போது வலியுறுத்தப்படுகிறது. இதன்மூலம் அன்னியச் செலாவணி மிச்சமாகிறது. மாசு கட்டுப்படுத்தப்படுகிறது. நீண்டகாலப் பலன்களுக்கு பொதுப் போக்குவரத்தே சிறந்தது. மேலும் கிராமப்புறங்களுக்கு கூடுதல் பேருந்துகள் விடப்படவேண்டும். கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களை நோக்கிச் சென்றிட தங்கள் வாழ்க்கையின் அனுதினச் செயல்பாட்டிற்கு மிகவும் உதவியாக இருப்பது பேருந்துகள்தான். பேருந்துகள் கூரைமீது கிராம மக்கள் அமர்ந்து செல்லும் காட்சி இப்போதும் தொடர்கிறது என்பதனை அரசினுடைய கவனத்திற்கு நான் பணிவோடு கொண்டுவர விரும்புகின்றேன்.

பழைய பேருந்துகள், சென்னையில் தாழ்தள சொகுசுப் பேருந்து உள்ளிட்ட, Yellow Line, Blue Line, M-போன்ற பஸ்கள் விடப்பட்டுள்ளன. ஆனால், கட்டணம் அரசு அறிவிக்காமல் இரண்டு மடங்கு உயர்வாக வசூலிக்கப்படுகிறது. எல்லா நிறுத்தங்களிலும் நின்று செல்லும் M-பேருந்தில் நகரப் பேருந்தைவிட ஒரு ரூபாய் கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இதை முறைப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைத்துக்கொள்கின்றேன்.

போக்குவரத்துத் துறையில், பேருந்தின் சக்கரங்களாகச் சுழல்பவர்கள் தொழிலாளர்கள். சென்ற ஆட்சியிலே 17 நாட்கள் சிறை வைக்கப்பட்டார்கள். அவர்களால் பறிக்கப்பட்ட அனைத்துச் சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்படுமென்று, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டது. 17 நாள் ஊதியம் தவிர இதர சலுகைகள், உரிமைகள் இன்னமும் வழங்கப்படவில்லை என்பதையும் பணிவோடு தங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். பி.பி.டி. வழக்குகளை திரும்பப் பெறுவது, .மெமோக்கள், இன்கிரிமென்ட், ரெவியூ போன்ற பாதிப்புகள் அகற்றப்படும் என கடந்த கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், முழுமையாக இத்தகைய பணிகள் நடைபெறவில்லை. பறிக்கப்பட்ட சலுகைகளான இரவுப் பணி

நிர்ணயித்தல், .டபுள் ட்யூட்டி ஊதியம், தேநீர், நீதிமன்ற வழக்குகளுக்குச் சென்றால் வருகைப் பதிவு , சீருடை, பண்டிகை முன்பணம், விபத்தின்றி ஓட்டியதற்கான வெகுமதி, உணவகம், கழகங்களில் டிஸ்பென்சரி வசதி, மலைப் பிரதேசப் படி உள்ளிட்ட பல சலுகைகள் அதி.மு.க. ஆட்சியிலே பறிக்கப்பட்டன. தாங்கள் தருவதாகக் கூறினீர்கள். இன்னமும் ஏன் தரவில்லை என்ற கேள்வியை உங்கள் முன்னால் சமர்ப்பிக்கின்றேன்.

அதிக பணிப் பளுவை தொழிலாளர்கள் சுமக்கிறார்கள். மனித நேயமே இல்லாமல் பேருந்துகளின் ஓடும் தூரத்தை அதிகப்படுத்துவது, டீசல் சிக்கனத்தைக் கட்டாயப்படுத்தி, முரட்டுத்தனமாகத் திணிப்பது, தண்டிப்பது போன்றவை முறையான விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தருமபுரியிலிருந்து திருவண்ணாமலைக்கு 1,200 கிலோ மீட்டர் ஓட்டிச் செல்லவேண்டிய சூழ்நிலையை தொழிலாளர்களுக்கு இப்போது நிர்வாகம் ஏற்படுத்தி வருகிறது. ஓசூரிலிருந்து மைசூருக்கு 1,084 கிலோ மீட்டர் ஓட்டிச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. இதன் காரணமாகத்தான் விபத்துகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டிலே கிழக்குக் கடற்கரைச் சாலையில் 52 விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. 200 கிலோ மீட்டர் ஓட்டிய இடத்தில் 16 மணி நேரத்தில் 550 கிலோ மீட்டர் ஓட்டப்படவேண்டுமென்று நமது அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அது எந்த வகையிலே நியாயமானது என்பதைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். இத்தகைய விபத்துகள் நடக்கின்றபோது, சொந்த ஜாமீனில் வெளியேவந்த நிலை போய், கைது செய்து மூன்று நாட்கள் தொழிலாளிகள் சிறைக்கு இப்போது அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஓட்டுநர் லைசென்சில் புள்ளி வைக்கும் முறையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1999-லே நீக்கினார்கள். ஆனால், தற்போது ஓட்டுநர் உரிமத்தை இரத்துச் செய்வது, சஸ்பென்டு செய்வது என்ற நடவடிக்கை தொடர்கிறது. இது மாற்றப்பட வேண்டும். இது தொழிலாளர்கள் மத்தியில் கடுமையான வேதனையை, அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

*பிற்பகல் 12-40*

மேலும் பராமரிப்புப் பணிகளுக்குப் போதிய ஊழியர்கள் இல்லை. சராசரியாக 23 வண்டிகளை இரண்டு ஊழியர்கள் பராமரிப்பதென்பது



சாத்தியமில்லாத ஒன்றாகும். 1976-ல் ஒரு வண்டிக்கு 7.5 ஊழியராக இருந்ததை அ.தி.மு.க. ஆட்சியில் 6.5 ஆக மாற்றினார்கள். அது நம்முடைய ஆட்சியிலே மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பராமரிப்புப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். சிக்கனம் என்ற பெயரிலே ஒரு லிட்டர் டீசலில் 4.8 கிலோ மீட்டர்தான் வண்டியை ஓட்ட இயலும். ஆனால் அது 6.5 அல்லது 7 கிலோ மீட்டர் ஓட்டப்படவேண்டும் என்று அதிகாரிகளால் விரட்டப்படுவதோடு memo கொடுக்கப்படுகிறது. ஊதியத்தைப் பிடித்தம் செய்கிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்ததை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று அ.தி.மு.க. ஆட்சி மாற்றியது. அது இப்போதும் தொடர்கிறது. அதுவும் மாற்றப்பட வேண்டும்.

முன்பெல்லாம் தொழிலாளர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் 1 இலட்சம் ரூபாய் வரை கழகம் செலுத்தி வந்தது. இப்பொழுது undertaking கடிதம் கொடுக்கிறார்கள். மருத்துவமனைகளில் சிகிச்சை நடைபெறவில்லை. மருத்துவ உதவித் தொகையை ரூபாய் ஒரு இலட்சம் என்பதை ரூபாய் ஒன்றரை இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும். தொழிலாளர்கள் இறந்தால் தரப்படும் ஒரு இலட்சத்தை ஒன்றரை இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** ஒரே ஒரு நிமிடம். ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் குடும்பங்கள் புறநகர்ப் பேருந்துகளில் பயணம் செய்ய அவர்களுக்கு அனுமதி வேண்டும். 378 ஆம் எண் அரசாணை விஷயத்தில் 30 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அந்தப் பணம் வழங்கப்பட வேண்டும். OSSR 1,500 ஊழியர்கள், தொழிலாளர்களுக்கு, பென்ஷன் வழங்க அரசு முன்வர வேண்டும்.

1998-ல் பென்ஷன் திட்டம் நம்முடைய தி.மு.க. அரசாங்கம் கொண்டு வந்தது. அ.தி.மு.க. ஆட்சி கைவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் 2013 உடன் இந்தப் பென்ஷன் திட்டம் இறுதியான நிலைக்கு வரக்கூடிய நிலையிலே இருக்கிறது. ஆகவே, அதைப் புதிய ஆய்வுக்கு உட்படுத்த

வேண்டும். சென்ற ஆட்சியிலே போடப்பட்ட 2,700 பேர் பணி நியமனம் என்பது உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவுப்படி அவர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, உட்காருங்கள். ஏழு நிமிடங்கள்தான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அப்படியானால் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** O.D. என்ற பெயரில் வருடத்திற்கு 10½ கோடி ரூபாய் செலவு. இப்போது வேலை செய்யாமலேயே மாதத்திற்கு ரூ.7 ஆயிரம், ரூ.8 ஆயிரம் வாங்கக்கூடிய, கடந்த காலத்தில் இருந்த நிலைமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் தொடரக் கூடாது. தொழிற்சங்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய ஊழியர்கள், நிர்வாகிகள் கட்டாயமாக வேலைக்குச் செல்ல வேண்டும்.

அதேபோன்று வெளி மாநிலங்களிலே இருக்கக்கூடிய பேருந்துகளைத் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது. ஏற்கெனவே தனியாரிடம் உள்ள வாகனங்களை வாடகைக்கு எடுத்து தனியார் ஓட்டுனர்களை நியமிக்கக்கூடிய அத்தகைய அரசாணை இருந்தது. அது மாற்றப்பட வேண்டும்.

திண்டுக்கல்லிலே மதுரை கார்ப்பரேஷன் மிகுந்த பலவீனமான ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. 90 கோடி ரூபாயை தொழிலாளர்களுடைய P.F. பணத்திலே இருந்து அவர்கள் எடுத்துச் செலவு செய்திருக்கிறார்கள். Postal வைப்பு நிதி, கடன் சொசைட்டி, housing சொசைட்டி போன்றவற்றிற்கு பிடித்தம் செய்யப்படும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகளில் சில கருத்துகளைச் சொல்ல அனுமதித்ததற்காக முதலிலே தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்ட திட்டங்களையும், கேட்காத திட்டங்களையும் செயல்படுத்தும் நமது முதல்வர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் மக்கள் கோரிக்கைகளைக் கேட்டவுடன் செய்து தரும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டுகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.



தமிழகத்தில் அரசு சார்ந்த போக்குவரத்துத் துறை ஏழையெளிய மக்களின் நலன், குக்கிராமங்களை நகரத்தோடு இணைப்பது, பள்ளி மாணவர்கள், பொதுப் பணியில் ஈடுபடுபவர்கள், முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்ற அடிப்படையில் உதவிகளைச் செய்கிறபோது மற்ற தொழில் நிறுவனங்களில் மையமாகக் கருதப்படும் இலாப நோக்கை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் சேவை மனப்பான்மையோடு, பொது நன்மை கருதி போக்குவாத்துத் துறை இயக்கப்படுகிறது.

மக்களுக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்துகிற போக்குவரத்துத் துறையைச் சீரமைப்பதும், பாதுகாப்பதும், வளர்ப்பதும் அனைவரின் கடமையாகும். இந்தக் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றுகிற நமது தமிழக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மீண்டும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கிய பெருமை முதல்வர் கலைஞர் அவர்களையே சேரும். ஆனால் 2002 ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியில் போக்குவரத்துத் துறையை 50 சதவிகிதம் தனியார்மயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்து, தொழிற்சங்கங்கள், மக்கள் போராட்டத்திற்குப் பின்னால் கடந்த கால அரசு அதை நிறுத்தி வைத்தது.

முதல்வர் கலைஞர் அவர்கள் முந்தைய அரசு பிறப்பித்த உத்தரவைத் திரும்பப் பெற்று அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பாதுகாத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 21 போக்குவரத்துக் கழகங்களாகச் செயல்பட்டதை 7 போக்குவரத்துக் கழகங்களாகக் குறைத்ததன்மூலம் நிர்வாகச சிக்கனமும், தேவையற்ற போட்டிகளும் தவிர்க்கப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி AITUC சார்பில் நாங்கள் வலியுறுத்துவது, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களையும் ஒரே போக்குவரத்துக் கழகமாக உருவாக்க வேண்டும். மாவட்ட அளவில் மண்டல நிர்வாக அமைப்பை உருவாக்கலாம். அதன்மூலம் நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, வீண் போட்டிகளைத் தவிர்க்கலாம். ஆந்திராவில் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

*பிற்பகல் 12-45*

விபத்துகள், போக்குவரத்துத் துறைக்கு, பெருமளவில் நஷ்டத்தை உண்டாக்குகின்றன. நஷ்டஈடு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை, 104 கோடி ரூபாய் உள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பில்

குறிப்பிட்டுள்ளார்கள். விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையை உடன் வழங்கி, பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பாதுகாத்திட வேண்டும்.

விபத்துகள், பொருளாதார நட்டமாக மட்டுமல்லாது, வேறு வகையான பதற்றத்தையும், ஈடு செய்ய முடியாத சமூக இழப்பையும் தோற்றுவிக்கிறது. எனவே, விபத்துகளைத் தடுக்க, கூடுதல் கவனம் தேவை. பாதசாரிகளை, வேறு வாகனங்களைப் பயன்படுத்துவோரை, போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கும் நிலைக்குள்ளாக்க வேண்டும்.

'போக்குவரத்து வாரம்' என்ற விழிப்புணர்வு நிகழ்வுகளை, சம்பிரதாய நிகழ்வுகளாக நடத்தாமல், அதைச் சமூக உணர்வோடு நடத்த வேண்டும். போக்குவரத்துத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க, அரசு நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட முத்தரப்பு அமைப்புகளை அமைத்திட வேண்டும்.

தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தம், கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அந்த முறை நீக்கப்பட்டு, மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

*1-9-1998* முதல் அமலில் உள்ளதும், Trust மூலம் நிர்வகிக்கப்படுவதுமான போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான pension திட்டத்தினை, போதிய நிதியின்மை காரணமாக, தொடர்ந்து செயல்படுத்துவதில், நடைமுறைச் சிக்கல் உள்ளதாகத் தெரிகிறது. முந்தைய ஆட்சியில், *21* மாதங்கள் pension வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் ஜனவரி *2005* முதல் pension வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையானது, ஓராண்டுக்கு மேல் வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையைத் தவிர்த்திட, அரசு ஊழியர் மற்றும் மின்சார ஊழியர்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து pension வழங்குவது போல, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் pension திட்டத்தையும் அரசு ஏற்று நடத்த வேண்டும்.

அதைப்போல, முந்தைய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, G.O. No.42, Transport (RW), *27-5-2005*, இந்தச் சட்டம்-இப்போது உயர் நீதிமன்றம், தொழிலாளர்களுக்கு ஆதரவான தீர்ப்பை *27-9-2006* அன்று வழங்கியுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து, இப்போது நமது அரசு, மேல்முறையீடு செய்கிற நிலையை எட்டியிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்குச் சாதகமாக வரும் தீர்ப்புகளை எதிர்த்து



இந்த அரசு appeal செய்யாது, உயர் நீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் வழங்கும் திட்டம் சிறப்புக்குரியது. *3* ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளுக்கு, சுமார் *150* கோடி செலவிடுகிறபோது, அரசே, body கட்டும் தொழிற்சாலைகளைத் தொடங்கி கூண்டு கட்டுவதும் இலாபகரமாக இருக்கும். போக்குவரத்துக் கழகம் body கட்டும் தொழிற்சாலையை, தொழில் வளர்ச்சி இல்லாமல் இருக்கும் சிவகங்கை பகுதியிலே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து சம்பந்தப்பட்ட கொள்கைக் குறிப்பில் மினி பேருந்துகள் பயன்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அவற்றை அரசு சார்பில் இயக்க வேண்டும். அதைப்போல, பல மாநிலங்களில் உள்ளதுபோல, புறநகர்ப் பகுதிகளுக்கு share auto-க்களைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

தொலை தூரங்களுக்கு Ultra Deluxe Bus வசதி செய்து கொடுக்கிற அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, அனைத்துத் தலைநகரங்களிலும் இருந்து மாநிலத் தலைநகருக்கு Air condition Bus விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போக்குவரத்துத் துறை, தொடர்ந்து இலாபம் ஈட்டுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துறையை முடுக்கிவிடுவதன்மூலம் வாகனச் சட்ட விதிகளைச் சிறப்பாக அமல்படுத்திட முடியும். வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் licence, பதிவுப் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு விதிகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். வெளிப்படையான நிர்வாகத்தைக் கொண்டுவருவதன்மூலமும், மக்களை வீண் சிரமத்திற்கு ஆளாவதிலிருந்தும், ஊழல்களிலிருந்தும் பாதுகாக்க முடியும்.

பள்ளி நேரங்களில் கிராமப்புறங்கள் வழியாகச் செல்லும் mofussil பேருந்துகளிலும் மாணவர்கள் இலவசப் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். தமிழகம் முழுவதும் பள்ளி நேரங்களில் குழந்தைகள் பாதுகாப்பு இல்லாமல் பயணம் செய்கிற ஒரு நிலை நீடிக்கிறது. அதற்கு மாற்று நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். நீண்ட தூரம் செல்லும் தனியார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. க. குணசேகரன்:** ஒன்றே ஒன்று சொல்லி முடித்துவிடுகிறேன். நீண்டதூரம் செல்லும் தனியார் Omni பேருந்துக் கட்டணங்களை அரசு நிர்ணயிக்க வேண்டும். திருவிழாக்கள், விடுமுறைக் காலங்களில் திடீர் கட்டண உயர்வு ஏற்படுத்துவதால், மக்கள் பாதிப்படைகிறார்கள். தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிவகங்கை தொகுதியில் நகர, நீண்ட தூர புதிய வழித்தடங்கள் வேண்டுமென்று நிறையக் கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம். நிறையத் திட்டங்களை அமைச்சர் செயல்படுத்தியிருக்கிறார். இருந்தாலும், கூடுதலாக இன்னும் சில வழித்தடங்களை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன். திரு. ரா. வரதராஜன், 7 நிமிடங்கள்.

***திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, புதூர் யூனியன், தவசலிங்கபுரம் குக்கிராமத்தில் பிறந்த என்னை, காமராஜர் பிறந்த புண்ணிய பூமியான விருதுநகர் தொகுதியில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் தலைவர், அண்ணாச்சி வைகோ அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, என்னுடைய தொகுதிக்கு, என்னுடைய வெற்றிக்காகப் பிரச்சாரத்திற்கு வந்து, எனக்கு வெற்றி தேடிக் கொடுத்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடிகளுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடிகளுக்கும் நன்றி சொல்லி, பம்பரம் சின்னத்தில் வாக்களித்து என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த என் தொகுதி மக்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இந்தப் போக்குவரத்து மானியத்தில் பேச வாய்ப்புக் கொடுத்த மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி இந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்தாகிவிட்டதா?



**திரு. ரா. வரதராஜன்:** என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். சென்ற வருடம் நான் கன்னிப் பேச்சு பேசவில்லை. ஆகவே, எனக்கு 5 நிமிடங்கள் அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்குமாறு உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பே இல்லை.

**திரு. ரா. வரதராஜன்:** நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் வாகன போக்குவரத்தின்மூலமாக நிகழும் விபத்துகள் மற்றும் அவற்றால் ஏற்படும் உயிர் இழப்புகளைத் தடுக்கும் பொருட்டு, சாலைகளை மேம்படுத்துதல், பாதுகாப்பாக வாகனங்களை ஓட்டுதல், வேகக் கட்டுப்பாடுகள் போன்றவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, ஓட்டுநர்கள் குடிபோதையில் வாகனங்களை ஓட்டும்போது அதிக வேகமாக வாகனங்களை ஓட்டுவதால்தான் விபத்துகள் நேரிடுகின்றன. எனவே, குடித்துவிட்டு குடிபோதையில் வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து அவர்களின் ஓட்டுநர் உரிமத்தை இரத்து செய்ய வேண்டும். அவர்களுக்குச் சிறைத் தண்டனையும் வழங்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது மகேந்திரா, டாட்டா சுமோ போன்ற 4 சக்கர வாகனங்களுக்கு, 4 வருடங்களுக்குத்தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது. அதாவது, 48 மாதங்களுக்கு உட்பட்ட வண்டிகளுக்குதான் T-Board permit கொடுக்கப்படுகிறது. அதையும், ஆட்டோக்கள் போன்று எப்போதும் பெர்மிட் கொடுக்கலாம் என்ற முறையை மாற்றினால், அந்த வாகன ஓட்டுநர்கள் பயன் பெறுவார்கள். பெரும்பாலும் படித்த இளைஞர்கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் ஓட்டுநர் உரிமம் பெற்று ஏதாவது தொழிலுக்குச் செல்லலாம் என்று கருதுகிறார்கள். அந்த நேரத்தில் 50,000 ரூபாய் முதலிட்டு, ஏதோ கம்பெனிகளில் பைனான்ஸ் பெற்று, வாகனத்தை ஓட்டுவதற்கு முன்வருவார்கள். இதனால் அரசாங்கத்திற்கும் வருமானம் அதிகமாகக் கிடைக்கும் என்று இந்த மாமன்றத்தில் தெரியப்படுத்துகிறேன். இன்னும் அதிகமான போக்குவரத்து வசதி சில கிராமப்புறங்களில் இல்லை, பேருந்துகள் செல்ல முடியவில்லை. ஆகையால், கிராமப்புறங்களில் வசதியாக மினி பஸ்களை இயக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

கிராமப்புறங்களில் வாழும் ஏழையெளிய மக்கள் திருவிழாக் காலங்கள் மற்றும் விசேஷ நாட்களில் லாரி, மினி லாரி, டிராக்டர்

போன்ற வாகனங்களில் செல்கிறார்கள். கிராமப்புறங்களில் T-Board வாகனங்கள் கிடைப்பது இல்லை. மேலும், லாரி, மினி லாரி, டிராக்டர்கள் போன்ற வாகனங்களில் அதிகமான ஆட்களை ஏற்றிச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால், பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிச் செல்லும்பொழுது விபத்துகள் நேரிடுகின்றன. அவர்களுக்கு இன்சூரன்ஸ் பணம் பெறமுடிவதில்லை. எனவே, இத்தகைய விபத்துகள் ஏற்படும் நிலையில் இறந்தவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு இந்த அரசாங்கம் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல் பழனி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் 2 சக்கர வாகனங்களில் செல்பவர்களை ஏதாவது ஒரு வாகனம் அடையாளம் தெரியாமல் அடித்துச் சென்றுவிட்டால் அவர்களுக்கும் இந்த அரசாங்கம் நஷ்டஈடு கொடுப்பதற்கு இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின்மூலமாக விபத்துகள் ஏற்படும்போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குபோட்டு நஷ்டஈட்டுப் பணத்திற்கு தீர்ப்பான பின்பும், பல ஆண்டு காலமாக உரிய பணத்தைக் கொடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டு வருகிறார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இந்த நஷ்டஈட்டுப் பணத்தை எதிர்பார்த்து பல்வேறு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதராஜன், உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. ரா. வரதராஜன்:** துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகிறார்கள். ஆகவே, இந்த அரசு பஸ்களில் விபத்திற்குள்ளான நபர்களுக்கு உடனடியாகப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐயப்பன். (குறுக்கீடு)

**திரு. ரா. வரதராஜன்:** அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் குளிர்சாதன வசதியுடன் மாவட்டத் தலைநகரான விருதுநகருக்கு ஒரு புதிய பேருந்து விட வேண்டும். விருதுநகருக்கு இதுவரை Ultra Deluxe பஸ்களே விடவில்லை, ஆகவே, அவற்றை அங்கு இயக்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் அளித்த கொடை, கழகத்தின் ஞானபீடம், இந்திய வரலாறும் இறுமாந்து நிற்கும் இன்னொரு வரலாறு. ஓய்வையும், சாய்வு நாற்காலியையும் ஒப்படைப்புச் செய்யா பேருழைப்பு. எழுதுகோலும் செங்கோலுமே இரு கைகள் எனக் கொண்ட தகைமைசால் தலைவர், அரியணைக்கு அரிமா நோக்கு ஐந்து முறை தந்தவர், சட்டப்பேரவையில் பொன்விழா காணும் சரித்திரத் தலைவர், எழுத்து வேந்தர் எண்ணிலா மக்களின் எழுச்சி வேந்தர், பாரில் பகலவனை எழுப்பும் வேந்தர், பண்பாட்டின் பழுத்த வேந்தர் என பன்முகம் கொண்ட ஐயன், தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இளமையை, இயக்கப் பணிக்காகத் தியாகம் செய்து கடமை மறவாமல் களப்பணி ஆற்றி உழைப்பால் உயர்ந்து, இன்று உள்ளாட்சியில் சரித்திரம் உருவாக்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் விடிவெள்ளி, (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் தளபதி, 'ஈங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்' என தமிழக மக்கள் எண்ணி, எண்ணி மகிழும் வண்ணம் வரலாறு படைக்கும் உள்ளாட்சி நாயகர், ஈராயிரம் ஆண்டில் இம்மண்ணில் யார் இவர்போல சீரார்ந்த தொண்டராய் இருப்பார் என வியக்கும் இளம் தலைவர் எங்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இன்று போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது எனது சில கருத்துகளை வழங்குவதில் நான் பெருமைகொள்கின்றேன்.

மாநகர், சிற்றூர், கடற்கரை, குப்பம் என பல நிலை மக்களும் போற்றும் வகையில் போக்குவரத்துத் துறை இன்று பொலிவோடு விளங்குகின்றது. ஒரு நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிப்பது போக்குவரத்து. இதனை அறிந்த நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தனியாரிடம் இருந்த போக்குவரத்தை 1971 ஆம் ஆண்டிலேயே நாட்டுடைமையாக்கினார்கள். தனியார் பேருந்து முதலாளிகள் வழக்குத் தொடுத்தனர். அவர்கள் தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்ற நீதி அரசர்கள் அளித்த தீர்ப்பில், இது ஒரு தொலைநோக்குத் திட்டம், தமிழ்நாட்டுக்குப் பயன்படக்கூடிய திட்டம், ஏன் இந்தியாவே

1,000 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டு மக்களின் வசதிக்காகப் பயன்படுத்தப்படும், அதற்கு முதல் தவணையாக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், அறிவிப்புகள் அறிவிப்புகளாக இருக்காது. திறக்கப்படும் கல்வெட்டுகள் வெறும் கல்வெட்டுகளாக மட்டும் இருக்காது. அவை எல்லாம் செயல்வடிவம் பெறும் என்பதற்கு அமைச்சர் அவர்களின் பதிலுரை இப்போது செயலாக்கத்திற்கு வந்திருப்பது ஒரு சான்றாகும்.

கடந்த 10 மாதங்களுக்குள் எத்தனை புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன என்றால், கடந்த டிசம்பர் மாதம் முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை தீவுத் திடலில் புதிதாக 100 பேருந்துகளைத் தொடங்கி வைத்தார்கள். அதேபோன்று, இரண்டு மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு தளபதியார் அவர்கள் தரமணியில் புதிதாக 100 பேருந்துகளைத் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு முக்கியப் பிரமுகர்கள் என்று இந்த 10 மாதங்களுக்குள் 2,000 புதிய பேருந்துகளைத் தமிழகம் முழுவதும் தொடங்கி வைத்து அரும் பெரும் சாதனை செய்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைச் சிற்பியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தலைவர் கலைஞர் அவர்கள்.

வரும் நிதி ஆண்டில் மேலும் 3,000 புதிய பேருந்துகள் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும், இதற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை வரவேற்கின்றேன். சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடியைப் போக்க, கலைஞர் அவர்கள் அதற்கு நிரந்தரத் தீர்வாகக் கொண்டுவந்ததுதான் மெட்ரோ இரயில் திட்டம். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில், அமைச்சர் தனது பதிலுரையில் பிற மாநிலங்களில் இயக்கப்படும் பேருந்துகள் போல ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எங்கும் நிற்காமல் துரிதமாகச் செல்லும் வகையில் yellow line, blue line பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும் என்று பேசினார்கள். அந்த அறிவிப்பு இப்போது செயல் வடிவத்திற்கு வந்துவிட்டது என்பது கண்கூடாகக் காண்கின்ற ஒரு நிகழ்வு. இதுபோன்று தமிழகத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அது விபத்து தடுப்புப் பணிகளாக மேற்கொள்ளப்பட உள்ளன என்பது நல்ல அறிவிப்பாகும்.

சென்னை மாநகரில் 14 கோடி ரூபாய் செலவில் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகள் நடைபெறும் என்பது வரவேற்பிற்குரியது. தலைவர் கலைஞர் ஆட்சியில் 15-1-2007 அன்று ஒரு நாள் மட்டும் போக்குவரத்துத் துறையின் மூலமாகக் கிடைத்த வருவாய் மட்டும் மொத்தம் 14.05 கோடி என்பதைப் பெருமையோடு நினைவுகூர விரும்புகின்றேன். அதேபோன்று மாநகரப் பேருந்துகளுக்கு 40 கிலோ மீட்டர் தூரம் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது இன்று 50 கிலோ மீட்டர் தூரம் என்று நீட்டிக்கப்பட்டுள்ளது வரவேற்பிற்குரிய ஒன்று.

கிராம மக்கள், நடுத்தர மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் கொண்டு வந்த திட்டம்தான் மினி பேருந்துத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) 1999 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் 308 மினிப் பேருந்துகளும், 2000 ஆம் ஆண்டில் 763 பேருந்துகளும் கிராம மக்களின் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து நிலையத்தில் இரண்டாவது இடத்தில் இருப்பது சென்னை புறநகரப் பேருந்து நிலையம் ஆகும். இந்தப் பேருந்து நிலையத்திற்கு தலைவர் கலைஞர் அவர்கள் 1999-ல் அடிக்கல் நாட்டினார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இதனைத் திறந்து வைக்காமல் தள்ளிப் போட்டனர்; பிறகு திறந்து வைத்தனர். மேலும், தலைவர் கலைஞர் அவர்கள் அன்று திறந்து வைத்த கல்வெட்டினை காணாமல் தூக்கிப் போட்டுவிட்டனர். ஆனால், இப்போதும் அங்கு சென்று பார்த்தால்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் என்று பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இருந்து கொண்டிருப்பதைக் காணலாம். இதுதான் தலைவர் கலைஞர் அவர்களுடைய நேர்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழகத்தில் மட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களுக்கு நமது முதல்வர் . . .

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** தொழிலாளர்கள் தினமான மே தினத்தை ஊதியத்துடன்கூடிய விடுமுறையாக அளித்தவர்தான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனஸை தொடர்ந்து வழங்கிக்



கொண்டிருப்பவர்கள்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அதுபோன்று அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை இன்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐயப்பன், உரையை முடியுங்கள் . . .

**திரு. கோ. ஐயப்பன்:** 17 நாட்கள் வேலை நாட்களாகக் கருதப்பட்டு போராட்டக் காலத்திலே அவர்களுக்கு ஊதியம், அவர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன். (குறுக்கீடு)

**திரு. கோ. ஐயப்பன்:** 7 நிமிடங்கள்தான் ஆகின்றன, தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றியெல்லாம் ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) நன்றியெல்லாம் ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு)

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள், நிருவாகம் மற்றும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகள் மீது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன், only seven minutes. ஏழு நிமிடங்கள்தான்.

**திரு. கே.எல். இளவழகன்:** பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றி சொல்லி . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இளவழகன், கொஞ்சம் இருங்கள். ஒரேயொரு நிமிஷம். Only one minute. சொல்லுங்கள், ஐயப்பன் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கோ. ஐயப்பன்:** எனது கடலூர் தொகுதியின் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு பல்வேறு துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் அளித்துள்ளேன். அவற்றில் முக்கியமாக எங்கள் கடலூர், மாவட்டத் தலைநகரமாக இருப்பதாலும், பல்வேறு தொழிற்சாலைகளும் கடலூர் அருகே வரவிருப்பதாலும், புறவழிச் சாலை அமைத்துத் தருமாறும், கப்பல் போக்குவரத்து பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்ட கடலூரில் கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்க உதவி செய்திட வேண்டுமாறும், தொழில் பூங்கா ஒன்றை அமைத்திடவும் கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் மற்றும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன், உங்களுக்கு 7 நிமிடங்கள்தான்.

**திரு. கே.எல். இளவழகன்:** கோடிக்கணக்கான மக்களுடைய இயந்திரத்தனமான வாழ்க்கைக்கு இன்று பெரிதும் உதவியாக இருப்பது போக்குவரத்துத் துறை ஆகும். எவ்வளவுக்கெவ்வளவு மனிதன் விஞ்ஞான ரீதியாக வேகமாகச் செல்வதற்குக் கற்றுக்கொண்டானோ, அந்த அளவிற்கு விபத்துகளில் சிக்கிக்கொள்கின்றான் என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும். இப்போது தினந்தோறும் விபத்துகள், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை நினைத்தாலே நெஞ்சம் வெடிக்கின்றது. இதற்குத் தீர்வு என்னவென்றால், தற்சமயம் உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு சாலை விதிகளை மாற்றியமைக்க வேண்டும். விதிகளை மீறுவோர் மீது கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். குறிப்பாக, குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் ஓட்டுநர்களுடைய உரிமத்தை இரத்துச் செய்யும் சட்டத்தை கடுமையாக அமல்படுத்திட வேண்டும்.

கண்கள் கூசுகின்ற அளவுக்கு ஒளியை வீசிக்கொண்டு சாலைகளில் செல்லும் வாகனங்களை நிறுத்தி தண்டம் விதிக்க வேண்டும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களினுடைய சேவை உயர்தரமாக அமைய வழிவகை செய்யப்பட வேண்டும். புதிய வழித் தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான புதிய பேருந்துகள், தளவாடங்கள் உடனடியாக வாங்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தனியார் ஆம்னி பேருந்துகளுடன் போட்டியிடும் வகையில் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோன்று தமிழ்நாடு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் நவீன உயர்தர வால்வோ பேருந்துகளாக மாற்றப்பட வேண்டும்.

மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவசப் பேருந்துப் பயணச் சலுகை தொடரப்பட வேண்டும். பள்ளி நேரங்களில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். தற்போது இயங்கிக் கொண்டுள்ள 'மகளிர் மட்டும்' பேருந்துகளை இன்னும் கூடுதலாக்கி பெண்கள் பயன்படுத்தும் வகையில் அதிக அளவில் இயக்கப்பட வேண்டும்.



போக்குவரத்து வசதிகள் கிடைக்காத கிராமங்களுக்கும், மலைப் பகுதிகளுக்கும் போக்குவரத்துக் கழகங்களினுடைய வருமானத்தைக் கணக்கில்கொள்ளாமல் பேருந்துகள் செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

சிறிய பேருந்துகள் திட்டம்--மினி பஸ்--விரிவுபடுத்தப்பட்டு அதிக எண்ணிக்கையில் பேருந்துகளை இயக்க அனுமதி வழங்கப்பட வேண்டும். அவற்றை இளைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கான நிதியுதவி கிடைத்திட வழிவகை செய்ய வேண்டும்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க தற்போது சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்கிக்கொண்டுள்ள 2,773 பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்தி, 5,000 பேருந்துகளாக அதிகரிக்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாநகரப் பேருந்துகள் மற்றும் இரயில் சேவைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, அனைத்து இரயில் நிலையங்களுக்கு அருகிலும் பேருந்து நிலையங்கள் அமைத்திட வேண்டும்.

*பிற்பகல் 1-10*

இரு சக்கர வண்டிகளில் செல்வோர் விபத்தில் சாவதைத் தடுப்பதற்கு தலைக் கவசம். இரு சக்கர வண்டிகளில் செல்வோர் விபத்தில் தலை அடிபடாமல் பாதுகாக்க தலைக் கவசம்-Helmet அணிய வேண்டுமென்று அரசு கட்டாயப்படுத்தியுள்ளது. இது பாதுகாப்பிற்காகவும், உயிர் காப்பதற்காகவும்தான். ஆனால், ஆண்டுதோறும் விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது தலைக் கவசம் அணிந்து சென்றவர்கள்தான் விபத்தில் இறந்திருக்கிறார்கள் என்று தொண்டு நிறுவனத்தினுடைய புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. அதற்குச் சொல்லப்படும் காரணம் தலைக் கவசம் அணிபவர்கள் பக்கவாட்டில் வரும் வாகனங்களை பார்த்து வண்டி ஓட்ட முடியவில்லை. வலது பக்கம், இடது பக்கம் திரும்பும்போது தெரியவில்லை, மறைக்கப்படுகிறது, அடிபடும்போது தலைக் கவசத்தினால் கழுத்து எலும்பு முறிந்துவிடுகிறது, அழுத்தம் அதிகம் என்று சொல்லப்படுகிறது. எனவே, இதனை நன்கு ஆய்வு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரப் பகுதிகளில் மட்டும் அனுமதிக்கப்படும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுடைய இலவச பஸ் பாஸ் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து புறநகர்ப் பகுதிகளிலும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர்கள் கேட்கின்ற வழித்தடங்கள் எல்.எஸ்.எஸ். போன்ற நகரப் பேருந்துகள் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சிற்றுந்துகளுக்கு காலாண்டு வரியைக் குறைத்து பழையபடி ரூ.3,500 ஆக மாற்றிட வேண்டும். ஒரு தடத்தில் இரண்டு பர்மிட்டுகளுக்கு மேல் வழங்கப்படக்கூடாது. கிராமங்களில் இயக்கப்படும் சிற்றுந்துகளின் பயண தூரத்தில், served route நான்கு கிலோ மீட்டர் என்பதை எட்டு கிலோ மீட்டராக ஆக்க மாற்று அறிவிப்பினை அறிவிக்க வேண்டும்.

அடுத்து, தொழிலாளர் பிரச்சினை. உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டும். போக்குவரத்துக் கழகங்களை தனியார்மயமாக்கும் மறைமுக நடவடிக்கையைக் கைவிடவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்தப்படவேண்டிய ஊதிய ஒப்பந்தத்தை இரண்டாண்டுகளாக இருட்டடிப்புச் செய்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என்று ஒப்பந்தகாலத்தை மாற்றியதை மீண்டும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பந்தம் என மாற்றம் செய்யப்படவேண்டும் மற்றும் கடந்த ஆட்சியில் பணியாளர்களுடைய அளவினை 7.5 என இருந்ததை தன்னிச்சையாக 6.5 என கொடுத்ததை இரத்து செய்து, மீண்டும் 7.5 என உயர்த்த வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தொலைதூரப் பேருந்துகளில் இரவு முழுவதும் தூங்காமல் ஒரே ஓட்டுநர் பேருந்தை இயக்குவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்கும்பொருட்டாக இரவு நேரங்களில் ஒரு பேருந்துக்கு இரண்டு ஓட்டுநர்கள் அவசியம் அமைக்கப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினை. அதுவும் போக்குவரத்துத் துறை சம்பந்தமான பிரச்சினை. குறிப்பாக, சென்னையிலிருந்து ஆற்காடு வழியாக வேலூர், திருப்பதி போன்ற



நகரங்களுக்குச் செல்கின்ற தடம் எண் 102 என்ற (மணியடிக்கப்பெற்றது) பேருந்து பெரும்பாலும் இரவு 10 மணிக்குமேல் புறவழிச் சாலையில் செல்கின்றது. பேருந்து நிலையத்தின் உள்ளே வருவதில்லை. ஆட்டோ இல்லாத நேரங்களில் மக்கள் பெரிதும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் பேருந்து இல்லாததினால் இரவு நேரங்களில் ஆட்டோ பிடித்து ஊருக்குச் செல்கின்ற நிலைமை இருக்கின்றது. நானும் அந்தப் பேருந்தில் வந்து புறவழிச் சாலையில் இறக்கப்பட்டு ஆட்டோ பிடித்து ஊருக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுசம்பந்தமாக மேலாளர் அவர்களிடம் புகார் தெரிவித்தும், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. தயவுகூர்ந்து 102 தடம் எண் உள்ள வண்டிகளை நகர் வழியாகச் செல்ல தக்க நடவடிக்கை எடுத்திடுமாறு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாக, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள். வட்டார மருத்துவமனைகளில் தற்போது போதிய பணியாளர்கள் இல்லை. விபத்துகள் ஏற்பட்டு மருத்துவமனைக்குச் சென்றால் போதிய மருத்துவர்கள் இல்லை. அப்படியே இருந்தாலும் அவர்களை அருகில் இருக்கக்கூடிய வேலூர் மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்து அனுப்புவதினால் சிலநேரங்களில் உயிரிழப்புகள்கூட ஏற்படுகின்றன. எனவே, இதனைத் தடுக்கும் முகமாக மருத்துவமனை தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலூர் மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள். தங்களுடைய ஆட்சிக் காலத்திலே நம்முடைய துறையின் மூலம் தங்களது காலத்திலே கட்டப்பட்ட வண்டிக்கல் ரெட்டித் திப்பி அணையை ஆழப்படுத்தி, கரையை அகலப்படுத்தி பொதுமக்களுடைய நீண்டநாள் கனவை நனவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று நம்முடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சின்னப்பன். (குறுக்கீடு)

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள். என்னுடைய தொகுதிக்குட்பட்ட புதுப்பட்டி கிராமத்திலே அதிக அளவு கால்நடைகள் உள்ளன. அந்தப்

பகுதியிலே புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு, அரிய வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன், only seven minutes.

***திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையாது புரள
புன்புலனின்றி வெந்தரற்றி
உரை தடுமாற உரோமம் சிலிர்ப்ப
கரமலர் முட்டித்து இருதயம் மலர
கண்களில்கூர நுண்துளி அரும்ப
சாயா அன்பினை நாடொறும் நினைக்க
அன்பின் ஊற்றுப்பாக்கள் என்றென்றும்
குறையாத எங்கள் தமிழே!"
தமிழ் காக்கும் தமிழ் சக்தியே, எங்கள் அம்மாவே வாழ்க.

பிற்பகல் 1-15

கருவேல மரக் காடுகளும், பனைவெளிகளும், பருத்திக் காடுகளும் உள்ள ஒரு கரிசல்காட்டு குக்கிராமத்தில் பிறந்த என்னை, ஒன்றிய மாணவர் அணிச் செயலாளராக்கி, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக்கி, மாவட்ட மாணவர் அணிச் செயலாளராக்கி, மாவட்டப் பஞ்சாயத்துத் துணைத் தலைவராகவும் ஆக்கி, இன்று இந்த மாபெரும் சபையில் உறுப்பினராக்கிய எங்கள் இதய தெய்வம் அம்மாவை வணங்கி, என் கன்னி உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மாவே, தாங்கள்தான் தமிழகம் தழைக்கச் செய்யும் சக்தி, தமிழர்கள் வாழ்வு பெருக்க சிந்திக்கும் சக்தி, தமிழ் மாநிலம் காக்கும் காவல் சக்தி, தமிழர்களின் தாழ்வு தடுக்கும் உயர்மான சக்தி, தமிழரின் சஞ்சலம் நீக்கும் தவ வடிவமான சக்தி, தமிழர்களின் வீழ்வு தடுக்கும் உயர் சக்தி, செயலாலே தமிழர்களை உயரச் செய்யும் நல் சக்தி, தமிழர்களின் பகைதீர்க்கும் வெற்றி சக்தி, தமிழர்களின் உள்ளத்திலே ஒளிரும் அம்மாவே, நீங்கள் தமிழ் சக்தி, தமிழ் சக்தி, அம்மாவே உங்களால்தான் ஆற்றல் பெற்றோம். திராவிட சக்தி அம்மாவே, உங்களால் நெஞ்சிலே உறுதி பெற்றோம். மக்கள் சக்தி அம்மாவே, உங்களால்தான் நாங்கள் வாழ்கின்றோம். எங்கள் அம்மாவே, தமிழ் சூழ்ந்த



பகையை உங்களின் அருளால்தான் வெல்லலாம். அம்மாவே உங்கள் புகழ் சொல்ல எனக்கு உதவிய தமிழுக்கும் நன்றி.

விளாத்திகுளம், இது மானாவாரி கரிசல் பூமி. கொத்துக் கொத்தாய் வெடித்திருக்கும் வெண்பஞ்சுபோல வெள்ளை உள்ளம் கொண்ட மக்கள் வாழும் புனித பூமி. மலைசூழ் இயற்கைக்கு அழகு சேர்ப்பது பனிமூட்டம். எங்கள் விளாதை பூமி மக்களுக்குப் பசி ஆற்றுவது கரிமூட்டம். ஆம். கருவேல மரத்தைவெட்டி, சுட்டு கரி ஆக்கி, எங்கள் மக்கள் தேசமெங்கும் அனுப்புகிறார்கள்.

விளாவும், அத்தியும் எங்கள் ஊரின் தல விருட்சங்கள். எங்கள் ஊரில் அன்னை மீனாட்சியின் அருட்காட்சிதான். எப்போதும் அம்மாவின் ஆட்சிதான். சட்டசபை மட்டுமல்ல, ஆள்வோர் வலிமை கொண்டு நடத்திய உள்ளாட்சியிலும் தமிழ் சக்தி எங்கள் அம்மாவின் ஆட்சிதான். விளாத்திகுளம் எப்போதும் எங்கள் அம்மாவின் எஃகுக் கோட்டைதான். அம்மாவின் எளிய தொண்டனான என்னைத் தேர்ந்தெடுத்த எங்கள் கரிசல் பூமி விளாத்திகுளம் தொகுதி மக்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

வெண் பஞ்சும், சிவப்பு மிளகாயும், கருவேல உடை மரக்காடுகள் இருக்கும் எங்கள் விளாதை மண்ணுக்கு என் வணக்கம். ஆயுதக் கலாச்சாரத்தை ஒழித்து சட்டம் ஒழுங்கு காணாமல் போயிருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கியவர் அம்மா. அதனால்தான் பன்னாட்டுக் கம்பெனிகள் இன்று தமிழகம் நோக்கித் தொழில் தொடங்க வருகின்றன. இன்று, தொழில் பூங்கா வருவதற்கு அன்றே அமைதிப் பூங்காவாக தமிழகத்தை மாற்றியவர் எங்கள் அம்மா.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் வைப்பாற்றின் குறுக்கே 7.2 கோடி ஒதுக்கீட்டில் டெண்டர் விடப்பட்டு, இன்று இந்த ஆட்சியில் தொடங்கப்படாமல் உள்ள தடுப்பணை கட்டும் பணியை உடனே தொடங்கிட கேட்டுக்கொள்கிறேன். வைப்பாற்றின் குறுக்கே வைப்பார் கிராமத்தின் அருகே கடல் நீர் வராமல் தடுக்க ஒரு தடுப்பணை கட்டிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர் பெய்து வைப்பாற்றில் வெள்ளம் ஏற்படும்போதெல்லாம், விளாத்திகுளம் நகரம் தீவுபோல மாறிவிடுகிறது. வாரக் கணக்கில் பேருந்துகள் கிராமப் பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, வைப்பாற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டுவதற்கு எங்கள்

அம்மாவின் ஆட்சிக் காலத்திலே ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்திட கேட்டுக்கொள்கின்றேன்.

விளாத்திகுளம் தொகுதியிலே அரசு கலைக் கல்லூரியோ, தனியார் கலைக் கல்லூரியோ, அரசு பாலிடெக்னிக்கோ, தனியார் பாலிடெக்னிக்கோ, எந்த அரசு தொழிற்பயிற்சிக் கூடமோ இல்லை. ஆகையால், விளாத்திகுளத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஏழ்மையான, வானம் பார்த்த பூமியான விளாத்திகுளத்தில் பெரிய, சிறிய தொழிற்சாலைகளே இல்லை. ஆகையால், விளாத்திகுளத்தில் அரசு தொழிற்பேட்டை வேண்டும்.

புதூர் ஒன்றியம், பூதலபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்திட வேண்டும். விளாத்திகுளம் பெருநாளிச்சாலையில் சின்னூர் அருகே பாலம் கட்டப்பட வேண்டும்.

இதய தெய்வம் அம்மா அவர்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து விளாத்திகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ரூ.27.14 கோடியில் கொடுத்து 180 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கினார்கள். இந்த தி.மு.க, அரசு பொறுப்பேற்றவுடன் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு இன்றுவரை குடி தண்ணீர் வரவில்லை. இனிமேலாவது இந்தக் கோடை காலத்தில் உடனடியாக அம்மா ஆட்சியின்போது அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைத்த மாதிரி கிடைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கடலோரக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இதய தெய்வம் அம்மா அவர்கள் 239 வழியோரக் கிராமங்களுக்கு 68 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, அம்மா அவர்களின் ஆட்சியில், விரைவாக நடைபெற்ற பணியை நீங்கள் விரைவில் முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் விளாத்திகுளம் தொகுதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொகுதி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யூனியன் சேர்மன்களாக இருக்கின்ற தொகுதி என்கிற காரணத்தினால், ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் புதுப்பிக்க இன்றுவரை நிதி ஒதுக்கவில்லை. எனவே மிக மோசமாக உள்ள சோலைமலையான்பட்டி, சித்தவநாயக்கன்பட்டி, அயன்செங்கல்படை உட்பட பல்வேறு கிராமங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து சாலைகளைப்



புதுப்பிக்க வேண்டும். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான தத்தனேரி, புதுப்பட்டி, எப்போதும்வென்றான் ஆகிய குளங்களைத் தூர் வாரிக் கொடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் அரசுக்குத்தானே *கோரிக்கை வைக்கிறீர்கள்? இந்தக் கோரிக்கை பூராவும் அரசுக்குத்தானே? (குறுக்கீடுகள்)*

**திரு. போ. சின்னப்பன்:** சென்னைப் பெருநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க எங்கள் அம்மா அவர்கள் மோனோ இரயில் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால் தேவையில்லாமல் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு மெட்ரோ இரயில் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். மோனோ இரயில் திட்டத்தை குறைந்த செலவில், குறுகிய காலத்தில் பயன்பாட்டுக்குக் கொண்டு வரலாம். வளர்ந்துவரும் நாடுகளில் எல்லாம் மோனோ இரயில் திட்டம் குறைந்த செலவில், குறுகிய கால அவகாசத்தில் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மெட்ரோ இரயில் திட்டத்திற்கு அதிகச் செலவு ஏற்படுவதுடன், அதிக கால அவகாசம் தேவைப்படும். தலைநகர் டெல்லியிலே 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்ட மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த 13 ஆண்டு காலம் தேவைப்பட்டது. கால அவகாசம் கூடும்போது திட்ட மதிப்பீடும் பல மடங்கு கூடும். மெட்ரோ இரயில் திட்டம் கடற்கரை உள்ள சென்னை போன்ற மாநகருக்குப் பொருத்தமானதும் அல்ல, பாதுகாப்பானதும் அல்ல. பூகம்பம் தாக்கக்கூடிய பகுதிகள் என்று புவியியல் வல்லுநர்களால் கண்டறியப்பட்டுள்ள சென்னையில் மெட்ரோ இரயில் திட்டம் தேவைதானா, பாதுகாப்பானதுதானா? இந்த அரசு கௌரவம் பார்க்காமல் சென்னை மாநகரப் பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் கூறியபடி மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தும்படி வற்புறுத்தி, வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறையின் பொற்காலம். கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் என்ற அளவில் நஷ்டம் ஏற்பட்டபோதும், எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் சர்வதேசச் சந்தையில் பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் காரணம்காட்டி பலமுறை டீசலின் விலையை

உயர்த்தியபோதும், ஒரு லிட்டருக்கு 15 ரூபாய் என்ற அளவில் டீசல் விலை உயர்ந்தபோதும், அதனால் ஏற்பட்ட ரூ.500 கோடி நஷ்டத்தையும் தாங்கி, 18 ஆண்டு காலமாக நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த போக்குவரத்துத் துறையை தன்னுடைய நிர்வாகத் திறமையால் போக்குவரத்துக் கட்டணத்தையும் உயர்த்தாமல் ரூ.14 கோடி இலாபம் ஈட்டித் தந்தவர் எங்கள் அம்மா அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) அவருடைய காலம் போக்குவரத்துத் துறையின் பொற்காலம். எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (கூச்சல்-குழப்பம்) சொல்லுங்கள் அப்போது. (குறுக்கீடு)

**திரு. போ. சின்னப்பன்:** எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் துறைக்கான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கோரிக்கைகள் வைப்பதை விட்டுவிட்டு, மற்றதில் எல்லாம் நேரத்தை வீணாக்குகிறீர்கள்.

**திரு. போ. சின்னப்பன்:** டயர் உட்பட்ட தளவாடச் சாமான்கள் தங்கு தடையின்றிக் கிடைத்தது. இன்று தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக டயர் இல்லாமல் திடீர், திடீர் எனப் பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னப்பன், போதும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (கூச்சல்-குழப்பம்) நன்றி எல்லாம் ஒன்றும் வேண்டாம். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு சாதாரண, நடுத்தர, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை தொடர்ந்து 1986 ஆம் ஆண்டில் இருந்து, இதுவரை பல்வேறு பொறுப்புகளில் வைத்து அழகு பார்த்து, இப்போது இந்த மானியக் கோரிக்கைகளிலே இரண்டாவது முறையாகப் பேச வாய்ப்பு அளித்து இருக்கின்ற எங்களுடைய குடும்பத் தலைவர், தமிழக முதல்வர், அண்ணன் கலைஞர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இருக்கும் திக்கு நோக்கி வணங்கி, இந்தப் போக்குவரத்துத் துறை மற்ற தோழமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் பாராட்டத்தக்க வகையிலே இப்போது சிறப்பாக இருக்கிறது என்றால், அதற்கு ஒவ்வொரு முறையும் எனக்கு உறுதுணையாக இருந்து, உதவிக் கொண்டிருக்கின்ற நம்முடைய



உள்ளாட்சித் துறை அமைச்சர், கனம் மாண்புமிகு தளபதி அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பதிலுரையைத் தொடங்க நான் முனைகிறேன்.

ஏற்கெனவே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். மாண்புமிகு பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உரை நிகழ்த்துகின்றபோது எங்களுடைய ஆட்சியில் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்த இந்தப் போக்குவரத்துத் துறை இந்த ஆட்சியிலே சரி இல்லை என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல எங்களுடைய ஆட்சியில் கட்டண உயர்வே நாங்கள் ஏற்படுத்தவில்லை; எத்தனை முறை டீசல் விலை உயர்ந்தாலும் கட்டணத்தை ஏற்றாமல் தொடர்ந்து இலாபகரமாக இந்தத் துறையை நடத்தினோம் என்றும் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியிலேதான், ஐந்தாண்டு காலத்தில் 5,600 பேருந்துகள் மட்டுமே வாங்கப்பட்டன. ஒரு கிலோ மீட்டருக்கு 6 காசு, கட்டணம் உயர்த்தப்பட்டதும் அவர்களுடைய ஆட்சியிலேதான். அதுமட்டுமல்ல, தொடர்ந்து எங்களுக்கு அருகில் இருக்கிற உயர் கல்வித் துறை அமைச்சர், இந்தத் துறையைக் கையாண்டபோதும், ஒவ்வோர் ஆண்டும் போனஸ் என்பதை 16 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை உயர்த்தித் தந்து, தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கிற ஆட்சியாக, (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களுக்குத் தோழனாக விளங்கிய ஆட்சியாக, போனஸ் மட்டுமல்ல, பதவி உயர்வு, புதிய ஆட்கள் நியமனம், புதிய பேருந்துகள் வாங்குவது, புதிய வழித்தடங்கள் தொடங்குவது என தொடர்ந்து, கலைஞர் எப்போதெல்லாம் முதலமைச்சராக இருக்கிறார்களோ அப்போதெல்லாம் அது சிறப்பாக நடைபெற்று வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-25*

பொங்கல் போனசா, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தரப்படும். ஊதிய உயர்வு ஒப்பந்தம், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை போடப்பட்டது. இங்குகூட மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சொன்னபோது, நீங்கள் அவர்களுடைய ஆட்சியில், பறிக்கப்பட்ட சலுகைகளை எல்லாம் இங்கே வழங்குவோம் என்று சொன்னீர்களே, அதை வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். வரவை மட்டும் வைத்துக்கொண்டு, செலவையே செய்யாமல், தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய எந்தச் சலுகையும் தராத காரணத்தால்தான், இரண்டே இரண்டு ஆண்டு காலம் இந்தத் துறை உங்களுக்கு இலாபமாக இருந்தது. ஆனால், நம்முடைய முதலமைச்சர், இன்றைக்கு இருக்கின்ற

முதலமைச்சர் இந்தத் துறையை 1971 ஆம் ஆண்டு தொடங்கிய காலத்தில், வெறும் 600 பேருந்துகளாகத் தொடங்கிய இந்தப் போக்குவரத்துத் துறை, இவருடைய காலத்திலேதான் இப்போது 16,181 பேருந்துகளாக (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்திருக்கிறது.

கூடுதலாக ஸ்பேர் பஸ், உபரிப் பேருந்துகளாக 1,652 பேருந்துகள் இருக்கின்றன. மொத்தம் தமிழகத்தில் இருக்கின்ற 7 போக்குவரத்துக் கழகங்களிலும் இப்போது இயங்கக்கூடிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை 17,833 பேருந்துகள். இங்கே, உங்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் வாங்கப்பட்ட பேருந்துகள் 15,600. ஆனால், 13-5-2006 ஆம் நாள் தொடங்கி இன்றைய தேதிக்குள் இந்த ஆட்சியில் புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை—கிட்டத்தட்ட 5,450 பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலே 5,600 பேருந்துகள் வாங்கப்பட்டபோது, போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி பயன்படுத்தப்பட்டது. ஆனால், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியாக, மானியமாகத் தந்து, இந்த 5,450 பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, நீங்கள் பேருந்துக் கட்டணத்தை 6 காசு உயர்த்திய பிறகு, 18 முறை டீசல் விலை உயர்ந்திருக்கிறது. இப்போதுதான் ஒரு ரூபாய் குறைந்திருக்கிறது. இன்னமும் இந்த ஆட்சியிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் சரி, தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய போனஸ் தர வேண்டும்; தொழிலாளர்களுக்குத் தரக் கூடிய ஊக்கத் தொகை தர வேண்டும்; புதிய தொழிலாளர்களை நியமிக்க வேண்டும்; புதிய வழித் தடங்களை உருவாக்க வேண்டும், புதிய பேருந்துகளைத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்டும், கட்டணம் ஏற்றாமல், இந்தியாவிலேயே இன்னமும் குறைவான கட்டணத்தில் இயங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு துறையாக போக்குவரத்துத் துறை இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் சொன்னார்கள். கடந்த கால ஆட்சியிலே நீதிமன்ற உத்தரவைப் பெற்று, தனியார் பேருந்து முதலாளிகள் எல்லாம், 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்துகளை, நகரத்தை நோக்கி திருப்பிவிட்டார்கள், கிராமங்களுக்குச் செல்லாமல். அப்படி நீதிமன்ற உத்தரவைப் பெற்று வந்த காரணத்தால், முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன், எங்களுக்கு உத்தரவு தந்தார்கள்; எந்தெந்த இடத்தில் தனியார் பேருந்துகள்



கிராமங்களை நோக்கிச் சென்றனவோ, எங்கெங்கு எடுத்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் உங்களுடைய பேருந்துகளை, போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நீங்கள் இயக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் உத்தரவை ஏற்று, இந்த 10, 12 மாத காலத்தில் 679 புதிய வழித்தடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, 1,002 வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டிருக்கின்றன, பேருந்துகளிலே. 1,002-க்கு மேற்பட்ட வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டிருக்கின்றன. போக்குவரத்துக் கழகம் கிட்டத்தட்ட 1,00,09,000 பேர் பணியாற்றுகின்ற ஒரு பெரிய துறையாக, ஒவ்வொரு நாளும், இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் இருக்கின்ற 17,833 பேருந்துகள் தினந்தோறும் 68,40,000 கிலோ மீட்டர் இயங்குகின்றன. கிட்டத்தட்ட ஒரு பேருந்து சராசரியாக 433 கிலோ மீட்டர் இயங்குகிறது, நாள் ஒன்றுக்கு இந்த 17,833 பேருந்துகளில் ஏறி இறங்குகின்ற பயணிகள் 1,77,00,000 பேர் தினந்தோறும் இதிலே பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தத் துறை இப்போது மிகச் சிறப்பாக, மிக, மிகச் சிறப்பாக நடத்தப்பட வேண்டுமென்று பல்வேறு யோசனைகளை எங்களுக்கு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதனால்தான், 2005-2006-ல் ரூ.3,454 கோடி வருவாயாக இருந்தது, 2006-2007-லே 3,752 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 298 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது. இங்குகூடச் சொன்னார்கள். நீங்கள் பேருந்துக் கட்டணத்தை . . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய காரணத்தால், இந்த வருவாய் வந்திருக்கிறது என்று நம்முடைய பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்திலுமே பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. தமிழ்நாட்டில் இதுவரை ஓடிக்கொண்டிருக்கும் 17,833 பேருந்துகளிலே, வெறும் 240 பேருந்துகளுக்கு மட்டும்தான் கட்டணம் சீரமைக்கப்பட்டிருக்கிறது; அது மாற்றப்பட்டிருக்கிறது. அதுவும் உங்களுடைய ஆட்சியில் போடப்பட்ட உத்தரவின் காரணமாக, அந்தக் கட்டணம் சீரமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வழித்தடங்களை அதிகப்படுத்தியும், புதிய பேருந்துகள் தந்த காரணத்தினாலும்,

298 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமான வருவாயை நாங்கள் ஈட்டியிருக்கிறோம்.

அதேபோல, இந்திய அளவிலே, நீங்கள் சொன்னீர்களே, உங்களுடைய காலத்திலே ஒரு லிட்டர் டீசலுக்கு 4.83 கி.மீ. சென்ற அந்தப் பேருந்து, இன்றைக்கு நம்முடைய ஓட்டுநர்களும், நடத்துநர்களும் சிறப்பாகச் செயல்படுகின்ற காரணத்தால், 4.97 கி.மீ. செல்கின்ற அந்தப் பணியை எடுத்திருக்கிறார்கள். அதனால், டீசல் சிக்கனம் காரணமாக, 50 கோடி ரூபாய் இந்தத் துறைக்குச் சிக்கனமாகியிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு தூரம் 298 கோடி ரூபாய்; கிட்டத்தட்ட வளர்ச்சி சதவிகிதம் என்று எடுத்துக்கொண்டால், 8.62 சதவிகிதம் வளர்ச்சியடைந்தபோதிலும், ஒரு கி.மீ. இயக்கத்திற்கு ஆகின்ற செலவு--வருகின்ற வருவாய் 16 ரூபாய் 54 காசு. அதை இயக்குவதற்கு ஆகும் செலவு--17 ரூபாய் 75 காசு.

இப்படி நஷ்டம் அடைந்தபோதும்கூட, 20 சதவிகிதம் போனஸ்; தொழிலாளர்களுடைய பதவி உயர்வு; போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 30 ஆண்டுக் காலம் ஆகிறது. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் அதிகாரிகள் யார், இதிலே எத்தனை அதிகாரிகள் பணிபுரிய வேண்டும், வேலை செய்யவேண்டும், எத்தனை conductor, driver-கள் இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பதே இந்த 31 ஆண்டுக் காலத்திலும் இல்லை. முதன்முறையாக, நம்முடைய முதல்வர் உத்தரவிட்டு, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் Organisation Chart இப்போதுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. எத்தனை Manager-கள் இருக்கவேண்டும்; எத்தனை G.M.-கள் இருக்கவேண்டும்; எவ்வளவு பணியாளர்கள் அங்கு இருக்கவேண்டும் என்ற அந்த Chart இப்போது உருவாக்கப்பட்டு, இந்த 12 மாத காலத்தில் மட்டும், கிட்டத்தட்ட 468 பேருக்குப் பதவி உயர்வு அளித்து, அவர்களை இந்த ஆட்சியிலே நியமித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களின் கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில், ஒருவருக்கும் பதவி உயர்வும் இல்லை. ஒருவருக்குக்கூட, அவர்களுக்குத் தரவேண்டிய ஊதிய உயர்வு இல்லாமல் இருந்ததை மாற்றியமைத்து, இப்போது அந்தப் பணியை இந்தத் துறை செய்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகரப் பேருந்துகளைப்பற்றி இங்கே எல்லோரும் தெளிவாகச் சொன்னார்கள். இங்கே பேசும்போது, seat இல்லை என்று



சொன்னார்கள். மொத்த மாநகரப் பேருந்துகள் 2,803 பேருந்துகள் இருக்கவேண்டும்; இருந்துகொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான், முதன்முதலாக 2,407 வழித்தடங்களை இயக்கியிருக்கிறோம். 400 பேருந்துகள் spare bus-களாக இருக்கின்றன. இப்படி இயக்குவதற்குக் காரணம், புதிதாக conductor, driver-கள் கிட்டத்தட்ட 800 பேர், இந்த மாநகரப் பேருந்துகளுக்குப் புதிதாக நியமித்த காரணத்தால், இந்த 2,407 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இங்குகூடச் சொன்னார்கள்; 90 இலட்சமாக இருந்ததை, 1 கோடியே 20 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள்; பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுவல்ல காரணம். புதிய பேருந்துகள்; 480 பேருந்துகளை கிட்டத்தட்ட இந்த ஆறு மாத காலத்தில் கொடுத்த காரணத்தால், பல்வேறு இடங்களுக்கு, விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு 50 கி.மீ. வரை செல்லலாம் என்று ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்து, நேரடியாக மக்களை இணைக்கின்ற காரணத்தால், பயணிகளினுடைய அடர்வு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் தொகை உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட, நாளொன்றுக்கு மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினுடைய வசூல் 1 கோடியே 20 இலட்சம்; ரூ.1 கோடியே 30 இலட்சம் என்ற அளவிற்கு இருக்கிறது. திங்கட்கிழமை என்றால், 1 கோடியே 30 இலட்சம் என்ற அளவிலே அது உயர்ந்திருக்கிறது. மற்ற நாட்களிலே ரூ.4 இலட்சம், ரூ.5 இலட்சம் குறைவாக இருக்கிறது.

இதுகுறித்து நிதித் துறையிலே ஒரு காலத்திலே சொன்னார்கள். இந்த மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் எப்பொழுது பார்த்தாலும் ரூ.10 கோடி நஷ்டம், ரூ.20 கோடி நஷ்டம் என்று சொல்கிறீர்களே, அப்படியிருப்பதை நீங்கள் ஏன் private-ஆக ஆக்கக்கூடாது என்று முன்னாலே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் எங்களுடைய ஆட்சியிலே, அதை privatisation செய்யவில்லை; நாங்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள். அதற்கான தமிழ்நாடு அரசின் உத்தரவு இங்கிருக்கிறது. நீங்கள் privatisation செய்ததற்கான அந்த உத்தரவும் என் கையிலே இருக்கிறது. நீதிமன்றத்திற்குச் சென்று, நாங்கள் தனியாருக்குக் கொடுக்கவில்லையென்று சொல்லி, அந்த வழக்கையே வாபஸ் பெற்றவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படி இந்த மாநகரப் போக்குவரத்துக் கழகத்தை இவ்வளவு தூரம் உருவாக்கியிருப்பதற்குக் காரணம்--இங்கேயிருக்கின்ற நம்முடைய உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னார்கள்; நைஜீரியா நாட்டில் இருப்பதே 1 கோடி ஜனம்; 13 ஆயிரம் பேருந்துகள் இருக்கின்றன. ஆனால், இங்கேயிருக்கின்ற 1 கோடி ஜனத்திற்கு 2,400 பேருந்துகள்தான் இருக்கின்றன என்று சொன்னார்களே! இன்னும் ஆறே மாத காலத்தில், இந்த மாநகரத்திலே 3 ஆயிரம் புதிய வழித்தடங்கள் நிச்சயமாக உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-35*

மொத்த வழித்தடங்கள் 3,000 என்ற அளவிலே புதிய வழித்தடங்களை உருவாக்குவதற்காகத்தான் இந்த ஆட்சியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசுப் பணத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக அனுமதி அளித்திருக்கிறார்கள். இன்னும் ஓரிரு நாட்களில் அது இறுதி செய்யப்பட்டு, அது விரைவாக மக்களுக்குப் பயன்படத்தக்க அளவிலே வரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். நான் என்னுடைய பதிலுரையிலே இதை நியாயமாக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. 60 சதவிகித சாதாரணப் பேருந்துகள் இயங்கினால் போதும். மீதமிருக்கின்ற 40 சதவிகிதப் பேருந்துகள், அது பல்வேறுபட்ட வகையிலே சொகுசுப் பேருந்துகளாக, அல்லது நிறுத்தத்தைக் குறைவு செய்து விரைவாகக் கொண்டுவந்து சேர்க்கின்ற பேருந்துகளாக நீங்கள் ஆக்கலாம் என்று நீதிமன்றத்திலேகூட உத்தரவு தந்திருக்கின்றார்கள். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அளவுக்குப் புதியப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள் ஓரளவுக்கு 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்குள்தான் இருக்க வேண்டும்; பாக்கி இருக்கின்ற 90 சதவிகிதப் பேருந்துகள் சாதாரணக் கட்டணத்தில்தான் இயங்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த உத்தரவை ஏற்று நிச்சயமாக, அதேபோல இயக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சாலையிலே break down அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம். break down-கள் ஒரு காலத்தில் இருந்தன. சென்னையிலே வந்தால், இங்கெல்லாம் எங்கு பார்த்தாலும் பெரிய தொழிற்சாலைகள் வருகின்றன. ஆணிகளும், இரும்புகளும், ஓடுகளும்



ஆங்காங்கு பேருந்துகள் போகின்றபோது, சிறிய puncture ஆகிவிட்டால்கூட பெரிய அளவில் traffic jam ஏற்பட்டு விடுகிறது. உடனடியாக அரசுத் துறையினுடைய அதிகாரிகள் பொதுப்படையாக சாலைகளிலே காந்தங்களை வைத்து அந்த இரும்புகளையெல்லாம் எடுத்து, 140 பேருந்துகள் நின்றன என்பதை இப்போது 60-ஆகக் குறைத்திருக்கிறார்கள். வெகுவிரைவிலே இன்னும் புதிய பேருந்துகள் வரும்போது நிச்சயமாக ஒரு பேருந்துகூட break down என்று இல்லாத நிலையை இன்னும் 3 மாத காலத்திற்குள் நாங்கள் உருவாக்குவோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், உங்களுக்கெல்லாம் தெரியும். பேருந்து நிலையங்கள் மிகவும் பள்ளமான இடங்களிலே அமைந்திருக்கின்றன. காரணம், வருடந்தோறும் புதிய, புதிய தார்ச் சாலைகள் வருகின்றபோது பேருந்து நிலையங்கள் கீழே போய்விடுகின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'நீங்கள் பேருந்துகளைப் புதிதாக விடுவது மட்டுமல்ல; பேருந்து நிலையத்திற்குப் பயணிகள் வருகின்றபோது அவர்கள் சொகுசாக இருப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று சொல்லி, அதற்கென்று தனி நிதியையும் இந்த ஆண்டு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். சென்னையிலே அம்பத்தூர், கே.கே. நகர், திருவான்மியூர், வடபழனி, மகாகவி பாரதியார் நகர் போன்ற இடங்களில் இருக்கின்ற பேருந்து நிலையங்கள் எல்லாம் இந்த ஆண்டு நவீனப்படுத்தப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 5,300 க்கு மேல் பேருந்துகள் வருகின்றபோது, S.E.T.C. பற்றிப் பேசிய அத்தனை உறுப்பினர்களும், எங்களுக்கெல்லாம் Ultra Deluxe பேருந்துகள் வேண்டுமென்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 900 வழித்தடங்களிலே இயங்குகின்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு காலத்திலே நம்முடைய நிதித் துறையினுடைய செயலாளர் எழுதியது 'இனி இந்த அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் நிச்சயமாக, இது இயங்குவதற்கே லாயக்கு இல்லை, இதை மூடிவிடுங்கள்' என்று எழுதினார்கள். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள், ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வந்தார்கள். இன்றைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தன்னைத்தானே நிர்வகித்துக்கொண்டு, தானே சொந்த வண்டிகள் வாங்கக்கூடிய அளவுக்கு அது வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது கலைஞர் அவர்கள் தந்த உதவியின் காரணமாகத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 900 பேருந்து வழித்தடங்களிலே 110 பேருந்து வழித்தடங்களில் மட்டுமே

கடந்த கால ஆட்சியிலே Ultra Deluxe பஸ்கள் இருந்தன. முழு உதவியையும் கலைஞர் அவர்கள் தந்து, 200 புதிய Ultra Deluxe பஸ்கள் தந்த காரணத்தால், பல்வேறு இடங்களிலே மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்று அது நல்ல முறையிலே வசூலை ஈட்டியிருக்கிறது. கடந்த ஆண்டு தந்ததைப்போலவே, இந்த ஆண்டும் 200 புதிய Ultra Deluxe பேருந்துகளை விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு அரசின் சார்பாக வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனியார் பேருந்துகள் எல்லாம் குளிர்சாதன வசதி பெற்றிருக்கின்றன. அதேபோல, அரசு பஸ்களும் குளிர்சாதன வசதி பெற வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் 50 புதிய பேருந்துகளை குளிர்சாதன வசதிப் பேருந்துகளாக விரைவுப் போக்குவரத்துக் கழங்களிலே வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, விழுப்புரம் விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 380 புதிய வண்டிகளும், சேலம் கார்ப்பரேஷனுக்கு 400 வண்டிகளும், கோவைக்கு 350 வண்டிகளும், கும்பகோணம் கார்ப்பரேஷனுக்கு 440 வண்டிகளும், மதுரைக்கு 230 வண்டிகளும் என்ற அளவிலே 2,000 புதிய பேருந்துகளும், மாநகரத்திற்கு 1,000 பேருந்துகள் என்ற அளவிலும் 3,000 பேருந்துகள் இந்த ஆண்டு இயங்கவிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் நலத் துறை மானியத்திலே இங்கே பேசுகின்றபோது, சொன்னார்கள். எங்களுக்கு ஏற்கெனவே இருக்கிற review வரவேண்டும், அவர்களுடைய பணி வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதேபோல ஒருசில Corporation-களில் 17 நாட்கள் வேலைசெய்தவர்களுடைய பணியையும் பணிவரம்பிற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். நான் சில அறிவிப்புகளை இங்கே சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே கடந்த 15 நாட்களுக்கு முன்பாக தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் வரவழைத்து 'அவர்கள் கோரிக்கைகள் அளித்து அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துபேசி' இதையெல்லாம் செய்யுங்கள் என்று அவர்கள் உத்தரவிட்ட காரணத்தால் இந்த அறிவிப்புகளை இப்போது சொல்கிறேன்.



பிற்பகல் 1-40

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது சிறப்பு மருத்துவ உதவித் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட அறுவை சிகிச்சைகளுக்கு ரூபாய் 1 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. அறுவை சிகிச்சைக்கு முன்னரே சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு முன்பணமாக 75% வரை வழங்க வேண்டுமெனத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். இக்கோரிக்கை ஏற்கப்பட்டு 1-5-2007 முதல் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் செயல்படுத்தப்படும் என்பதையும் நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் இருக்கும்போது இறக்கும் தொழிலாளர் குடும்பத்திற்கு குடும்ப சேம நலத் திட்டத்தின்கீழ் (Family Benefit Scheme) தற்போது ரூபாய் 1 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வேண்டுகோளை ஏற்று அரசு ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்டதுபோல போக்குவரத்துக் கழகங்களிலும் இனி ரூபாய் 1.5 இலட்சமாக இத்தொகை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் இருந்தபோது இறந்துபோன தொழிலாளர்களின் தகுதியுள்ள வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு வேலை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பணிபுரியும்போது விபத்து ஏற்பட்டு நிரந்தர ஊனமுற்ற தொழிலாளருக்கு அவர்தம் குடும்பத்தினரைக் காப்பாற்றும் விதமாக இந்த அரசு, அவர்களுக்கு ஏற்ற இலகு பணி வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் விபத்துகளில் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் காயமுறும்போது பெரும்பாலான நிகழ்வுகளில் எலும்பு முறிவு ஏற்படுகிறது. இதுபோன்ற கொடுங் காயங்களுக்கு சிறப்பு மருத்துவ வசதி நமது பெருந்துறை மருத்துவமனையில் ஏற்படுத்தித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், போக்குவரத்துத் துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற மருத்துவக் கல்லூரி பெருந்துறையிலே இயங்கிக்கொண்டிருக்கிறது. கை, கால் உடைந்தபோது அவர்கள் தனியார் மருத்துவமனையில் சென்று சரியான மருத்துவ வசதி பெற

முடியாத காரணத்தால் ஒரு சிறப்பு மருத்துவ வசதியைப் பெருந்துறை மருத்துவக் கல்லூரியிலே நிறுவ வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அதற்கான தனி நிதி ஒதுக்கீடு தந்து, இப்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நேரடியாக சொந்த மருத்துவமனையிலே அந்த வசதியைப் பெறுகின்ற அந்தப் பணியை இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு உரையாற்றியவர்கள் எல்லாம் பணியாளர் சதவீதம் 7.5 சதவீதமாக இருந்ததை கடந்த கால ஆட்சியிலே 6.5 சதவீதமாகக் குறைத்துவிட்டார்கள், மீண்டும் 7.5 சதவீதமாக உயர்த்தித் தர வேண்டுமென்று பேசிய அத்தனை உறுப்பினர்களும் சொன்னார்கள். முதலமைச்சரிடம் சென்று நாங்கள் கருத்து கேட்டோம். ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளைக்காட்டிலும் கூடுதலாக இப்போது பேருந்துகள் வழித்தடங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டவுடன், உடனடியாக பதிலியாக 6.25 லிருந்து 0.625 பதிலியாக நீங்கள் சேமிப்பாக தேவையான டிரைவர்களைக் கூடுதலாக எடுத்துக்கொள்ளலாம் என்ற அந்த உத்தரவைத் தந்திருக்கிறார்கள்.

ஒரு பேருந்துக்கு இனி 7.35 நபர்கள் என்ற விதிமுறை கடந்த 2004-2005 ஆம் ஆண்டில் 6.50 ஆகக் குறைக்கப்பட்டது. இதில் ஓட்டுநர், நடத்துநர்கள் ஒரு பேருந்திற்கு 5 நபர்கள் ஆகும். இன்றைய போக்குவரத்துத் தேவைக்கு இந்த விகிதம் போதவில்லை என்றும் இதனால் தற்காலிக ஓட்டுநர்கள், நடத்துனர்கள் பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது என்றும் கண்டறியப்பட்டது. வேலைப்பளு கூடுதல் காரணமாக விபத்துகளும் அதிகமாக நிகழ வாய்ப்புள்ளதாகத் தெரிந்தது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு நிதித் துறை அனுமதியோடு தற்போது ஓட்டுநர், நடத்துனர் விகிதத்தை ஒரு பேருந்திற்கு 5.25 நபர்கள் என்று மாற்றியமைத்தும், மேலும் விழாக்கால, சிறப்புப் பேருந்துகளை இயக்க ஏதுவாகவும் ஓட்டுநர், நடத்துனர்கள் வேலைப்பளுவை குறைக்குமுகமாகவும் ஒரு பேருந்திற்கு 0.6 என்ற விகிதத்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநனர்களை அவசரத் தேவைகளுக்காக கையிருப்பில் (Reserve) வைத்துக்கொள்ள மேலாண் இயக்குநர்கள் இனி அனுமதிக்கப்படுவர் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இனி 7.50 என்பதை கிட்டத்தட்ட 7.1 என்ற அளவிற்கு தொழிலாளர்களை இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற அனுமதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.



*ஓட்டுநர், நடத்துனர்களுக்குக் குழும விபத்துக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.*

*விபத்துகளைக் குறைக்க ஏற்கெனவே அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் மண்டலங்களில் இயங்கி வந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இயங்காமல் உள்ள நிலையை மாற்றி, இப்பள்ளிகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு இயக்கப்படும்.*

*போக்குவரத்துக் கழகங்களிலே 17 இடங்களிலே பயிற்சிப் பள்ளிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டன. கடந்தகால ஆட்சியிலே அவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மீண்டும் 17 இடங்களிலும் தரமான ஓட்டுநர்களை உருவாக்குகின்ற அந்தத் திட்டத்தை இந்தத் துறை எடுத்துச் செய்ய இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிதாகப் பணியமர்த்தப்படும் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்குத் தனியாக சிறப்புப் பயிற்சி அளிக்க போக்குவரத்து அகாடமி* (Transport Training Academy) *சென்னையில் நிறுவப்படும். ஏற்கெனவே இங்கிருக்கின்ற நமது தாசில்தார், அல்லது* Collector, I.A.S., Officers *போன்றவர்கள் எல்லாம் பணியில் சேர்ந்தவுடன் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பயிற்சிபெற்றுத்தான் மீண்டும் பணிக்கு வருகிறார்கள். போக்குவரத்துத் துறையில், சேருகின்ற பொறியாளர் பெருமக்கள் படித்துவிட்டு உடனடியாக வேலைக்கு வருகின்றபோது, நேரடியாக அவர்கள் வேலையில் அமர்த்தப்படுகின்றபோது, அவர்களுடைய பணித்திறன் குறைகிறது என்ற காரணத்தால், புதிய* Transport Training Academy *ஏற்படுத்த மத்திய அரசு நிதியுதவி தந்திருக்கிறது. குரோம்பேட்டையிலே அரசுக்குச் சொந்தமான 28 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்திலே புதிய* Transport Training Academy *தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-45*

*சுமார் 115 கோடி ரூபாய் செலவில், தற்போதுள்ள போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் மற்றும் சென்னை மாநகரிலுள்ள பேருந்து நிலையங்கள், மூன்று வருட காலத்திற்குள் மேம்படுத்தப்படும். போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் நலனை முன்னிட்டு, அன்றாடம் சுத்தம் செய்து இயக்குவதற்கு ஏதுவாக, நவீன இரக* washing *இயந்திரங்கள் முக்கியமான பணிமனைகளில் நிறுவப்படும். இதற்கென்று மூன்றே முக்கால் கோடி ரூபாய் நிதியொதுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நெடுந்தூரப் பயணிகளின் வசதிக்காக, சாலையோர உணவு விடுதிகள் முக்கியமான இடங்களில் போக்குவரத்துக் கழகங்களால் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் பேசும்போது ஒரு தனியார் motel இருக்கிறது. அங்கு சென்றுதான் பேருந்தை நிறுத்த வேண்டும். அங்கே பயணிகள் உணவருந்தினால், டிரைவருக்கும், கண்டக்டருக்கும், ஏதோ இலவசமாக உணவு தருகிறார்கள் என்றும், இந்த நிலை மாற்றப்பட்டு, தரமான உணவு தரப்படவேண்டுமென்றும் சொன்னார்கள். அப்படித் தரமான உணவைத் தருவதற்காக, ஒரு புதிய முயற்சியை இந்தப் போக்குவரத்துக் கழகம் எடுத்திருக்கிறது. மதுரையைச் சேர்ந்த போக்குவரத்துக் கழகம், சாத்தூர் பகுதியிலே புதிய motel ஒன்றை நிறுவி, (மேசையைத் தட்டும் ஒலி) அதே இடத்திலே மூசல் பிடிப்பதற்கும், டிரைவர், கண்டக்டர்கள், இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், நல்ல தரமான உணவு தயாரித்து வழங்கும் பணியையும் மதுரை போக்குவரத்துக் கழகம், சாத்தூரில் நிறுவியிருக்கிறது. கும்பகோணம் போக்குவரத்துக் கழகம் துவரங்குறிச்சியிலும், சேலம் போக்குவரத்துக் கழகம், கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூர் செல்கின்ற இடத்திலே 4½ ஏக்கர் இடத்திலே புதிய motel ஒன்றை நிறுவவும், நமது விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் உளுந்தூர்பேட்டையிலும், மதுராந்தகத்திலும் ஒரு motel இந்த ஆண்டு நிறுவப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஏற்கெனவே விரைவுப் போக்குவரத்துப் பேருந்துகளிலே டி.வி.க்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்காக ஒவ்வோர் ஆண்டும் டெண்டர் விடப்பட்டு, டி.வி.க்களை தந்து கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றி, டி.வி.யிலே விளம்பரம் செய்துகொள்ளலாம் என்று அனுமதி தந்து, அவர்களாகவே எந்தக் கட்டணமும் செலுத்தாமல், அந்தக் கட்டணத்திற்குப் பதிலாக--விளம்பரம் செய்து கொள்ளலாம்--புதிய பேருந்துகள் வருகின்றபோது, புதிய டி.வி.தான் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, புறநகர்ப் பேருந்துகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவி, அவற்றைச் சரியான முறையில் பராமரிக்க BOOM (Build, Own, Operate and Manage) என்ற அடிப்படையிலே, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் சமீபத்தில் தொடங்கப்பட்ட Yellow Line மற்றும் Blue Line பேருந்துகள், பயணிகளின் பேராதரவைப் பெற்றுள்ளன. இதேவகையில், வளர்ந்து வரும் கோவை மற்றும் மதுரை நகரங்களிலும்



இந்த முறை விரிவுபடுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல, சென்னை மாநகரில் சமீப காலத்தில் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கிவரும் நெரிசல் நேரப் பேருந்து இயக்கம் (Peak hour Services) மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்தகைய சிறப்புப் பேருந்துகள் மாணவ, மாணவியர் மற்றும் அலுவலகம் செல்வோருக்கும் பெரிதும் நன்மை பயக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெரிசல் மிகு மாநகரப் போக்குவரத்துக் கழகங்களில் பயணச்சீட்டு வழங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதில் நடத்துனர்களின் வேலைப்பளுவைக் குறைக்கவும், பயணிகளின் நலனை முன்னிட்டும் மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள் சென்னை நகரில் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் படிப்படியாக விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருகில் இருக்கின்ற ஆந்திரா, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இருக்கின்ற அத்தனை பேருந்துகளிலும், இப்போது கண்டக்டர்கள் நேரடியாக டிக்கெட்டைத் தந்து, invoice எழுதி வருகிறார்கள். இவ்வளவு கூட்டத்திலும் அவர்களுக்குள்ள அந்த வேலைப்பளுவைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்து இடங்களிலும் அந்தப் புதிய டிக்கெட் தருகின்ற இயந்திரத்தை வாங்கித்தர உத்தரவிட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 500 ரூட்களுக்கு ஒரே இடத்தில். . .

(மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், டிக்கெட் தருகின்ற புதிய இயந்திரத்தை அவைக்குக் காட்டினார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு செகண்டில் டிக்கெட் கொடுத்துவிடலாம். ஒரு திரைப்படத்தில், சிரிப்புப் பகுதியில் வடிவேலு சொல்வார். "யாரையா டிக்கெட் வாங்கிறது" என்றால், "ஏன், இங்க வந்தால் வாங்குவோம். வந்து வாங்கிக்கொள்" என்று சொல்வார். கண்டக்டர் அந்த நெரிசலில் போய் வாங்க முடியாது என்கின்ற காரணத்தினாலே அப்படிச் சொல்வார். எனவே, விரைவாக டிக்கெட் கொடுக்க வேண்டும் என்பதற்காக, இந்தக் கருவியை--8 ஆயிரம் ரூபாயில் இருந்து, 11 ஆயிரம் ரூபாய் வரை இதற்கான விலை--அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள

அனைத்துப் பேருந்துகளுக்கும் வழங்கச் சொல்லி, முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, போக்குவரத்துக் கழகங்களில் இன்றைக்கு மாநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் G.P.S. (Global Positioning System) சோதனை அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன. இப்போது ஒரு பேருந்து புறப்படுகிறது என்று சொன்னால், அந்தப் பேருந்து, எத்தனை மணிக்கு வரும், எந்த நேரத்திற்குப் புறப்படும் என்பதை அறிந்து கொள்வதற்காக, G.P. System விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நிறுவ இருக்கிறோம்.

அதேபோல, On Line Ticketing Service--அனைத்து இடங்களிலும் நேரடியாக நீங்கள் தொலைபேசிமூலமாகவோ அல்லது Computer மூலமாகவோ டிக்கெட்டைப் பெறக்கூடிய வசதியும் விரைவுப் போக்குவரத்துக் கழகங்களிலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-50*

அதேபோல, போக்குவரத்துக் கழகங்களிலே பேருந்து நிலையங்கள் எல்லாம் மிக, மிகப் பழமையானவையாக இருந்துகொண்டிருக்கின்றன. இருக்கின்ற பேருந்து நிலையங்கள், விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலேயெல்லாம் அவற்றை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வோர் இடத்திலும் அந்தப் பேருந்து நிலையங்களிலே பயணிகளுடைய வசதிக்காக, பல்வேறு நல்ல பணிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு இருக்கின்ற தகவல் தொழில்நுட்பம் மற்றும் இதர நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வசதிக்காக, இந்நிறுவனங்களோடு ஒப்பந்தம் மேற்கொண்டு, சிறப்பு நடைகள் Chartered trips இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

பெங்களூர் போனால், அங்கு பார்த்தால், வால்வோ வண்டி ஓடுகிறது, ஆனால் தமிழ்நாடு அரசின் சார்பாக இங்கே வால்வோ வண்டி இல்லையென்று எல்லோரும் சொன்னார்கள். அதை முதலமைச்சர் அவர்களிடம் சொன்னோம். உடனடியாக 10 புதிய வால்வோ வண்டிகளை வாங்கி, தமிழ்நாடு அரசின் சார்பாக சென்னை மாநகரிலே இயக்குவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்தப் பேருந்துகள், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கும் தேவையான அளவிற்கு, ஓரளவிற்குப் புதிய பேருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுத் தீர்மானத்தில் புதிய, புதிய வழித்தடங்கள் வேண்டும், புதிய பேருந்துகள் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நிறுத்தப்பட்ட பேருந்துகளை விட வேண்டும் என்றும் திருவண்ணாமலையிலே நிறுத்தப்பட்ட பேருந்தை இயக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த வெட்டுத் தீர்மானத்தில் எப்பொழுது நிறுத்தப்பட்டது என்று சொல்லவில்லை. ஆனாலும், வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தபோது ஒவ்வொருவரும் புதிய பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பேருந்து என்பது, மூன்று ஆண்டு காலம், ஐந்து ஆண்டு காலம், ஏழு ஆண்டு காலம் என்று ஒவ்வொரு பகுதிக்கும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கும் மேலாக, இப்பொழுது ஒரு பேருந்துடைய சராசரி வயது என்று எடுத்துக்கொண்டால், 9 ஆண்டுகளாக இருக்கின்றது. அதைக் குறைத்து, மீண்டும் ஆறு ஆண்டுகளாகக் கொண்டு வருவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் புதிய பேருந்துகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாங்கித் தந்துகொண்டிருக்கிறார்கள். வெகுவிரைவிலே நீங்கள் சொன்னதைப்போல தேவையானபோது--தேர்தல் நேரத்தில் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறீர்கள்--(குறுக்கீடு) தேவையான வழித்தடங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேருந்துகளை விடச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல இடங்களிலே புதிய பணிமனை உருவாக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். சிவகங்கை மாவட்டத்திலே, சிங்கம்புணரி பகுதியிலே, புதிய பணிமனை இந்த ஆண்டு உருவாக்கப்படும்; அதேபோல குன்றத்தூரில் பணிமனை இந்த ஆண்டு உருவாக்கப்படும்; காட்டுமன்னார்கோவிலில் பணிமனை உருவாக்கப்படும்; சாயல்குடியில் பணிமனை இந்த ஆண்டு உருவாக்கப்படும். நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலும் இந்த ஆண்டு பணிமனை உருவாக்கப்படும். அதற்கென்று

தனியாக நிதி ஒதுக்கப்படும். நமது இராமன் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டிருக்கிறார்கள். நான்கூட பதில் சொல்லும்பொழுது, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் தாருங்கள் என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஒரு கோடி, இருபது இலட்சம் பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு, நீயே திருப்பிக் கேட்டால் என்ன அர்த்தம்? நீ அவர்களிடம் கேட்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நேற்று முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசியபோது, உரிய தொகையை அரசின்மூலமாகத் தந்து, தேவையான இடத்தில் அந்தப் பணிமனைகள் எல்லாம் தொடங்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள் உரையாற்றுகின்றபோது, நாகர்கோவிலில் புதிய தலைமை அலுவலகம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே 22 இடங்களிலே அந்த அலுவலகங்கள் இருந்தன, சிக்கனத்தின் அடிப்படையிலே ஏழு கழகங்களாக மாற்றியமைக்கப் பட்டன. இப்பொழுது பணி பாதிக்கின்றது என்றபோது ஆங்காங்கு M.D. அந்தஸ்து உள்ள புதிய நிர்வாகிகளை, ஆங்காங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகாரம் உள்ள அதிகாரிகளை அங்கு நியமிப்பதற்கும், தேவைப்பட்டால் புதிய Zonal அலுவலகம் உருவாக்குவதற்கும் இந்தத் துறை முடிவெடுக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்துகளைப் பொறுத்த அளவிற்குத் தேவையான விளக்கங்களை உங்களுக்குத் தந்திருக்கிறேன் என்று கருதுகிறேன். இந்தத் துறையிலே இன்னொரு போக்குவரத்துத் துறை, கிட்டத்தட்ட இந்தியாவிலேயே அதிகமான வாகனங்களை உபயோகிக்கின்ற மாநிலமாக, முதல் மாநிலம் நமது மகாராஷ்டிரா மாநிலம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 91,03,620 வாகனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 91,03,620 வாகனங்களையும் பார்த்தால் ஒவ்வொரு வாகனமும் எவ்வளவு காலமாக இருக்கின்றது என்ற கணக்கு இருக்கிறது.

இதிலே எங்களுடைய பணி என்பது, தினந்தோறும்--இந்தப் போக்குவரத்துக் கழகம், நமது வட்டார போக்குவரத்துக் கழக அலுவலகத்தில், மொத்தம் தமிழ்நாட்டில் இருக்கின்ற அலுவலகத்திற்கு 47 போக்குவரத்துக் கழக அலுவலகங்களும், 44 துணை போக்குவரத்துக்



கழக அலுவலகங்களும் இருக்கின்றன. சோதனைச் சாவடிகள் 19 என்ற அளவிலே, 7 J.T.C. (Joint Transport Commissioner) என்ற அளவிலே, இந்த அலுவலகங்களிலே ஒவ்வொரு நாளும்--Learner Licence பெறுவதற்காக 3,086 பேர் வருகிறார்கள். Driving Licence பெறுவதற்காக 4,951 பேர் வருகிறார்கள். ரிஜிஸ்ட்ரேஷன் என்று எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு நாளும், இரண்டு சக்கர வாகனங்கள், 1,661 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. நான்கு சக்கர வாகனங்கள் 713 பதிவு செய்யப்படுகின்றன. மற்ற பேருந்துகள் அல்லது லாரிகள் என்ற வகையிலே 236 வாகனங்கள் தினந்தோறும் பதிவு செய்யப்படுகின்றன. அதனால் நாள் ஒன்றுக்கு தினந்தோறும், 2,487 வாகனங்கள் தமிழ்நாட்டிலே தொடர்ந்து பதிவாகிக்கொண்டேயிருக்கின்றன.

பிற்பகல் 1-55

அதனால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராக இல்லாதபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதுகூட அவர் தினந்தோறும் டி.வி.யைப் பார்த்து சக சட்டமன்ற உறுப்பினர்களிடமும், இயக்கத் தோழர்களிடமும், சொல்வதே, நடைபெறும் விபத்துகளைக் குறைக்க வேண்டும் என்றும், தினந்தோறும் டி.வி.யைத் திறந்தால், இப்படியெல்லாம் கேட்கவேண்டியிருக்கிறதே என்று வருத்தப்பட்டதை பல சட்டமன்ற உறுப்பினர்களும் பல கழகத் தோழர்களும் அறிவார்கள்.

அவர்களுடைய ஆட்சியிலே நடந்ததற்காக, புதிய சாலை விதிகளை நிர்ணயிப்போம் என்று, தேர்தல் நேரத்தில் அல்ல, இங்கே நிதிநிலை அறிக்கையில் சொன்னதற்கிணங்க சாலை விதிகள் உருவாக்கப்பட்டு, அந்தப் புத்தகங்கள் உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. சாலைகள் எப்படிச் சீரமைக்கப்பட வேண்டுமென்றும், தமிழ்நாடு முழுவதும், 300 இடங்கள் Accident Zone என்றளவிலே அவை கண்டறியப்பட்டு, இந்த ஆண்டு 50 இடங்களில் அதனை நிவர்த்தி செய்வதற்காக, மத்திய அரசின் நிதி உதவியோடு 50 கோடி ரூபாய் செலவிலே அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கெனவே உங்களுக்கெல்லாம் தெரியும். 100 இடங்களிலே மருத்துவமனைகளைத் தொடங்குகிறோம் என்று சொல்லி, கிட்டத்தட்ட 91 இடங்களிலே அந்த மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னமும் ஓரிரு நாட்களில், கிட்டத்தட்ட 100 இடங்களில் மருத்துவமனைகளை ஆங் [illegible] நடக்கின்றபோது உடனடியாக அவர்கள் [illegible]

22765-8

சாலையோரங்களிலே அமைத்து இருக்கிறோம். அதுமட்டுமல்ல, அதே மருத்துவமனைகளிலே பாம்புக் கடி, நாய்க் கடி மருந்து-நேற்றைக்குச் சொன்னார்களே நாய்க் கடிக்கு மருந்து இல்லை என்று சொன்னார்களே- அந்த நாய்க் கடிக்கு மருந்து மற்றும் பிரசவம் பார்க்கின்ற அத்தனை வசதிகளும் அந்த மருத்துவமனைகளிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சாலைகளை நேர் செய்யவும், அதேபோல எதிரிலே வரும் வாகனங்கள், அந்த வாகனங்களின் விளக்குகளின் வெளிச்சத்தை மறைப்பதற்காக, கருப்பு வண்ணம் பூசப்பட வேண்டும் என்றும் சட்டம் உருவாக்கப்பட்டது.

அதேபோல, இரு சக்கர வாகனங்களில் செல்கின்றவர்கள் தலைக்கவசம் கட்டாயமாக அணியவேண்டும் என்று சட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, கார்களிலே செல்கின்றவர்கள், பெல்ட் அணிந்து செல்ல வேண்டும் என்ற அந்தச் சட்டமும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும் கடுமையாக, இப்போதுகூட நம்முடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சொன்னார்கள். ஓட்டுநர்களுக்கு லைசன்ஸ் முறை இரத்துச் செய்வது அல்லது பெர்மிட்டை இரத்துச் செய்வது கண்டிக்கத்தக்கது, அதைச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். அதனைச் செய்யாமல் வேறு வழியில்லை. குடித்துவிட்டு வண்டி ஓட்டுகிறார்கள். அவர்களுக்கு ஒரு சிறிய அளவில் தண்டனையாவது கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் இப்போது புதியதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. முதல் தடவை ஒரு மூன்று மாத காலம் அவர்களுக்கு லைசன்ஸ் இரத்துச் செய்யப்படும். அடுத்தமுறை அடியோடு லைசன்சை இரத்துச் செய்வதற்கான ஆணை இப்போது பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குடித்துவிட்டு வண்டியை ஓட்டுபவர்களுடைய லைசன்ஸ் இரத்து என்பது மூன்று மாதம். ஒருமுறைதான் அவர்களுக்கு மன்னிப்பு. அடுத்தமுறை அடியோடு லைசன்ஸ் இரத்து. அவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கின்ற அந்த உரிமையாளர்கள் அவர்களுடைய போக்குவரத்து வாகனத்திற்குரிய உரிமமும் இரத்துச் செய்யப்படும் என்ற சட்டமும் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், விபத்துகளே நடக்காத ஒரு மாநிலமாக உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



இப்போது 35 இலட்சம் வாகனங்கள் இருக்கின்ற போக்குவரத்துத் துறையிலே பணியாளர்களை அதிகப்படுத்தித் தர வேண்டும்; இருக்கின்ற காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று சொன்னதோடு, இவற்றையெல்லாம் பரிசோதிப்பதற்காக, ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய பரிசோதகர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று, புதிய பணியிடங்களை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும், கடந்த ஆண்டு ஐந்து இடங்களில் யூனிட் அலுவலகம் தரப்பட்டது. இந்த ஆண்டு ஐந்து இடங்களில் யூனிட் அலுவலகம் தரப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இரண்டு இடங்களிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக அது உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு, இரண்டு இடங்களிலே அது உயர்த்தப்படவிருக்கிறது. ஒவ்வோர் இடத்திலும், இங்கே சென்னை நகருக்கு வருகின்ற பகுதிகளிலே, 19 இடங்களில் செக்போஸ்ட்கள் இருக்கின்றன. அதில் நொச்சிக்குப்பம் போன்ற முக்கியமான இடங்களில் இருக்கின்ற செக்போஸ்ட்டுகளை, integrated check post-ஆக உருவாக்குவதற்காக ஒவ்வோர் இடத்திற்கும் ஒரு கோடி என்ற அளவிலே எடைமேடையுடன்கூடிய செக்-போஸ்ட். அந்த இடத்திற்கு போனால், லாரி நேராக, அந்த வழியாகத்தான் செல்லமுடியும்; எடை சரிபார்க்கப்படும்; உயரம் சரிபார்க்கப்படும்; அகலம் சரிபார்க்கப்படும். அவர்களுடைய ஒவ்வொரு விஷயத்தையும் சரிபார்க்கக்கூடிய இடமாக இரண்டு செக்போஸ்ட்களை இந்த ஆண்டு அனுமதித்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், முழுமையாக, விபத்தே இல்லாமல் அனைவரும் நல்ல முறையிலே செல்லவேண்டும் என்பதற்காகத்தான், இந்த முறையையெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இதிலே சில அறிவிப்புகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-00*

இந்த ஆண்டு புதிய Unit Office-கள் அரக்கோணம், திருவெறும்பூர், ஓமலூர், பவானி, குளித்தலை ஆகிய 5 இடங்களில் 47 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும்.

திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்தப்படும்.

மேட்டுப்பாளையம், கோவில்பட்டி, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய ஊர்களிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில்

ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கப்படும். இதற்காக ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலே கடலூர், திருச்செந்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆரணி, வள்ளியூர் ஆகிய 5 இடங்களிலுள்ள பகுதி அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்செங்கோடு, திருவண்ணாமலை, பெரியகுளம், புதுக்கோட்டை ஆகிய 4 இடங்களில் செயல்படும் மண்டலப் போக்குவரத்துக் கழக அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

வாகனப் போக்குவரத்து பெருகிவரும் சேலம், திருப்பூர் பகுதி மக்களின் சிரமங்களைப் போக்கும்வகையில், சேலத்தில் உள்ள மண்டலப் போக்குவரத்துக் கழக அலுவலகம், சேலம் தெற்கு, சேலம் வடக்கு என இரண்டாகப் பிரிக்கப்படும். திருப்பூரிலுள்ள மண்டலப் போக்குவரத்துக் கழக அலுவலகம், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு என இரண்டாகப் பிரிக்கப்படும். இதற்காக 62 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஓசூரிலுள்ள இரண்டு சோதனைச் சாவடிகளும், வெட்டிக்குப்பத்திலுள்ள இரண்டு சோதனைச் சாவடிகளும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் முன்னோடித் திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்படும்.

வாகனப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் மற்றும் செயலாக்கப் பணிகளை மேம்படுத்துவதற்காக சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய மாநகரங்களுக்கு முன்னோடித் திட்டமாக 54 இலட்சம் ரூபாய் செலவிலே 50 வாகனப் பரிசோதகர்கள் (Vehicle Examiners) நியமனம் செய்யப்படுவார்கள்.

2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, சாலைப் பாதுகாப்புக் கொள்கை வெளியிடப்பட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், சாலைகளில் விபத்துகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்க இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு 1-9-1993 மற்றும் 7-6-1995 முதல் 19-6-1995 முடிய உள்ள காலத்தில் வேலை நிறுத்தம்



செய்ததனால், 14 நாட்களுக்கு அவர்களுக்கு ஊதியம் இதுநாள் வரை வழங்கப்படவில்லை. அரசுப் பணியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இவ்வரசு, இந்த வேலைநிறுத்தக் காலத்தைப் பணிக் காலமாக மாற்றி ஆணை வெளியிடும் என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சுனாமி என்னும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 38 ஆயிரம் பயனீட்டாளர்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கியின்மூலமாக மானியத்துடன்கூடிய ஆட்டோ permit-கள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு, ஆட்டோக்களுக்குப் புதிய கட்டண விகிதத்தை நாம்தான் இப்போது நிர்ணயம் செய்திருக்கிறோம். 2 கிலோ மீட்டருக்கு 14 ரூபாய் என்றும், அடுத்த ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் 6 ரூபாய் என்றும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. மீட்டர்கள் புதிதாக பொருத்தப்பட வேண்டும் என்று நாட்கள் அவர்களுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 35 சதவிகிதம் ஆட்டோக்களில் மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மேலும், அவர்களுக்கு அந்தப் பணி கடுமையாக்கப்பட்டு, இனி பயனாளிகள் அங்கு செல்கின்றபோது சரியான கட்டண விகிதத்தைத்தான் வாங்க வேண்டும், அதிகமான கட்டணங்கள் வாங்கக்கூடாது என்று முனைப்புடன் செயல்பட இந்த அரசு திட்டமிட்டுள்ளது. Demand-ஐ வைத்துதான் ஒவ்வொரு இடத்திலும்-depending upon the demand-என்று சொல்லுவார்களே, அப்படி வைத்துதான் அந்த ஆட்டோ permit-கள் தமிழ்நாட்டிலே இப்போது சென்னை மாநகரத்தில் மட்டும் 40 ஆயிரம் permit-கள் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த 40 ஆயிரம் permit-கள் இருப்பதை இன்னும் கூடுதலாக வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 5,000 permit-கள் 2.5 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் தமிழ்நாட்டிலே தரப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டு, தேதிகள் வழங்கப்பட்டு, அவர்கள் வழங்கக்கூடிய applications-ஐ எல்லாம் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறோம். 5 ஆயிரம் ஆட்டோ permit-கள் நேரடியாக ஏற்கெனவே வழங்கப்பட்டதைப்போல மானியம் இல்லாமல் வழங்கவும் இவ்வரசு முயற்சிகளை எடுத்திருக்கிறது. விரைவிலே வழங்கப்படும்.

40 ஆயிரம் என்கின்றபோது 50 ஆயிரம் ஆட்டோக்கள் வழங்கினால் ஓரளவிற்குப் புதிய பேருந்துகளும் சென்னை மாநகரத்தில் விடுகிறோம். அந்த நெரிசலைக் குறைப்பதற்கும், அதேபோல ஆட்டோக் கட்டணம் சீராக இருப்பதற்கும் இதெல்லாம் பயன்படும் என்று கருதித்தான் இந்தப் பணியைச் செய்திருக்கிறது.

சென்னை மாநகரிலே மட்டும் 20 இலட்சம் வாகனங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தினந்தோறும் வெளியிலே செல்கின்றபோது, ஒருவர் சென்று இல்லத்திற்கு திரும்பி வரும்போது முகத்திலே பார்த்தால் கருப்பாகக் கரி ஒட்டிக் கொண்டிருக்கும்.

இப்போது சுற்றுப்புறச்சூழல் மிகவும் கெட்டிருக்கிறது என்ற காரணத்தால், இனி வழங்கப்படும் ஆட்டோக்கள் எல்லாம் Gas Auto-க்களாக, CNG ஆட்டோக்களாக வழங்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு, 10 ஆயிரம் ஆட்டோக்களும் Gas மூலம் இயக்கப்படுகின்ற ஆட்டோக்களாக இருக்கின்றன. அதேபோல, மீதம் இருக்கின்ற 40 ஆயிரம் ஆட்டோக்களையும் ஒரு காலக் கட்டத்திற்குள் முழுமையாக Gas Auto-க்களாகவே ஆட்டோக்கள் முழுவதும், இனி சென்னையிலே Gas Auto-க்களாகத்தான் இயக்கப்படும் என்ற நிலையை உருவாக்குவதற்கு இந்தத் துறை முடிவெடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி ஒரு பக்கம் பார்த்தால் தேவையான அளவிற்குப் போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகளை அதிகப்படுத்தியும், புதிய வழித்தடங்களைத் தொடங்கியும் இருக்கிறோம்.

அதேபோல, லைசென்ஸ் முறை என்று வருகிறது. இப்போது லைசென்ஸ் வழங்க 47 வட்டாரப் போக்குவரத்துக் கழக அலுவலகங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் இன்னும் பழங்காலத்தில் இருப்பது போலவே இருக்கின்றன. இனி அவையெல்லாம் கணினிமயமாக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டு, ஒரே இடத்திலிருந்து அத்தனையையும் கண்காணிக்கின்ற பணியாக முதல்கட்டமாக சென்னையில் இருக்கின்ற அத்தனை வட்டாரப் போக்குவரத்துக் கழக அலுவலகங்களும், Unit அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட இருக்கின்றன.

*பிற்பகல் 2-05*

அடுத்து, தற்போது லைசென்ஸ் வழங்குவதைப் பார்த்தால் chip card போல ஒரு கார்டு தருகிறார்கள். அந்தக் கார்டைப் பார்க்கின்றபோது



இனி தருகின்ற லைசென்ஸ் எப்படி இருக்கும் என்று சொன்னால், அனைத்து விவரங்களையும் அதிலே உள்ளடக்கி, அவர்களுடைய லைசென்ஸ் முறைகளையும் அதிலே உள்ளடக்கி, இதிலே தவறே செய்ய முடியாத அளவிற்கு. போலி லைசென்ஸ் பெற முடியாத அளவிற்கு. இனி தமிழ்நாட்டிலே அனைத்து இடங்களிலேயும் chip card ஆக அந்த லைசென்ஸ் வழங்கப்படும், அதற்காக இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது.

அதேபோல, ஏற்கெனவே தெரியும் உங்களுக்கு, லைசென்ஸ் எடுப்பதற்கு என்று சென்றால், கல்லூரி மாணவர்கள் லைசென்ஸைப் பெற எப்படி, எங்கே போய்க் கேட்பது, எப்படிச் செய்வது, எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள இனி ஆன்லைனிலே அனைத்தையும் தெரிந்துகொள்ளக்கூடிய வசதியை இந்தத் துறை உருவாக்கி இருக்கிறது. லைசென்ஸ் வழங்குவது குறித்து ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது, கடந்த கால ஆட்சியிலேயே சொன்னோம். நேரடியாகக் கல்லூரிக்கே சென்று, எங்களுடைய துறை அதிகாரிகள் அவர்களுக்கு learner licence கொடுப்பதாக இருந்தாலும் அல்லது நிரந்தர லைசென்ஸ் கொடுப்பதாக இருந்தாலும் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இனி லைசென்ஸ் கொடுக்கிறபோது நல்ல தரமான ஆட்களாகப் பார்த்துதான் லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மத்திய அரசின் உதவியோடு இரண்டு இடங்களிலே Training Track உருவாக்கப்பட இருக்கிறது. அது கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் செலவிலே இரண்டு இடங்களிலே போக்குவரத்துத் துறையின்மூலமாக செயல்பட இருக்கிறது. ஏற்கெனவே இரண்டு இடங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு உதவியோடு அது செய்யப்பட்டிருக்கிறது. இதைக்காட்டிலும் தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு பயிற்சிப் பள்ளிகள், எங்களுக்கு அனுமதி இல்லை, அனுமதி இல்லை என்று சொல்லியிருக்கின்றன. அதற்கெல்லாம் புதிய சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்குப் புதிய அனுமதி வழங்கப்படும்.

அதேபோல, Leyland நிறுவனத்தார், புதிய, நல்ல டிரைவர்களை உருவாக்கக்கூடிய அளவுக்கு Training Track வைத்திருக்கிறார்கள். இப்போது மாருதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும், புதிய டிரைவர்களை நியமிக்க Training Track உருவாக்குவதற்கு அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இப்படிப் பெரிய நிறுவனத்தினர்கள் அந்த Training Track வைக்கின்றபோது, தரமான ஓட்டுநர்களை உருவாக்க முடியும் என்ற காரணத்தால், அவர்களுக்கெல்லாம் இந்த அரசு அனுமதி அளிக்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பக்கம் நல்ல தரமான ஓட்டுநர்கள், நல்ல தரமான வண்டிகள், தரமான சாலை என்ற அளவில் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. அதேபோல சாலைப் பாதுகாப்பிற்காக பல்வேறு பணிகளை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் சேர்த்து 450-க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அவற்றிலே பலபேர் பணிமனைகளைத் தொடங்க வேண்டும் அல்லது புதிய பேருந்துகள் வேண்டும், புதிய வழித்தடங்கள் வேண்டுமென்ற அந்தக் கோரிக்கைகளே பெரும் பகுதியாக இருக்கிறது. அனைத்தையும் கண்டறிந்து நிச்சயமாக உங்களுக்கு அந்தப் புதிய வழித் தடங்கள், புதிய பேருந்துகள் இந்தத் துறையின் சார்பாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தரப்படும் என்ற உறுதியைத் தந்து, நீங்கள் எல்லாம் இந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 25 — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25- இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.61,56,48,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48- போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.336,44,88,000/-, மூலதனக் கணக்கில் ரூ.75,22,57,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.75,00,03,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 23-4-2007 (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

52. 2005-2006 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

97. மானியக் கோரிக்கை எண் 25 - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

98. மானியக் கோரிக்கை எண் 48 - போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

99. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

100. 2006-2007 ஆம் ஆண்டு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

101. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணி நூல், மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டு அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

102. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2006-2007)

103. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2006-2007)

104. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2006-2007)





## இணைப்பு-I

(416 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### 1. சாலைப் போக்குவரத்து - ஒரு கண்ணோட்டம்

(1) போக்குவரத்துத் துறை, பொருளாதாரத்தின் மூலாதாரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அனைத்து அம்சங்களுடன் கூடிய முழுமையான வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டமைப்பிற்கு வழி வகுக்கிறது. போக்குவரத்து வசதிகள், தொலைதூர கிராமப்புறத் தொழில் முன்னேற்றம், நகரமயமாக்குதல் ஆகியவற்றில் துரித வளர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஆகவே, நாட்டின் தடையற்ற பொருளாதார வளர்ச்சிக்கும், அனைத்துத் துறைகளின் ஒட்டுமொத்தமான மேம்பாட்டிற்கும் காரணமாக அமைகின்ற சாலைப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துப் போக்குவரத்துத் திட்டங்களின் போக்குவரத்து அடிப்படைக் கட்டமைப்பானது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, நமது மாநிலத்திலுள்ள பல்வேறு வகையான போக்குவரத்துக்களில், சாலைப் போக்குவரத்து முதன்மையாகவே உள்ளது. ஏனெனில், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் அனைத்திற்கும் போக்குவரத்து இணைப்புகளை ஏற்படுத்துகிறது.

(2) ஆகவே, மாநிலத்தின் போக்குவரத்து வசதிகளை நெறிப்படுத்திவரும் போக்குவரத்துத் துறையானது, நவீன தொழில்நுட்பம், மாசுபடுதல், போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு அதிக விழிப்புணர்வோடும் தொய்வில்லாத ஆற்றலோடும் புதிய சிந்தனையோடும் செயல்படக்கூடிய முக்கியமான பொறுப்பைக் கொண்டுள்ளது.

### 2. வாகனங்களின் பெருக்கம்

(3) தமிழ்நாட்டில், தற்போதைய நிலையில் வாகனங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 91,03,620 ஆகும். எனவே, ஒட்டுமொத்த

எண்ணிக்கையில், அகில இந்திய அளவில் மகாராட்டிரத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. வாகனங்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் சராசரியாக ஆண்டிற்கு சுமார் 10 சதவீதம் அதிகரித்து வந்துள்ளது.

(4) 2000-2001 ஆம் நிதியாண்டு முதல் 2006-2007-ஆம் நிதியாண்டு வரையில் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு விவரங்கள் முறையே இணைப்பு-1 மற்றும் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் ஒட்டுமொத்தமாக 6,08,325 போக்குவரத்து வாகனங்களும், 84,95,295 போக்குவரத்து அல்லாத பிறவகை வாகனங்களும் உள்ளன. 31-3-2007 அன்றுள்ளபடி, தமிழகத்தில் உள்ள வாகன எண்ணிக்கை விவரம் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(5) தமிழகத்தில் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத பிற வகை வாகனங்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து மொத்தம் 91,03,620 வாகனங்கள் உள்ளன.

## 3. நிருவாக அமைப்பு

(6) போக்குவரத்துத் துறை, உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையர் இத்துறையின் நிருவாகத் தலைவராவார். அவரே, மாநிலப் போக்குவரத்து அதிகாரியாகவும் சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். சாலை விபத்துகளைத் தவிர்த்தல், விபத்திற்குப் பிந்தைய தொடர் நடவடிக்கையை கண்காணித்தல், விபத்துக்குள்ளானவர்களுக்கு அவசர சிகிச்சை அளித்தல், சாலைப் பாதுகாப்பு மற்றும் விதிமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவை உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு குறித்த செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக, இந்திய ஆட்சிப் பணி பதவி நிலையில் உள்ள இணைப் போக்குவரத்து ஆணையர் ஒருவர் (சாலைப் பாதுகாப்பு) போக்குவரத்து ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறார். மேலும், இத்துறையில் 4 இணைப் போக்குவரத்து ஆணையர்கள், 9 துணைப் போக்குவரத்து ஆணையர்கள், 57 வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். போக்குவரத்து வாகனங்களை ஆய்வு செய்தல், வாகனத் தகுதிச் சான்றுகள் வழங்குதல் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் துணைப் போக்குவரத்து ஆணையர்களுக்கும்





பொதுவாக உதவுவதற்காக 299 மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

(7) இம் மாநிலத்திலுள்ள போக்குவரத்துத் துறையின் களப் பணிகளையும் பிற பணிகளையும், இணைப் போக்குவரத்து ஆணையர் ஒருவர், 6 துணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் 47 வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ஆகியோர் நிறைவேற்றுகின்றனர். அத்துடன், 44 போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களும் 19 சோதனைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன.

(8) சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் இணைப் போக்குவரத்து ஆணையர் சென்னை சரக மண்டலப் போக்குவரத்து அதிகாரியாகவும் செயல்படுகிறார். சென்னை மாநகரின் அதிகார வரம்பிற்குட்பட்டு 8 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், போக்குவரத்துப் பகுதி அலுவலகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

(9) சென்னை மாவட்டத்தைத் தவிர 29 மாவட்டங்களில் 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் மற்றும் 43 பகுதி அலுவலகங்களும் உள்ளன. மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர். வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளும், மாநிலப் போக்குவரத்து அதிகாரியும் பிறப்பிக்கும் ஆணைகளுக்கு எதிரான முறையீடுகளும் மறு ஆய்வு மனுக்களும் சென்னையிலுள்ள அரசு போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றத்தால் விசாரிக்கப்பட்டு, தீர்வு செய்யப்படுகின்றன.

## 4. போக்குவரத்துத் துறையின் பணிகள்

(10) 1988 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகனச் சட்டத்தின் விதி முறைகள், 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றைப் போக்குவரத்துத் துறை நிருவகித்து வருகிறது. இத்துறையின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

(i) வாகனம் பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்குதல்

(ii) ஓட்டுநர், நடத்துனர் ஆகியோரின் உரிமங்கள் வழங்குதல் அவற்றைப் புதுப்பித்தல் மற்றும் மேற்குறிப்பு வழங்குதல்

[2007 ஏப்ரல் 20

(iii) பன்னாட்டு ஓட்டுநர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்குதல்

(iv) ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு அனுமதியளித்தல் மற்றும் அப் பயிற்சிப் பள்ளிகளை ஆய்வு செய்தல்

(v) வாகனங்களின் பதிவு, மறு பதிவு, பதிவுச் சான்று புதுப்பித்தல், வாகன உரிமை மாற்றம், தவணைக் கொள்முதல் ஒப்பந்தத்தினை மேற்குறிப்பு வழங்குதல்/பதிவுச் சான்றிதழை இரத்து செய்தல்

(vi) வாகனங்களுக்குத் தகுதிச் சான்று வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(vii) அனைத்துவகைப் போக்குவரத்து வாகனங்களுக்கும் அனுமதிச் சீட்டு வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(viii) போக்குவரத்து வாகனங்களுக்குரிய அனுமதிச் சீட்டில் பெயர் மாற்றம் செய்தல்

(ix) போக்குவரத்து வாகனங்களுக்குரிய அனுமதிச் சீட்டுக்குப் பதிலாக வேறு அனுமதி அளித்தல்

(x) பயணிப் பேருந்து/சிற்றுந்துகளின் வழித்தடங்களை மாற்றுதல்

(xi) போக்குவரத்து வாகனங்களுக்குரிய தற்காலிக அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்

(xii) வாகனங்களுக்கு வரி மற்றும் கட்டணம் வசூல் செய்தல்

(xiii) அண்டை மாநிலங்களுக்கிடையே உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு இம் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் போக்குவரத்து வாகனங்கள் இயக்குவதை உறுதிப்படுத்துதல்

(xiv) அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் வரும் அண்டை மாநில வாகனங்கள் சோதனைச் சாவடிகளில் நுழையும்போது தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்குதல்

(xv) விபத்தில் சிக்கிய வாகனங்கள் குறித்து ஆய்வு செய்தல்

(xvi) வாகனங்களைச் சோதனை செய்தலும் மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிமுறைகளைச் செயலாக்குதலும்

(xvii) தகுதிச் சான்றிதழ் இல்லாத மற்றும் வரி செலுத்தாத வாகனங்களை முடக்கி வைத்தல்



2007 ஏப்ரல் 20]

(xviii) மத்திய மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகள், தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றில் வகுக்கப்பட்ட பல்வேறு விதி முறைகளை செயல்படுத்துதல்

(xix) சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினை, இயற்கை இடர்பாடான மழை, வெள்ளம் போன்ற காலங்கள், தேர்தல் காலங்கள் ஆகிய நேரங்களில் மாவட்ட நிர்வாகத்திற்கும் காவல் துறையினருக்கும் உதவி செய்யும் பொருட்டு வாகனங்களை வழங்குதல்

(xx) பயன்படுத்த இயலாத அரசு வாகனங்களை மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தல்

(xxi) வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினால் காற்று மண்டலம் மாசுபடுவதால், அத்தகைய வாகனங்களை ஆய்வு செய்தல்

(xxii) புகைக் கட்டுப்பாடு சோதனை மையங்களைக் கண்காணித்து உரிமம் வழங்குதல்

(xxiii) மாநில அளவில் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து அரசுக்குப் பரிந்துரை வழங்குதல்

(xxiv) மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்

(xxv) சாலைப் பாதுகாப்பு விதிகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

(xxvi) சாலை விபத்துகளைத் தவிர்க்க, தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் விபத்துகள் ஏற்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதியில் விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு சாலை சீரமைப்பு மற்றும் போக்குவரத்து எச்சரிக்கைக் குறிகள் அமைத்தல்

(xxvii) அவசர விபத்து சிகிச்சை மையங்களின் செயல்பாட்டைக் கண்காணித்து, தனியார் நிறுவனங்களால் ஓரளவிற்கு மட்டுமே நிருவகிக்கப்பட்டு வரும் மையங்களுக்கு நிதியுதவி அளித்தல்

[2007 ஏப்ரல் 20

(xxviii) சாலைப் பாதுகாப்புப் பணிகளில் காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, சுகாதாரத் துறை, பிற அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுடன் ஒருங்கிணைந்து, சாலைப் பாதுகாப்பினை ஓர் இயக்கமாகச் செயல்படுத்துதல்

## 5. வருவாய்

(11) போக்குவரத்துத் துறை, ஆண்டுக்காண்டு சராசரியாக 10 முதல் 11 சதவீதம் கூடுதலாக வருவாய் ஈட்டுகிறது. இத்துறை, 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1,130.14 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2006-2007 ஆம் நிதியாண்டில் இத் துறைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.1,254.16 கோடி ஆகும். ஆனால், இத்துறை 31-3-2007 முடிய ரூ. 1,272.69 கோடி வசூலித்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு இத்துறைக்கான இலக்கு சுமார் ரூ.1,400 கோடியாக இருக்கும்.

(12) போக்குவரத்துத் துறையின் செயலாக்கப் பிரிவு, இணக்கக் கட்டணம் மற்றும் பிற அபராதங்கள்மூலமாக வருவாய் ஈட்டுகிறது. அரசுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிக்க, நிலையான கண்காணிப்பு மற்றும் ஆய்வுமூலமாக அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

(13) கடந்த 5 ஆண்டுகளில் மோட்டார் வாகன வரி மற்றும் கட்டண வகையில் வசூலிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, வசூல் செய்த தொகை ஆகிய விவரங்கள் இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் வரைபடம் இணைப்பு-5-ல் காட்டப்பட்டுள்ளது.

## 6. அலுவலகக் கட்டடங்களும் பிற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும்

### (i) சரக அலுவலகங்கள்

(14) நிருவாக வசதி கருதி, மாநிலப் போக்குவரத்துத் துறை 7 சரகங்களாகப் பிரிக்கப்பட்டு சென்னை, விழுப்புரம், சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த 7 சரக அலுவலகங்களிலும் கோயமுத்தூர், திருநெல்வேலி ஆகிய 2 சரக அலுவலகங்கள் மட்டுமே அவற்றிற்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 5 சரக அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் இனி கட்டப்பட வேண்டும்.



2007 ஏப்ரல் 20]

### (ii) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்

(15) தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 47 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், 29 அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 18 அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

### (iii) போக்குவரத்துப் பகுதி அலுவலகங்கள்

(16) இதேபோன்று, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 44 போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களில், கோவில்பட்டி பகுதி அலுவலகம் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. மீதமுள்ள 43 பகுதி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

### (iv) ஓட்டுநர் தேர்வு தளம்

(17) தகுதிவாய்ந்த ஓட்டுநர்களைத் தேர்வு செய்வதற்கு, ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களின் ஓட்டுநர் திறனைப் பரிசோதிக்க அறிவியல்பூர்வமான ஓட்டுநர் தேர்வு தளம் அவசியமான ஒன்றாகிறது. மொத்தமுள்ள 47 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 44 பகுதி அலுவலகங்களில் தற்போது 25 அலுவலகங்கள் மட்டுமே முழுத்தரம் வாய்ந்த ஓட்டுநர் தேர்வு தள வசதியுடன் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் படிப்படியாக ஓட்டுநர் தேர்வு தள வசதி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (v) சோதனைச் சாவடிகள்

(18) போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 19 சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 18 சோதனைச் சாவடிகள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லையோரங்களில் செயல்பட்டு வருகின்றன. பூந்தமல்லி சோதனைச் சாவடி மட்டும், நகர எல்லைக்குள் செயல்பட்டு வருகிறது. இச்சோதனைச் சாவடி கர்நாடக மாநிலம் பெங்களூரிலிருந்தும், ஆந்திர மாநிலம் சித்தூரிலிருந்தும் வரும் வாகனங்களைக் கண்காணிக்கும் பணியை மேற்கொள்கிறது.

### (vi) நெருங்கிச் சுழலும் நிழற்படக் கருவிமூலம் கண்காணிக்கும் முறை

(19) போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்களின் நடமாட்டம் மற்றும் தலையீட்டினைத் தடுக்கும் பொருட்டு தற்சமயம் (1) சென்னை (வடக்கு), வியாசர்பாடி (2) சென்னை (வடமேற்கு), அண்ணாநகர் (3) சென்னை (தென்மேற்கு), வளசரவாக்கம் (4) மீனம்பாக்கம் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், நெருங்கிச் சுழலும் நிழற்படக் கருவிகளை நிறுவிட அரசு ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இக் கருவி போக்குவரத்து ஆணையர், இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப் பாதுகாப்பு) மற்றும் இணைப் போக்குவரத்து ஆணையர், சென்னை மண்டலம் ஆகியோர்களின் அலுவலகங்களுடன் இணைக்கப்படுவதால் மேற்பார்வையிட வசதியாக இருக்கும். இத்திட்டம் பிற அலுவலகங்களிலும் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

## 7. கணினிமயமாக்கல்

(20) கணினிமயமாக்கல்மூலம் விரைவான, திறமையான நிருவாகத்தை, போக்குவரத்துத் துறை பொதுமக்களுக்கு அளிக்கிறது. அடிப்படைத் தகவல்கள் கணினியில் சேமிக்கப்படுவதால் போலி உரிமங்களின் புழக்கம் தடுக்கப்படுவதோடு, வாகனப் பதிவு, அனுமதிச் சீட்டுகள், ஓட்டுநர் உரிமங்கள் போன்ற அனைத்துப் பணிகளின் விவரங்கள் மற்றும் அவற்றின் முடிவான நிலை குறித்து உடனுக்குடன் தகவல்கள் அறிய இயலும். இம்முறையால் போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் வெளிப்படையாக இருப்பதும் உறுதி செய்யப்படும். போக்குவரத்துத் துறையினைக் கணினிமயமாக்கும் பணி நிலை-1, நிலை-2, நிலை-3 என மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### (i) நிலை–1

(21) நிலை-1 திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கும் பணி 1999 ஜூலையில் சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. அதன் பின்னர், ஒரு வழிகாட்டி அலுவலகம் (Pilot Office), 3 பகுதி அலுவலகங்கள் உட்பட 13 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நிலை-1-ன்கீழ் அனைத்து அலுவலகங்களிலும் "DLRVAS" (Driving Licence Registration of Vehicles Application Software) மென்பொருள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



### (ii) நிலை–2

(22) நிலை-2 திட்டத்தின்கீழ் போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் இந்திய அரசின் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அளித்த வழிகாட்டுக் குறிப்புகளின்படி தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட "வாஹன்" மற்றும் "சாரதி" என்ற பெயர் கொண்ட மற்றொரு மென்பொருள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மென்பொருள் நாடு முழுவதும் போக்குவரத்துத் துறையின் பணிகளை ஒரே சீரான முறையில் செயல்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தனிச் சிறப்பு வாய்ந்த மென்பொருளாகும்.

(23) சென்னை (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் முன்னோடித் திட்டமாக முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட "வாஹன்" மற்றும் "சாரதி" மென்பொருள் பின்னர் நிலை-2 திட்டத்தின்கீழ்வரும் 32 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 8 பகுதி அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு நிலை-2 திட்டத்தின்கீழ் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, தற்போது இப்பணிகள் நிலைபெற்ற தன்மையை அடைந்துள்ளன.

### (iii) நிலை–3

(24) நிலை-1 மற்றும் நிலை-2 திட்டங்களில் விடுபட்ட அலுவலகங்கள் நிலை-3 திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நிலை-3 திட்டத்தின்கீழ் 29 பகுதி அலுவலகங்கள், திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், 7 மண்டல இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம்/துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள், மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றம் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

(25) வழிகாட்டிக் குறிப்புகளின்படி இத்திட்டத்தின்கீழ்வரும் அலுவலகங்களிலும் தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட "வாஹன்" மற்றும் "சாரதி" மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலை-3 திட்டத்தின்கீழ் அனைத்து அலுவலகங்களையும் கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணி முடிவுறும்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றம் உள்ளிட்ட துறையின் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுவிடும்.

(26) தாம்பரம் மற்றும் பூவிருந்தவல்லியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பகுதி அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு 12-2-2007 முதல் பணிகளின் செயல்பாடு நேரடியாக (on line) தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அலுவலகங்களில் தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி நேரடி சேவையைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (iv) நிலை-1 அலுவலகங்களின் மென்பொருளை தேசிய தகவல் மையம் உருவாக்கிய மென்பொருளுக்கு மாற்றுதல்

(27) மேற்கண்ட பத்திகளில் விவரிக்கப்பட்டவாறு போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களையும் கணினிமயமாக்கும் பணி நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும். இருப்பினும், நிலை-1 அலுவலகங்கள் DLRVAS (Driving Licence Registration of Vehicles Application Software) மென்பொருள்மூலம் இயங்கி வருவதால், அத்தகைய அலுவலகங்களும் "வாஹன்" மற்றும் "சாரதி" மென்பொருளுக்கு மாற வேண்டும். இதனால் போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் ஒரே மாதிரியாக "வாஹன்" மற்றும் "சாரதி" மென்பொருள் மட்டுமே பயன்படுத்தப்படும். தற்பொழுது சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் அடிப்படைத் தகவல்களை "வாஹன்-சாரதி" மென்பொருளில் மாற்றம் செய்வதற்காக முன்னோடி அலுவலகமாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. அடிப்படைத் தகவல்களை மாற்றம் செய்வது தொடர்பான ஆரம்பகட்டப் பணிகள் முடிவடைந்து, இறுதி சோதனை செயல்பாடுகள் 15-2-2007 அன்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. சோதனை செயல்பாடு வெற்றியடைந்தபின், நிலை-1 அலுவலகங்களின் மென்பொருளை "வாஹன்-சாரதி" மென்பொருளுக்கு மாற்றம் செய்யும் பணி முடிவுறும்.

### (v) அனைத்து அலுவலகங்களையும் இணைக்கும் பணி

(28) அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்/பகுதி அலுவலகங்களை மண்டல இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மற்றும் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள் மூலமாக மாநிலப் போக்குவரத்து அதிகாரமன்ற அடிப்படைத் தகவலுடன் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திருவாளர்கள் எல்காட் நிறுவனத்தினரால் உருவாக்கப்படவுள்ள TNSWAN என்ற தொடர்பு சாதனத்தின்மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.



### (vi) இணையதளம்

(29) போக்குவரத்துத் துறையின் இணையதளம் http://tn.gov.in/sta ஆகும். இது போக்குவரத்துத் துறையின் பணிகளைப் பற்றிய முழுமையான விவரங்களை அளிக்கிறது. இந்த இணையதளம்மூலம் பொதுமக்கள் பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம், பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றை எளிதாகப் பெறும் வழிமுறையினையும் அதற்குத் தேவையான விவரத்தினையும் அறிந்துகொள்ள முடியும். மேலும், மக்கள் சாசனம், புள்ளியியல் விவரம், மோட்டார் வாகன வரி விவரம், அலுவலக அமைவிடம் ஆகியவற்றைப் பற்றிய தகவலையும் இந்த இணையதளத்தின்மூலம் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(30) பொது மக்கள் தங்களின் குறைகள் மற்றும் புகார்களை "http:\\stahelpline.tn.nic.in" இணையதளம்மூலம் பதிவு செய்யலாம். குறைகளுக்குத் தீர்வு காண, சம்பந்தப்பட்ட போக்குவரத்துத் துறை அலுவலகங்கள் 48 மணி நேரத்திற்குள் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 8. சாலைப் பாதுகாப்பு

(31) விபத்துகளைத் தவிர்க்கவும், விலை மதிப்பற்ற உயிர்களைக் காக்கவும், உயரிய பாதுகாப்பை உறுதி செய்யவும் பொது மக்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆர்வமுள்ள அனைத்துப் பிரிவினரையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த அரசு முனைப்போடு செயல்படும்.

(32) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலைப் பாதுகாப்பு நிதி, சாலை மேம்பாடு, சாலைகளில் சமிக்ஞை விளக்குகள் நிறுவுதல், அறிவிப்புப் பலகைகள் வைத்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. உடல் பரிசோதனை, கண் பரிசோதனை போன்ற மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்வது தவிர சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்களுக்குக் கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது. பொறுப்பின்றியும், மது அருந்தியும் வாகனம் ஓட்டி விபத்துக்களை ஏற்படுத்தும் ஓட்டுநர்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்க காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள்

ஒருங்கிணைந்து செயலாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு சாலைப் பாதுகாப்பு நிதியாக ரூ.6 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### (i) சாலைப் பாதுகாப்புப் பணிகள்

(33) சாலைப் பாதுகாப்பு ஆணையரகத்தின் முக்கியமான சில பணிகள் பின்வருமாறு:-

- ❖ தமிழகத்தில் செயல்படுத்த வேண்டிய சாலைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்
- ❖ மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல்
- ❖ சாலை விபத்துகள் குறித்த புள்ளிவிவரங்களை ஆய்வு செய்து விபத்துக்குரிய காரணங்களைக் கண்டறிந்து விபத்தினைத் தவிர்க்கும் வழிமுறைகளைக் கண்டாய்தல்
- ❖ போக்குவரத்து சமிக்ஞைகள், அடையாளக்குறிகள், வழித்தடுப்பான்கள், பிரதிபலிப்பான்கள் போன்ற சாலைப் பாதுகாப்புக் கருவிகளைத் தேவையான இடங்களில் நிறுவுதல்
- ❖ ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்து தேர்வு நடத்துவதுடன், பொது மக்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்து எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- ❖ இந் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலை ரோந்து பிரிவுகளை ஒருங்கிணைத்து வழிநடத்துதல்,
- ❖ சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் நிதியுதவி அளிப்பதற்காக மாவட்ட ஆட்சியர்கள், பல்வேறு அமைப்புகள் அரசுசாரா அமைப்புகள் ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட திட்டங்களுக்கு கருத்துத் தெரிவித்துப் பரிந்துரைத்தல்
- ❖ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி சிகிச்சை அளிக்கவும் நிவாரணம் வழங்கவும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்
- ❖ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் காவல் துறையுடன் இணைந்து வாகனங்களினால் ஏற்படும் ஒலி/காற்று மாசுகளைக் கட்டுப்படுத்துதல்



### (ii) சாலைப் பாதுகாப்பு வாரம்

(34) சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடமும், பள்ளி/கல்லூரி மாணவர்களிடமும், ஓட்டுநர்களிடமும் மற்றும் சாலையைப் பயன்படுத்தும் அனைவரிடமும் ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி திங்கள் முதல் வாரத்தில் சாலைப் பாதுகாப்பு வார விழா மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

(35) இந்த நோக்கத்திற்காகவும் போக்குவரத்து விதிகளைத் தெரிவிக்கவும் சாலைப் பாதுகாப்பு குறித்து பொன்மொழிகளை எழுதி வைக்கவும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது தவிர, சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக விபத்துகளை ஏற்படுத்தும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

### (iii) சாலைப் பாதுகாப்புக் குழு

(36) மாநில அளவிலும், மாவட்ட அளவிலுமுள்ள சாலைப் பாதுகாப்புக் குழு சாலைப் போக்குவரத்துப் பாதுகாப்பு அம்சங்களை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்துகிறது.

## 9. அவசர விபத்து சிகிச்சை மையங்கள்

(37) பெருகிவரும் வாகனங்களையும், சாலை விபத்துகளையும் கருத்திற்கொண்டு விபத்துக்குள்ளாகுபவர்களுக்கு உரிய நேரத்திற்குள் முதலுதவி அளித்து விபத்துக்குள்ளானவர் அல்லது அவர்களுடைய உறவினர்களின் விருப்பத்திற்கேற்ப அருகில் உள்ள அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளில் மேல் சிகிச்சைக்காகச் சேர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யும் நோக்கத்துடன் அனைத்து தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் தோராயமாக ஒவ்வொரு 50 கி.மீ. தூர இடைவெளியில் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்களைத் தொடர்புகொள்ள திருவாளர்கள் BSNL நிறுவனம் 1073 என்ற எண் ஒதுக்கீடு செய்து கட்டணமில்லா சேவையை வழங்குகிறது.

(38) தற்போது 91 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது செயல்பட்டு வரும் 54 மையங்களுக்குத் தனியார் மருத்துவமனைகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் பொறுப்பேற்றுக்கொள்கின்றன. மீதமுள்ள 37 மையங்களுக்கு அரசு பகுதி நிதி உதவியாக ஒரு மையத்திற்கு ஒரு மாதத்திற்குச் செலவாகும் தொகை அல்லது உயரளவு

ரூ.40,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகையை வழங்குகிறது. இதுவரையில் இம் மையங்கள் தக்க சமயத்தில் சிகிச்சை அளித்ததால் 2006-2007 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளான 16796 பயணிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. விபத்துகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு 6-ல் உள்ளது.

## 10. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு

(39) சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வயது, சம்பாதிக்கும் திறன், விபத்திற்கான காரணம் முதலியவற்றையொட்டி அவர்களுக்கு இழப்பீடு வழங்க 1988 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகனச் சட்டம் வகை செய்கிறது. விபத்திற்கு யார் காரணமாக இருந்தாலும் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை வழங்க மேலும் இச் சட்டம் வகை செய்கிறது. இந்தக் கோரிக்கைகள் குறித்து மாநிலம் முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகன விபத்து கோரிக்கைகள் நடுவர் மன்றங்கள்மூலம் தீர்வு காணப்படுகிறது. பின்வரும் அளவின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விபத்து நிவாரண நிதியின்கீழ் சாலை விபத்துக்குள்ளானவர்களுக்கும், அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கும் கருணைத் தொகையும் அனுமதிக்கப்படுகிறது. மாவட்டங்களில் வருவாய் கோட்டாட்சியர்கள் மூலமாக வழங்கப்படுகிறது:

| தொடர் எண் | இழப்பின் தன்மை | இழப்பீடு ரூபாய் |
|---|---|---|
| 1. | இறப்பு | 10,000/- |
| 2. | நிரந்தர செயலிழப்பு | 6,000/- |
| 3. | ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 4,000/- |
| 4. | இதர இனங்கள் | 500/- |

(40) தவிரவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சாலை விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இழப்பிற்கு ஆளானவர்களுக்கும் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளினால் ஏற்படும் விபத்துகளினாலும், பிற வாகனங்களினால் ஏற்படும் விபத்துகளினாலும் உயிரிழந்தோரின்



குடும்பத்தினருக்கு ரூ.50,000/-ம், கடுமையாகக் காயமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.15,000/-ம், சிறு அளவில் காயமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.5,000/-ம் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

## 11. தலைக் கவசம் அணிவதைக் கட்டாயமாக்குதல்

(41) இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்வோர் விபத்துக்குள்ளாகும்போது தலைப் பகுதியில் ஏற்படக்கூடிய காயங்களின் பாதிப்பினைக் கருத்திற்கொண்டு, இம் மாநிலத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுபவரும், பின்னிருக்கையில் அமர்ந்து செல்பவர் அனைவரும் தலைக் கவசம் அணிந்து செல்வதைக் கட்டாயமாக்குவது தொடர்பான 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 129 ஆம் பிரிவில் இடம் பெற்றுள்ள விதிமுறைகளையும், 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 177 ஆம் பிரிவின்கீழ் உள்ள தண்டனை வழங்க வகை செய்யும் விதிமுறைகளையும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. படிப்படியாக, அதாவது சென்னை மாநகரம் மற்றும் மாநிலத்தில் உள்ள ஏனைய 5 மாநகராட்சிப் பகுதிகளில் 1-6-2007 ஆம் நாளிலிருந்தும் எஞ்சியுள்ள பகுதிகளில் 1-7-2007 ஆம் நாளிலிருந்தும் தலைக் கவசம் அணிவதைக் கட்டாயமாக்குவதை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 12. மோட்டார் வாகனங்களில் முகப்பு விளக்குகளில் கருப்பு வண்ணம் பூசுதல் (Bull's Eye)

(42) இரவு நேரப் பயணங்களின்போது வாகனத்தின் முகப்பு ஒளியை கீழ்நோக்கி ஒளிரச் செய்யக்கூடிய கருவியை இயக்க ஓட்டுநர்கள் தவறிவிடுகின்றனர். இதனால் எதிரில் வரும் வாகன ஓட்டுநர்களுக்கு கண் கூச்சம் ஏற்பட்டு பெரும்பாலான விபத்துகள் ஏற்படுவதாக அறியப்படுகிறது. எதிரில் வரும் வாகன ஓட்டுநர்களின் கண் கூசுவதைக் குறைக்கவும், விபத்தைத் தவிர்க்கவும் ஏற்கெனவே அறிவித்தபடி அனைத்து மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையத்தில் கருப்பு வண்ணம் பூசுவதைக் கட்டாயமாக்கிட 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகளைச் சேர்ந்த 105 ஆம் விதியில் திருத்தம் செய்யும் அறிவிக்கையினை அரசு வெளியிட்டுள்ளது.

(43) மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும்போதும், தகுதிச் சான்று வழங்குதல்/புதுப்பித்தலின்போதும், வாகனத் தணிக்கையின்போதும் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது. இதை ஓட்டுநர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 13. ஆட்டோ ரிக்ஷாக்களை திரவ பெட்ரோலிய எரிவாயுமூலம் இயக்குதல்

*(44)* மோட்டார் வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை, காற்று மாசுபடுவதற்கு முக்கியக் காரணமாக இருக்கிறது. மத்திய மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளில், வாகனங்கள் வெளியிடக்கூடிய புகையின் அனுமதிக்கத்தக்க அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவிற்கு அதிகரித்திருப்பதால், மோட்டார் வாகனங்களினால் மாசு ஏற்படும் பிரச்சினை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு அதிகரித்துள்ளது.

*(45)* இந்தியாவில் சென்னை உட்பட 9 மாநகரங்கள் அதிக அளவில் மாசு ஏற்படக்கூடிய மாநகரங்கள் என அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களினால் ஏற்படும் மாசின் அளவைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தனியார் துறையில், தனியாருக்குச் சொந்தமான 238 கணினி மயமாக்கப்பட்ட வாகனப் புகை பரிசோதனை மையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரில் இயங்கிவரும் ஆட்டோ ரிக்ஷாக்களை திரவ பெட்ரோலிய எரிவாயு பயன்படுத்தி இயக்கும் வகையில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இன்றுள்ள நிலவரப்படி சென்னையில் 23 திரவ எரிவாயு சில்லறை விற்பனை நிலையங்கள் உள்ளன.

*(46)* வாகனங்களுக்கு குறிப்பிட்ட காலந்தோறும் மாசு கட்டுப்பாட்டுச் சோதனை செய்வதைக் கட்டாயமாக்குவதற்கும், திடீரென சோதனை செய்வதற்கும் போக்குவரத்துத் துறையின் 7 மண்டல அலுவலகங்களிலும், 47 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் மத்திய அரசின் நிதியுதவியோடு, மாசுக் கட்டுப்பாடு சோதனைச் சாதனங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 14. ஆட்டோ ரிக்ஷா கட்டணங்களை நிர்ணயித்தல்/ஆட்டோ ரிக்ஷாக்களுக்குப் பயண முன்பதிவுக் கட்டண முறை

*(47)* ஆட்டோ ரிக்ஷா சங்கங்களின் பிரதிநிதிகள், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், பொறுப்பாளர்கள், ஆட்டோ ரிக்ஷா பயணிகள் மற்றும் தொடர்புள்ள ஆர்வலர்கள் அனைவருடனும் கலந்தாலோசித்த பின்னர், ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளம் போன்ற அண்டை



மாநிலங்களில் நடைமுறையில் உள்ள ஆட்டோ ரிக்ஷா கட்டண விகிதங்களைக் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணங்களை அரசு அண்மையில் திருத்தியமைத்துள்ளது. இதன்படி, குறைந்தபட்சம் முதல் இரண்டு கிலோ மீட்டருக்கு ரூபாய் 14/- எனவும், அதன்பின் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூபாய் 6/- எனவும் கட்டணங்கள் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

*(48)* ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணத்தைத் திருத்தியமைக்கும் ஆணை 26-1-2007 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. ஆட்டோ ரிக்ஷா கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டதும், சென்னையில் ஆட்டோ ரிக்ஷா பயண முன்பதிவுக் கட்டண முறை அறிமுகம் செய்யப்பட்டதும் பொதுமக்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 15. ஸ்மார்ட் கார்டு முறையை அறிமுகப்படுத்துதல்

*(49)* மத்திய அரசு 31-5-2002-ஆம் நாளிட்ட GSR 400 (E) ஆம் எண் ஆணையில் பிறப்பித்த அறிவிக்கை மூலம், 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதிகளைச் சேர்ந்த விதிகள் 2, 16(2) மற்றும் 48 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்துள்ளதோடு முறையே, படிவம் 7 மற்றும் படிவம் 23 A-ல் பதிவுச் சான்றிதழ்களும், ஸ்மார்ட் கார்டு என்று சொல்லக்கூடிய கணினி அட்டைகளின்மூலம் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கும் முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. படிவம் 7-ல் வழங்கப்படக்கூடிய இத்தகைய ஓட்டுநர் உரிமம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி, கண்ணால் பார்த்துப் படித்து அறியக்கூடியதாகும். இரண்டாவது பகுதி, கணினியால் மட்டும் கண்டறியக்கூடியதாகும். ஸ்மார்ட் கார்டு முறையில் பதிவுச் சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரையில், அதுவும் ஓட்டுநர் உரிமத்தில் குறிப்பிடப்பட்டதைப் போன்றே இரு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்.

### ஸ்மார்ட் கார்டு முறை மூலம் ஏற்படக்கூடிய சில முக்கிய நன்மைகள்

- ❖ பொது மக்களுக்கு விரைவான, எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள வழிகளில் ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் பதிவுச் சான்றுகள் வழங்க இயலும்.
- ❖ மாற்றவோ திருத்தவோ இயலாத அடையாள அட்டையை விண்ணப்பதாரர்களுக்கு வழங்க இயலும்.

- கணினிமயமாக்கப்பட்ட அடிப்படைத் தகவல் தொகுப்பிலிருந்து தகவல்களைப் பெற இயலுவதால், தேவையான விவரங்களை மிகக் குறுகிய காலத்திலேயே சரிபார்க்க இயலும்.
- அரசு / துறைகள் அதிக திறம்பட்ட முறையில் கட்டுப்பாடு செலுத்தவும். சரிபார்க்கவும் இயலும்.
- போலி ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் மோசடிகள் செய்வதை முற்றிலும் தடுக்க இயலுவது இம் முறையின் இன்னொரு முக்கியமான அனுகூலமாகும்.

*(50)* ஸ்மார்ட் கார்டு முறையைச் செயல்படுத்துவதன்மூலம் பொதுமக்களுக்கு சீரிய முறையில் சேவை செய்ய இயலும் என்பதை உறுதி செய்வது மட்டுமின்றி, தகவல்களைப் பாதுகாக்க இயலும் என்பதாலும், இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் படிப்படியாக அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 16. உயர் பாதுகாப்பு பதிவெண் பலகைகள்

*(51)* 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகனங்கள் விதிகளைச் சேர்ந்த 50 ஆம் விதியை மத்திய அரசு திருத்தியதன் அடிப்படையில், 28-9-2001 ஆம் நாள் முதல் பதிவு செய்யப்படும் புதிய வாகனங்கள் அனைத்திற்கும் உயர் பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட புதிய பதிவு எண் பலகைகள் பொருத்தப்பட வேண்டும். பழைய வாகனங்களைப் பொறுத்தவரையில் 28-9-2001 ஆம் நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள் இது செயல்படுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு மேலும் அறிவுறுத்தியது. மத்திய அரசின் வழிகாட்டுக் குறிப்புகளின்படியும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும் இம் மாநிலத்தில் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 17. பயணிகள் பேருந்துகளை நாட்டுடைமையாக்குதல்

*(52)* அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சில அனுமதிகளைத் தனியார் உரிமையாளர்களுக்கு மாற்றம் செய்ய, 2002 ஆம் ஆண்டில் அரசு முடிவு செய்து, அதற்கான ஏற்பளிக்கப்பட்ட வரைவு திருத்த நாட்டுடைமைத் திட்டத்தை 12-11-2002-ல் வெளியிட்டது. அதனை எதிர்த்து, சில தொழிற் சங்கங்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து,



தடையாணை பெற்றனர். 12-12-2006 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மேற்சொன்ன 12-11-2002 ஆம் நாளிட்ட வரைவு அறிவிக்கையில் வெளியிடப்பட்ட திட்டத்தைத் தொடர்வது இல்லை என அரசு முடிவு செய்துள்ளது என்று உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த விவர அறிவிக்கையைப் பதிவு செய்த பின்னர், சென்னை உயர் நீதிமன்றம், நீதிப் பேராணை மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்தது.

## 18. சிற்றுந்துத் திட்டம்

*(53)* தற்போது பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, அப்பகுதிகளில் சிற்றுந்துகள் இயக்க, தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்க 1997 ஆம் ஆண்டில் அரசு முடிவு செய்தது. ஆனால், தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு மோட்டார் வாகன (சிறப்பு விதிமுறைகள்) சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டில் அறிவிக்கையிடப்பட்ட நாட்டுடைமையாக்கம் குறித்த மாவட்ட வாரியான பகுதித் திட்டங்கள் ஆகியவற்றின்படி தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குப் புதிய பயணிப் பேருந்து அனுமதிகளை வழங்க இயலாத நிலை இருந்தது. எனவே, வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சிற்றுந்து இயக்கும் அனுமதிகளை வழங்க இயலும் வகையில் 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டம் 102 ஆம் பிரிவின்கீழ் மேற்சொன்ன நாட்டுடைமைத் திட்டத்தினை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

*(54)* அதன்படி, செப்டம்பர் 1997 ஆம் ஆண்டில், ஒப்புதலளிக்கப்பட்ட மாற்றியமைக்கப்பட்ட பகுதி பற்றிய திட்டத்தை அறிவிக்கையிட்டது. அதனைத் தொடர்ந்து, சிற்றுந்துகளை அனுமதிக்கக்கூடிய வழித்தட நீளம், ஏற்கெனவே பேருந்து வசதியுள்ள பகுதியில் அனுமதிக்கக்கூடிய தூரம், கட்டணவீதம், இருக்கை எண்ணிக்கை, சக்கர அமைப்பு, வண்டியின் நிறம் ஆகியவை குறித்து அரசாணைகளும் வெளியிடப்பட்டன. தொடக்கத்தில் 16 கி.மீ. வரை வழித்தட நீளமும், அதில் 1 கி.மீ. தூரம்வரை அறிவிக்கையிடப்பட்ட பகுதிகளில் சிற்றுந்துகள் செல்லவும் அனுமதிக்கப்பட்டது. பின்பு, அறிவிக்கையிடப்பட்ட பகுதியில் சிற்றுந்துகள் செல்லக்கூடிய தூரம், பேருந்து அனுமதிக்கப்பட்ட வழித்தட தூரமான 16 கிலோ மீட்டரில், 4 கி.மீ. ஆக அதிகரிக்கப்பட்டது. இதோடு, பல்வேறு வழக்குகள் காரணமாக தடைகள் ஏற்பட்டதால் இத்திட்டத்தின் நோக்கத்தை முழுமையாக எய்த இயலவில்லை. தற்போது, இது சம்பந்தமான

வழக்குகள், அரசு எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில் முடிவுபெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து சிற்றுந்துத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

## 19. பகுதி-2 திட்டங்கள் 2007-2008

*(55)* பின்வரும் புதிய திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளன:-

### (i) பணம் எண்ணும் இயந்திரங்கள் வழங்குதல்

*2007-2008* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *43.50* இலட்சம் செலவில், போக்குவரத்துத் துறையின் மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்களுக்கு பணம் எண்ணும் *87* இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

### (ii) புதிய ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைத்தல்

*2007-2008* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *54.00* இலட்சம் செலவில், ஓட்டுநர் உரிமம் கோரும் மனுதாரரின் வாகனம் ஓட்டும் திறமையைச் சோதனை செய்ய ஏதுவாக இரண்டு ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் முறையே, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கட்டப்படும்.

### (iii) தொலைபேசி இணைப்புகளுடன் நிகரிகள் வழங்குதல்

*2007-2008* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *8.60* இலட்சம் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்/ பகுதி அலுவலகங்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச் சாவடிகளுக்கு தொலைபேசி இணைப்புகளுடன் இணைந்த *43* நிகரி இயந்திரங்கள் வழங்கப்படும்.

### (iv) ஒளி நகல் இயந்திரங்கள் வழங்குதல்

*2007-2008* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *20.00* இலட்சம் செலவில் போக்குவரத்துத் துறையின் மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம், மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்/ வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு *20* ஒளி நகல் இயந்திரங்கள் வழங்கப்படும்.



### (v) புதிய வாகனங்கள் வாங்குதல்

*2007-2008* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *54.00* இலட்சம் செலவில் மாநிலப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் பயன்பாட்டிற்காக *12* புதிய பொலிரோ ஈப்புகள் வாங்கப்படும்.

## 20. முடிவுரை

*(56)* பொதுமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் முழுமையான பாதுகாப்புடன் திறமையான, முனைப்பான மற்றும் வெளிப்படையான சேவை வழங்கிடவும், சாலைகளைப் பயன்படுத்தும் அனைவரும் பாதுகாப்பு முறைகளை உணர்ந்திடச் செய்யவும், போக்குவரத்துத் துறைக்கு மிக முக்கியமான பொறுப்புணர்வு உள்ளது. வாகனப் போக்குவரத்து வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டுவரும் இந்த காலக் கட்டத்தில் உள்ளுணர்வோடும், பொறுப்புடனும் கடமை ஆற்றிட இத்துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

## இணைப்பு—1

### 2000—2001 ஆம் நிதியாண்டு முதல் 2006—2007 ஆம் நிதியாண்டுவரை பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையும், வகைகளும்

| ஆண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் | வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | மற்ற வாகனங்கள் | | |
| 2000-2001 | 421365 | 4163002 | 577715 | 5162082 | 12.04 |
| 2001-2002 | 432106 | 4600565 | 625426 | 5658097 | 9.61 |
| 2002-2003 | 457448 | 5073643 | 677946 | 6209037 | 9.74 |
| 2003-2004 | 472172 | 5547755 | 732546 | 6752473 | 8.75 |
| 2004-2005 | 493926 | 6106057 | 803761 | 7403744 | 9.64 |
| 2005-2006 | 581106 | 6750328 | 890296 | 8221730 | 11.05 |
| 2006-2007 | 608325 | 7503426 | 991869 | 9103620 | 10.73 |



## இணைப்பு—2

### போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



**போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு**






**மொத்த வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு**



## இணைப்பு—3

**31–3–2007 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—**

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| பயணிப் பேருந்துகள் | | இரு சக்கர வாகனங்கள் | |
| மாநில போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகள் | 16,240 | மோட்டார் சைக்கிள் | 32,69,611 |
| உபரிப் பேருந்துகள் | 1,280 | ஸ்கூட்டர் | 11,48,698 |
| மொத்தம் | 17,520 | மொபெட்டுகள் | 30,85,117 |
| தனியாரால் இயக்கப்படும் பயணிப் பேருந்துகள் | 5,212 | மொத்தம் | 75,03,426 |
| உபரிப் பேருந்துகள் | 1,629 | மோட்டார் கார் | 7,45,321 |
| மொத்தம் | 6,841 | ஜீப்புகள் | 41,764 |
| மொத்த பயணிப் பேருந்துகள் | 24,361 | மூன்று சக்கர வண்டிகள் | 4,171 |
| சிற்றுந்துகள் | 3,985 | ஸ்டேஷன் வாகன் | 2,759 |
| உபரி சிற்றுந்துகள் | 50 | டிராக்டர்கள் | 1,08,088 |
| மொத்த சிற்றுந்துகள் | 4,035 | மூன்று சக்கர வாகனங்கள் | 54,207 |
| ஒப்பந்த வாகனங்கள் | | நான்கு சக்கர வாகனங்கள் | 12,617 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | 1,36,986 | சாலை சமனிகள் | 1,385 |
| வாடகை சீருந்து | 1,676 | பிற வாகனங்கள் | 21,557 |
| சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி) | 47,804 | | |
| சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி) | 7,922 | | |
| மேக்ஸி கேப் (மாநில அனுமதி) | 26,158 | | |



| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| பயணிப் பேருந்துகள் | | இரு சக்கர வாகனங்கள் | |
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 1,108 | | |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 466 | | |
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 144 | | |
| மொத்தம் | 2,22,264 | | |
| பிற இனங்கள் | | | |
| தனியார் சேவை வாகனங்கள் | 5,807 | | |
| பள்ளிப் பேருந்துகள் | 8,796 | | |
| அவசர கால ஊர்திகள் | 3,728 | | |
| தீயணைப்பு வாகனங்கள் | 1,542 | | |
| மொத்தம் | 19,873 | | |
| சரக்கு வாகனங்கள் | | | |
| சுமையுந்துகள் (மாநில அனுமதி) | 1,34,495 | | |
| சுமையுந்துகள் (தேசிய அனுமதி) | 33,898 | | |
| இழுவை வண்டிகள் | 57,808 | | |
| இலகு ரக வாகனங்கள் | 1,03,911 | | |
| தொடர் வண்டிகள் | 7,680 | | |
| மொத்தம் | 3,37,792 | | |
| நிகர மொத்தம் | 6,08,325 | மொத்தம் | 84,95,295 |

**சுருக்கம்**

| | |
|---|---|
| போக்குவரத்து வாகனங்கள் | 6,08,325 |
| போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | 84,95,295 |
| **மொத்தம்** | **91,03,620** |

[2007 ஏப்ரல் 20

## இணைப்பு–4

**வருவாயின் வளர்ச்சி (ரூபாய் கோடியில்)**

| வருவாய் ஆண்டு | ஆண்டு இலக்கு | வசூல் செய்தது | வசூல் சதவிகிதம் | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2001–2002 | 654.52 | 651.12 | 99.48% | 9.92% |
| 2002–2003 | 817.73 | 749.35 | 91.18% | 14.51% |
| 2003–2004 | 1003.23 | 938.42 | 93.54% | 25.86% |
| 2004–2005 | 1031.97 | 1018.97 | 98.74% | 8.58% |
| 2005–2006 | 1137.80 | 1130.14 | 99.33% | 10.91% |
| 2006–2007 | 1254.16 | 1272.69 | 101.47% | 12.61% |



2007 ஏப்ரல் 20]

## இணைப்பு – 5

**போக்குவரத்துத் துறையின் வருவாயின் வளர்ச்சி**




| | 2001–02 | 2002–03 | 2003–04 | 2004–05 | 2005–06 | 2006–07 |
|---|---|---|---|---|---|---|
| இலக்கு | 654.52 | 817.73 | 1003.23 | 1031.97 | 1137.8 | 1254.16 |
| வசூல் | 651.12 | 749.35 | 938.42 | 1018.97 | 1130.14 | 1272.69 |

ஆண்டு

[2007 ஏப்ரல் 20

## இணைப்பு - 6

**தமிழ்நாட்டில் சாலை விபத்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை**

| வருடம் | மொத்த விபத்துக்கள் | உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள் | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2001 | 51978 | 8579 | 9571 |
| 2002 | 53503 | 9012 | 9939 |
| 2003 | 51025 | 8393 | 9275 |
| 2004 | 52508 | 8733 | 9507 |
| 2005 | 51152 | 8358 | 9215 |
| 2006 | 55145 | 10055 | 11009 |



2007 ஏப்ரல் 20]

## இணைப்பு–II

*(416 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### 1. முன்னுரை

உலகம் முழுவதும் அரசு போக்குவரத்து வசதிகளை பொது மக்கள் மென்மேலும் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவும் அதன்மூலம் தனிநபர் வாகனங்களின் பயன்பாட்டினைக் குறைக்கவும் அரசு போக்குவரத்துத் துறையினர் கடும் முயற்சியினை மேற்கொண்டுள்ளனர். பொது மக்களில் குறைந்தபட்சம் 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதத்தினர் அரசு போக்குவரத்து அமைப்புகளை உறுதியாகப் பயன்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் சொந்த வாகனங்களைப் பயன்படுத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும்கூட இதுவே உண்மை நிலையாகும். அதிகரித்து வரும் தூய்மைக் கேடு, போக்குவரத்து நெரிசல், இதன் காரணமாக ஏற்படும் கால தாமதம் மற்றும் விபத்துகள் ஆகியவை இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்கான முதல் நிலை காரணங்களாகக் கூறப்படுகின்றன. தமிழக அரசின் போக்குவரத்துத் துறையும் இத்தகைய கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசு பேருந்து போக்குவரத்து அமைப்பு மற்ற அரசு அமைப்புகளைவிட பெரும்பாலான பொது மக்களின் ஆதரவையும் தொடர்பையும் அதிகமாகப் பெற்றுள்ளது. பேருந்து போக்குவரத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவதுடன் பொது மக்களுக்கு அறிவார்ந்த, திறமையான, இடரற்ற மற்றும் பாதுகாப்பான சேவையை அளிப்பதே போக்குவரத்துத் துறையின் குறிக்கோளாகும். சிறப்பான பேருந்து போக்குவரத்து சேவை மக்களிடையே அரசின் மீதான நல்லெண்ணத்தை உயர்த்தும்.

தமிழ்நாடு அரசு, பயணம் செய்யும் இலட்சக்கணக்கான பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இத்தகைய சாலைப் போக்குவரத்து வளர்ச்சியில் அதிக முயற்சி எடுத்து வருகிறது. போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் ஏழு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இயங்குகின்றன. போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கிய பங்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகள்

[2007 ஏப்ரல் 20

வாங்குவதற்கு நிதி உதவி அளிப்பதும், மூலதனக் கடன்களை வழங்குவதுமாகும். இது தவிர, பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக்குழு (லிமிடெட்), சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை ஆகியவையும் அரசின் போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையில் செயல்படுகின்றன.

தென்னக இரயில்வே அவ்வப்போது மாநிலத்தில் தற்போதுள்ள இருப்புப் பாதைகளை அகலப்படுத்துவது அல்லது புதிய இருப்புப் பாதை அமைப்பது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதே போன்று, தபால் மற்றும் தொலைத் தொடர்புத் துறைகளும், இந்திய அரசின் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகமும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட மத்திய அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் மாநில அரசின் முகவராக போக்குவரத்துத் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## 2. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

*2.1* போக்குவரத்து இயக்கம் ஆரம்ப காலத்திலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், 1956 ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர், அரசு 1976-ல் பட்டாபிராமன் குழு மற்றும் 1990-ல் தில்லை நாயகம் குழு என இரண்டு வல்லுநர் குழுக்களை போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களை முழுமையாக ஆராய்ந்து அவற்றைச் சீரமைப்பதற்கான வழிமுறைகளைத் தெரிவிப்பதற்காக அமைத்தது. மேற்படி இரு வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளும் முடிந்த வரை செயல்படுத்தப்பட்டன.

## 2.2 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்

போக்குவரத்துக் கழகங்களின் இயக்கங்களைச் சீரமைத்து, அதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவினைக் குறைக்கவும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும், முதல் படியாக 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக



2007 ஏப்ரல் 20]

ஒருங்கிணைக்கப்பட்டன. மாநிலத்தில் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய ஒருங்கிணைக்கப்பட்ட நிலை, சிக்கனமானதாகவும், திறமையானதாகவும் அமைந்துள்ளது.

*2.3* 31-03-2007 ஆம் நாள் நிலவரப்படி, அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சென்னை மாநகரப் பேருந்துகள் | 2,600 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5,825 |
| புறநகர் பேருந்துகள் | 6,398 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 538 |
| வெளி மாநிலங்களுக்கு | 290 |
| மலைப் பகுதி பேருந்துகள் | 530 |
| மொத்தப் பேருந்துகள் | 16,181 |
| உபரிப் பேருந்துகள் | 1,652 |
| மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை | 17,833 |

## பேருந்து இயக்கச் சாதனை

2006-2007 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மொத்த இயக்க தூரம் 249.66 கோடி கி.மீ. ஆகும். முந்தைய ஆண்டு 2005-2006 உடன் இதனை ஒப்பிடுகையில் 8.94 கோடி கி.மீ. அதிகம் இயங்கியுள்ளது. அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் 15-01-2007 அன்று அதிகபட்ச ஒரு நாள் வருமானமாக ரூ.14.05 கோடி ஈட்டியுள்ளன.

## 2.4. செயல்பாட்டுத் திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து சிறந்த செயல்திறன்களுக்காக, குறிப்பாக இயக்கப் பயன்பாட்டில் சிறந்த செயல்திறன், கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன், பயணிகளின் செயல்திறன், விபத்து... அடர்வு, எரிபொருள் சிக்கனம் முதலியவற்றில் தேசிய அளவில் விருதுகளைப் பெற்று வருகின்றன. பல்வேறு கடினமான சூழ்நிலைகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட விருதுகளை அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[2007 ஏப்ரல் 20

| | | |
|---|---|---|
| 1. | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (கி.மீ. இலட்சத்தில்) | 68.40 |
| 2. | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 177.32 |
| 3. | பேருந்துகளின் உபயோகம் | 92.11% |
| 4. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 97.31% |
| 5. | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 103.24% |
| 6. | பயணிகளின் பயன்பாடு | |
| | (அ) மாநகரம் மற்றும் நகரம் | 74.06% |
| | (ஆ) புறநகர் | 94.79% |
| | (இ) விரைவுப் பேருந்து | 88.75% |
| | (ஈ) மலைப் பகுதி | 102.81% |
| | மொத்தத்தில் | 85.38% |
| 7. | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.10 |
| 8. | விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.30 |
| | மொத்த விபத்துகள் | 7,527 |
| | உயிரிழப்பு விபத்துகள் | 1,360 |
| | இறந்தவர்களின் எண்ணிக்கை | 1,558 |
| 9. | எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) | |
| | (அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.74 |
| | (ஆ) புறநகர் | 5.19 |
| | (இ) விரைவு | 5.14 |
| | (ஈ) மலைப் பகுதி | 3.86 |
| | சராசரியாக | 4.97 |
| 10. | 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 5.78 லிட்டர் |
| 11. | கழிவு செய்யப்பட்ட உருளிப் பட்டையின் ஓட்டம் (கிலோ மீட்டர் ஒன்றுக்கு) | 1.56 இலட்சம் கி.மீ. |



2007 ஏப்ரல் 20]

| | | |
|---|---|---|
| 12. | புதுப்பிக்கப்பட்ட உருளிப் பட்டையின் விகிதம் | 3.87 |
| 13. | ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் (தொழிற்கூடப் பணியாளர்கள் உட்பட) | 6.22 |

2006-2007 ஆம் ஆண்டு பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, 679 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## 3. அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

3.1. போக்குவரத்துக் கழகங்களின் பல்வேறு குறியீடுகளின் செயல்பாட்டுத் திறன் மத்திய திட்டக் குழுவினால் பாராட்டப்பட்ட போதிலும், நிதிநிலையில் குறிப்பிடத்தக்க நெருக்கடி நிலவுகிறது. நிர்வாக மற்றும் இயக்கச் செலவுகள், குறிப்பாக, டீசல் விலை அதிகரித்ததாலும் நாட்டிலேயே கிலோ மீட்டருக்கான மிகக் குறைந்த பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்படுவதினாலும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டு மொத்தச் செலவு அதிகரித்தது. இதனால் 2006-2007-ல் ரூ.303 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.497 கோடி நட்டம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.2 அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாடு

அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக ஒரு லிட்டர் அதிவேக டீசலுக்கு 2005-2006 ஆம் ஆண்டில் 4.83 கிலோ மீட்டரிலிருந்து 2006-2007 ஆம் ஆண்டில் 4.97 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. டீசல் இயக்கத் திறன் மேம்பாடு காரணமாக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.50.05 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. என்ஜின் ஆயில் உபயோகம் 10,000 கி.மீ. இயக்கத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டில் 7.04 லிட்டரிலிருந்து 5.78 லிட்டராக குறைந்துள்ளது.

## 3.3 டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய் பொருட்களின் விலையின் அடிப்படையில், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களின் டீசல் பயனீட்டுச் செலவினம் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1,566 கோடியாகும். இச்செலவினம் கடந்த ஆண்டு 2006-2007-ல் ரூ.1,724 கோடியாகும்.

[2007 ஏப்ரல் 20

### 3.4. நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள்

தொடர்ந்து ஏற்பட்டு வரும் நட்டங்களின் காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் 31-3-2007 அன்று பின்வரும் கடன் பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது:-

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் | 55.37 |
| உதிரி பாகங்கள், உருளிகள், மற்றவை வழங்கியவர்களுக்கு செலுத்தவேண்டியது | 36.77 |
| விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களில் செலுத்த வேண்டியது | 120.50 |
| சட்டரீதியாக செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 602.63 |
| பணியாளர்கள் சிக்கன சங்கம் | 45.38 |
| இதர இனங்கள் | 42.74 |
| மொத்தம் | 903.39 |

### 4. பழைய பேருந்துகளைக் கழிவு செய்தல் மற்றும் புதிய பேருந்துகள் வாங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.100 கோடியில் 1,000 புதிய பேருந்துகள் வாங்க அரசு நிதி உதவி செய்துள்ளது. கடந்த ஆண்டில் மொத்தம் 2,230 புதிய பேருந்துகள் வாங்க முடிவு செய்யப்பட்டது. மேலும் 2007-08 ஆம் ஆண்டில் 3,000 புதிய பேருந்துகள் ரூ.150 கோடி அரசு நிதி உதவியுடன் வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில், முதல் முறையாக தாழ்தள சொகுசுப் பேருந்து (Semi Low Floor Bus) அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்ற பேருந்துகள் வருங்காலங்களிலும் இயக்கப்படும். இப்பேருந்துகளில் பல புதிய வசதிகள் பயணிகளுக்காக செய்யப்பட்டுள்ளன. இதேபோல், அதிநவீன சொகுசுப் பேருந்துகளும் (Ultra Deluxe Bus) அரசு போக்குவரத்துக் கழகங்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இத்தகைய நவீன பேருந்துகளை இயக்குகிறது.



2007 ஏப்ரல் 20]

### 5. மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்துப் பயணக் கட்டண அமைப்புடன் ஒப்பீடு

கிலோ மீட்டருக்கான பேருந்துக் கட்டணம் நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவானதாகும். புறநகர் சேவைக்கான தமிழ்நாட்டின் தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் அண்டை மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரம் பின்வருமாறு:-

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு | அதிநவீன சொகுசு |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6-12-2001 | 28 | – | 32 | 38 | 52 |
| ஆந்திரப் பிரதேசம் | 8-2-2006 | 38 | 44 | 49 | 57 | 62 |
| கேரளா | 25-11-2005 | 48 | 55 | 60 | 70 | 80 |
| கர்நாடகம் | 11-6-2006 | 37.50 | 48.50 | 60 | 67 | 75 |

பயணிகளின் நலன் கருதி, தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணம் டிசம்பர் 2001-க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை.

### 6. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களைத் தவிர்த்தல்

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை, 1991-92 ஆம் ஆண்டில் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.104 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கு, முக்கியத்துவம் தரப்பட்டு தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கு பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை அளிப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்துகிறது. விபத்துகளைத் தடுப்பதில் ஓட்டுநர்களின்

பங்கு மிகவும் இன்றியமையாததாகும். முறையான புத்தொளிப் பயிற்சி, யோகா பயிற்சி, பாதுகாப்பு மருந்தகங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தும் வகுப்புகள், பாதுகாப்பான ஓட்டுதலுக்கு பரிசுத் திட்டங்கள், தொடர்ந்து 10 ஆண்டுக் காலத்திற்கு விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு முதலியன, விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பாக ஓட்டுநர்கள் இயக்குவதை உறுதி செய்யும்பொருட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த சில நடவடிக்கைகளாகும். பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற, திறமைவாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகளை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளிக்கின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகளில் இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சில போக்குவரத்துக் கழகங்களில் நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப் பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின் பாதுகாப்பினையும் கருதி, தேவையான தடங்களில் இரண்டு ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

## 7. பயணிகளுக்கான வசதிகள்

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலுமுள்ள பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்பு கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை, பேருந்து நிலையங்களில் நிறுத்தி பேருந்துப் பயணத்தைத் தொடர்வதற்கு இயலும் வகையில், சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையிலிருந்து புறநகர், வெகுதூரப் பேருந்துகள் இயக்கம், புதிதாக கோயம்பேட்டில் அமைக்கப்பட்ட சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்துப் பகுதிகளுடன் இணைக்கும் வகையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பல புதிய



வழித்தடங்கள் தொடங்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாநகரப் போக்குவரத்துக் கழகம் தனது இயக்க எல்லையை 10 கிலோ மீட்டர் உயர்த்தி 50 கிலோ மீட்டர் என விரிவுபடுத்திக் கொண்டது. இதனால் மறைமலைநகர், படப்பை, திருப்போரூர், திருபெரும்புதூர், திருவள்ளூர் மற்றும் சுங்குவார்சத்திரம் போன்ற இடங்களுக்கு சனவரி 2007 முதல் மாநகரப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பேருந்துகளின் தட நீட்டிப்பு பொது மக்களால் வரவேற்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களின் நீண்டகாலத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதே போல், பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், விரைவாகவும், அதிக வசதியாகவும் பயணம் செய்வதற்கு "Yellow line" மற்றும் "Blue line" சொகுசுப் பேருந்துகளை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது. சென்னை மாநகரில் பயணிகளின் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பிக்கும் செயல்திட்டத்தின்கீழ் ஏழு வருட காலத்திற்குள் ரூ.1,300 கோடி செலவிட மாநகரப் போக்குவரத்துக் கழகம் திட்டம் வகுத்துள்ளது. மேலும், இத்திட்டத்தில் புதிய பணிமனைகள்/ பேருந்து நிலையங்கள், ஏற்கெனவே உள்ள பணிமனைகள்/பேருந்து நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பேருந்து நிலையங்களில் தானியங்கி மின்னணு பலகை மூலம் பேருந்துகள் புறப்படும் நேரம், வரும் நேரத்தை பயணிகளுக்குத் தெரிவித்தல் மற்றும் பேருந்துகளின் நிலைகளை கட்டுப்பாட்டு அறையிலிருந்து கவனித்தல் போன்றவற்றை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம் கையடக்க மின்னணு இயந்திரம்மூலம் பயணச் சீட்டு வழங்கும் முறையையும் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது. மேலும், மற்ற நகரங்களில் நகரப் பேருந்துகளின் இயக்க எல்லை 30 கிலோ மீட்டரிலிருந்து 35 கிலோ மீட்டராக நீட்டிப்பு செய்யப்பட்டு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டுள்ளது.

## 8. பயணச் சலுகைகள்

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பின்வரும் தரப்பினருக்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன:

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள்

2. மாணவர்கள்

3. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள்

4. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் எல்லை/மொழிப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழ் மொழியினைக் காக்கும்பொருட்டு, மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அரசிடமிருந்து மொழிக் காவலர் நிதி உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள்.

5. புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் பார்வையற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்

6. நாடகக் கலைஞர்கள்

### 8.1 மாணவர் பயணச் சலுகை

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடனும், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்திற்கு உண்மையான பொருள் கொடுக்கும் நோக்குடனும், முதல் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து வீட்டிற்கும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்துப் பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள், எல்லா விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும். இதேபோன்று, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வீட்டிலிருந்து கல்லூரிக்கும், தொழில்நுட்பப் பயிலகம், தொழிற்பயிற்சி நிலையம், தனியார் கலைக் கல்லூரிக்கும், பின் அவ்விடத்திலிருந்து வீட்டிற்கும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய 50% சலுகைக் கட்டணப் பேருந்துச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த சலுகை, விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பொருந்தும். மேலும், சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வரை வழங்கப்படுகின்றன.



மாணவர் பயணச் சலுகையினால் 2006-2007 ஆம் ஆண்டில் 24.60 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர். இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூ. 350 கோடி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு பயணச் சீட்டுக் கட்டணத்தின் முகமதிப்பு முழுமையாக அரசால் ஈடு செய்யப்படுகிறது புறநகர் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, சலுகைப் பயணக் கட்டணத்தின் மதிப்பு அரசு மற்றும் போக்குவரத்துக் கழகங்களாக 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

### 8.2 பயணிகளுக்குச் சலுகைகள்

பேருந்துகளில் பயணம் செய்யும் பொது மக்களின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர, குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் (LSS) 40 நடைகளுக்குரிய கட்டண விகிதம் மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

### 8.3 விருப்பம் போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள்

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாநகரப் பகுதிகளில் எங்கு வேண்டுமானாலும் பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணம் செய்யலாம். அண்மையில் மாநகரப் போக்குவரத்துக் கழகம் ரூ. 30/-க்கான "விருப்பம் போல் பயணம் செய்யும்" பயணச் சீட்டினை பேருந்துகளில் நடத்துனர்மூலம் வழங்க அறிமுகப்படுத்தியது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஒரு நாள் பயணச் சீட்டு | - | ரூ. 30 |
| (2) | வாராந்திரப் பயணச் சீட்டு | - | ரூ. 160 |
| (3) | மாதாந்திரப் பயணச் சீட்டு | - | ரூ. 600 |

### 8.4 குழுவினருக்கு முன்பதிவுக் கட்டணச் சலுகை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் கொண்ட குழுவினர் முன்பதிவு செய்யும்போது, பயணக் கட்டணத்தில் 10 சதவீதம் சலுகை அளிக்கப்படுகிறது.

[2007 ஏப்ரல் 20

**8.5 மூத்த குடிமக்களுக்கு பயணச் சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன்பதிவு செய்யும்போது, பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

## 9. தொழிலாளர் நலத் திட்டங்கள்

போக்குவரத்துக் கழகங்கள் அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் பேண, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:—

1. பணி அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசப் பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்
3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்
4. கல்விப் படிகள்
5. ஊதியம் சார்ந்த படிகள்
6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்பநல நிதி
9. திருமணக் கடன்
10. திருப்பான் படி (Steering Allowance)
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுப்புப் பயன்கள்
13. விடுமுறை விடுதி
14. சிறப்பு நலநிதித் திட்டம்



2007 ஏப்ரல் 20]

15. சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி.
16. போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
17. தொழிலாளர் ஓய்வு கால சேமநல நிதித் திட்டம்
18. இறுதிச் சடங்கு செலவுகள்

## 10. மக்கள் நீதிமன்றம்

விபத்து இழப்பீடு வழங்குவதால் ஏற்படும் செலவினைக் குறைக்கவும், விரைவாக இழப்பீடு வழங்கவும், மக்கள் நீதிமன்றம்மூலம் இரு தரப்பினரும் சம்மதித்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் காரணமாக, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் கணிசமான அளவு செலவினம் குறைந்துள்ளது. 2006-2007 ஆம் வருடத்தில் போக்குவரத்துக் கழகங்கள் மக்கள் நீதிமன்றம்மூலமாக 416 வழக்குகளைத் தீர்வு செய்து, அதன் மூலம் ரூபாய் 328 இலட்சம் செலவினம் குறைந்துள்ளது.

## 11. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல், அதன்மீது கூண்டு கட்டுதல், பணிமனைகள் நிறுவுதல் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கு நீண்டகால நிதி உதவியை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன்மூலம் பூர்த்தி செய்து வருகின்றது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்து, தவணைக் கொள்முதல் நிறுவனமாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

### நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து ஆதாயம்

ஈட்டி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் ஈட்டிய ஆதாயம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளு-படிக்கு முந்தைய ஆதாயம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 2003–2004 | 2897.42 | 2400.00 | 497.42 | 200.72 | 296.70 |
| 2004–2005 | 1796.16 | 1200.00 | 596.16 | 136.33 | 459.83 |
| 2005–2006 | 2439.58 | 1904.00 | 535.58 | 181.61 | 353.97 |
| 2006–2007 திருத்திய மதிப்பீடு | 2832.79 | *2300.00 | 532.79 | 205.13 | 327.66 |

*(இயக்குநர்கள் குழுமம் ஒப்புதலுக்கு உட்பட்டது.)

*31-3-2007* அன்றுள்ளபடி இந்நிறுவனத்திலுள்ள மொத்த வைப்புத் தொகை ரூபாய் *674.39* கோடியாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து *31-3-2007* முடிய தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ. *6,523.98* கோடிக்கு கடனுதவி அளித்துள்ளது. வாங்கிய கடனை நிலுவையின்றி திருப்பிச் செலுத்தும் போக்குவரத்துக் கழகங்களைச் சிறப்பிக்கும் பொருட்டு, "சிறந்த வாடிக்கையாளர் விருது" ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

## 12. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு *1984* ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் ரூ. *5* இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூ. *2* இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடனும் தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து *2000* ஆம் ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.*10* இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.*50* இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட இயக்குநர் குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இந்நிறுவனம் முழு நேர தொழில்முறை நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.





பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாக சேவை, போக்குவரத்து மற்றும் சாலை திட்டப் பணிகள், தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்தத் துறைகளில் தகுதியும் அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்களின் ஆதரவோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும் தனது சகோதர சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்தும் தனது ஆலோசனைப் பணித் தன்மைக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்/விரிவுரையாளர்களின் சேவையையும் பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற, அனுபவம் மிக்க வல்லுநர்களையும் தேவைக்கேற்றபடி இந்நிறுவனம் ஈடுபடுத்திக்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு புதிய பணிகளை பெறுவதற்காக முன் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாக பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று வருகிறது. இவ்வகையில் மின் அஞ்சல் மூலம் பயணச் சீட்டு முன்பதிவினை (OTRS) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப்படுத்த தேவையான பணிகளை பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, கூட்டு முயற்சியில் தமிழ்நாடு மின்னணு கழகத்துடன் (ELCOT) செயல்பட்டு வருகிறது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு தற்போது ஆலோசனைப் பணிகள் துறையில் நிலவிவரும் தொழிற் போட்டிகளுக்கிடையேயும், தனது தொடக்க ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது. கணினிமயமாக்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிர்வாக சேவை போன்ற துறைகளில் பணிகளை விரிவாக்கும் திட்டங்கள் ஆகிய துறைகளில் நல்ல வாய்ப்பு உள்ளது.

பல்வேறு தடைகளுக்கிடையேயும் இந்நிறுவனத்தின் செயலை விரிவாக்கவும், வருவாயை அதிகரிக்கவும், மிகப் பெரிய அளவில் பணிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விலைகள் உயர்வான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக நிதி ஆதாரம் அதிக அளவில் தேவைப்படுகிறது. எனவே, பல்லவன் போக்குவரத்து

ஆலோசனைப் பணிக் குழுவிற்கு செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## 13. சாலைப் போக்குவரத்து நிறுவனம்

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது இந்திய சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் தனது 31-வது ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்து தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும், சாலைப் போக்குவரத்து தொடர்புள்ள பிரச்சனைகளைப் பற்றிய ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டினைப் பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிகளை அளிப்பது போன்ற பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி ஈரோட்டில் தொடங்கப்பட்டது. இதுவரை 4,511 இளங்கலை பொறியாளர்களும் (B.E.), 33 முதுகலை கட்டடவியல் பொறியாளர்களும் (M.E. Structural), 11 முதுகலை வெப்பவியல் பொறியாளர்களும் (M.E. Thermal) 330 கணினி பயன்பாட்டியலில் முதுகலை பட்டம் (M.C.A.) பெற்றவர்களும் இந்த பொறியியல் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் நடத்தப்படும் கட்டடவியல், இயந்திரவியல் மற்றும் ஊர்தியியல் துறைகளுக்கு அகில இந்திய தொழிற்நுட்ப குழுமத்தினால் (AICTE) தரச்சான்று (Accreditation) பெறப்பட்டுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் நலனுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளவும், பெருந்துறை மருத்துவக் கல்லூரி 1986-ல் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் தொடங்கி 1992-93 ஆம் கல்வியாண்டிலிருந்து தனது சொந்த வளாகத்தில் (பெருந்துறையில்) செயல்பட்டு வருகின்றது. இதுவரை இக்கல்லூரி 830 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. இது தவிர, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பப் பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-1993 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் உள்ள இடங்களில் 65 சதவீத இடங்கள் அரசாலும் மீதமுள்ள 35 சதவீத இடங்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும்



பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் நடப்பு கல்வியாண்டு 2006-2007 முதல் தகுதி மற்றும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. பொறியியல் முதுகலைப் பட்டம் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் மொத்தம் உள்ள இடங்களில் 50 சதவீத இடங்கள் அரசாலும், மீதமுள்ள 50 சதவீதம் இடங்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. மொத்த இடங்களில், அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வ. எண் | விவரம் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி | 60 | 39 | 21 |
| 2. | பொறியியல் கல்லூரி | | | |
| | (அ) இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 360 | 234 | 126 |
| | (ஆ) முதுகலைப் பட்டம் | 36 | 18 | 18 |
| | 1. கட்டிடவியல் | | | |
| | 2. வெப்பவியல் | | | |
| | (இ) கணினி பயன்பாடு (MCA) | 60 | 39 | 21 |
| 3. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 520 | 260 | 260 |

அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வழங்கிய வட்டியில்லா கடனை வைப்பு தொகையில் வைத்து அதன்மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தில் அனைத்துக் கல்வி நிறுவனங்களின் தொடர் செலவினங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மேற்கண்ட அனைத்துக் கல்லூரிகளுக்கும் தேவையான மூலதனச் செலவு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்பு மூலதனப் பங்குத் தொகையைக் (Special Contribution) கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருந்துறை மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே செவிலியர் இளங்கலை பட்டம் (B.Sc., Nursing) மற்றும் பட்டய வகுப்புகள்

(Diploma) தொடங்குவதற்குத் தேவையான பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டி, திருச்சி மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, சேலம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய மூன்று வட்டாரப் பயிற்சி மையங்கள்மூலமாகவும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை அளித்து வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டு வரை 40,309 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் வருடத்தில் 1,010 மாணவர்கள் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இரு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் சிறுவாகன ஓட்டுநர் பயிற்சி மையம் சென்னை தரமணி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.

இவை தவிர, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கியப் பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், பயணச் சீட்டு அச்சிடுதல், டயர் பதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் லூப்ரிகன்ட்ஸ் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய சாலைப் போக்குவரத்து நிறுவனம் முகமை நிறுவனமாகச் செயல்படுகிறது.

## 14. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, அரசுத் துறை வாகனங்களின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டு வரும் ஒரு சேவை புரியும் துறையாகும். இத்துறையின் பராமரிப்புக் கட்டுப்பாட்டில் வரும் அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும். இத்துறையில் இப்பணிக்கென மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும், சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு சுத்திகரிப்பு நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய 20 பணிமனைகளை கணினிமூலம் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதற்கான பணி பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இச்செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று மண்டலத் துணை இயக்ககங்கள் சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு, சென்னையில் இரண்டு எரிபொருள் வழங்கு நிலையங்கள் (ஒன்று



நந்தனம், பிறிதொன்று சென்னை, தலைமைச் செயலக வளாகத்திலும்) மற்றும் தஞ்சாவூர், மதுரை, சேலம், கோவை, திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் தலா ஒரு எரிபொருள் வழங்கு நிலையம் என மொத்தம் பத்து எரிபொருள் வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## 15. சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம்

கடந்த சில ஆண்டுகளில் சென்னை நகரம் தானியங்கி மோட்டார் வாகனங்கள், மின்னணுவியல் வன்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம் முதலியவற்றின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்பு சேவை போன்ற துறைகளில் வெளிநாட்டினர் நேரடியாக முதலீடு செய்யும் ஆதார மையமாக வளர்ந்துள்ளது. இது போன்ற முதலீடுகள் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர, ஃபோர்ட், ஹூண்டாய், செயிண்ட் கோபைன், மோட்டரோலா, நோக்கியா, டெல், பிளக்ஸ்டிரானிக்ஸ், மகேந்திரா, ரெனால்ட் போன்ற அயல்நாட்டு முதலீட்டாளர்கள் சென்னையை தங்கள் உற்பத்திக்கு அடித்தளமாக தேர்ந்தெடுத்துள்ளனர். தமிழகம் சுற்றுலா பயணிகளின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது. சமீப ஆண்டுகளில் சென்னை விமான நிலையம், பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு இயக்கம் இரண்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு சென்னை விமான நிலையத்தை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட அரசு முடிவு செய்துள்ளது. புதிய விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்பு குறித்தும் இவ்வரசு பரிசீலித்து வருகிறது. இதன்மூலம், நமது எதிர்காலத் தேவைகளை சிரமமின்றி எதிர்கொள்ளலாம். அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துத் தேவையைக் கையாளுவதற்கு, பெருநகர் அல்லாத விமான நிலையங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் திட்டத்திற்குத் தேவையான நிலங்களை வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## 16. ராஜீவ் காந்தி விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி நிறுவுதல்

இந்திய விமானத் துறையில் தற்போது வணிகரீதியாக விமானங்களை இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளுக்கு

...குறை ஏற்பட்டுள்ளது. விமான ஓட்டிகளுக்குத் தேவையான ... அளிப்பதற்கு நாட்டில் ஒரு சில பயிற்சி நிறுவனங்களே ... அதே நோத்தில், இந்திய அரசின் திறந்த வான்வெளி ...ள்கையின் காரணமாக, அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையின் அடிப்படையில், தனியார் விமான நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் விமானங்களை இயக்கத் தயாராக உள்ளன. இதனால் திறமையான விமான ஓட்டிகள் வேலைவாய்ப்பு பெறும் நிலை அதிகரித்துள்ளது. விமானவியல் அறிவியலில் அடிப்படைப் பயிற்சி அளிப்பதன்மூலம் விமான ஓட்டிகளின் திறமையை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க இயலும். இதனைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு மறைந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் பெயரின் நினைவாக சென்னைக்கு அருகில் உள்ள திருப்பெரும்புதூரில் ராஜீவ் காந்தி விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி என்ற ஒரு நிறுவனத்தை நிறுவ முடிவு செய்துள்ளது. இதன் தொடர்பாக மேற்படி கருத்துருவை பரிசீலிக்கும் பொருட்டு, ஒரு தொழில்நுட்ப ஆய்வினை மேற்கொள்ளும்படி இந்திய விமான நிலைய ஆணைய செயல் இயக்குநரிடம் (கலந்தாய்வு) கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்திய விமான நிலைய அலுவலர்கள் குழு *21-2-2007* அன்று திருப்பெரும்புதூர் சென்று, சென்னை விமான நிலைய, வானிலை ஆய்வுத் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களுடன் ஆரம்பகட்ட ஆய்வை மேற்கொண்டு அறிக்கையை அரசுக்கு அனுப்பி உள்ளது. மேற்படி அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

## 17. சென்னை விமானப் பறக்கும் குழாம்

சென்னை விமானப் பறக்கும் குழாம் 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர்களுக்கு விமானப் பறக்கும் பயிற்சி மற்றும் விமானம் பராமரிக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இக்குழாமில் பயிற்சி பெற்ற பல விமானிகளும், பொறியாளர்களும் விமானப் போக்குவரத்துத் துறையில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழக அரசு சென்னை விமானப் பறக்கும் குழாமிற்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ. 3.80 இலட்சமும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ஓராண்டிற்கு ரூ. 3.72 இலட்சமும் வழங்குகிறது.



### மானியக் கோரிக்கை எண் 48
### போக்குவரத்துத் துறை
### வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2007-2008

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 302,37,62 | 75,00,04 | 75,00,03 | 452,37,69 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 34,07,28 | 22,53 | .. | 34,29,81 |
| | மொத்தம் | 336,44,90 | 75,22,57 | 75,00,03 | 486,67,50 |

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | 302,37,62 | .. | 3 | 302,37,65 |
| | மாநிலத் திட்டம் | .. | 75,00,04 | 75,00,00 | 150,00,04 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | 30,42,37 | .. | .. | 30,42,37 |
| | மாநிலத் திட்டம் | 3,64,91 | 22,53 | .. | 3,87,44 |
| | மொத்தம் | 336,44,90 | 75,22,57 | 75,00,03 | 486,67,50 |

[2007 ஏப்ரல் 20

## 2007-2008 ஆம் ஆண்டு பகுதி இரண்டின் கீழான புதிய திட்டங்கள்

## மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | திட்டங்களின் பெயர் | திட்டச் செலவு |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் அனைத்து 20 தானியங்கிப் பணிமனைகளுக்கும் கைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 7.00 |
| 2. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் இயக்குநர் அலுவலகத்தில் நகலெடு சாதனம் அமைத்தல் | 1.10 |
| 3. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் இயக்குநர் அலுவலகத்தில் கணினி அமைத்தல் | 0.45 |
| 4. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் இயக்குநர் அலுவலகத்தில் நிகரி அமைத்தல் | 0.25 |
| 5. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் கீழுள்ள அனைத்து 20 தானியங்கி பணிமனைகளிலும் பழைய மரத் தளவாடங்களை மாற்றுதல் மற்றும் கணினி மேசை, நாற்காலிகள் அமைத்தல் | 5.00 |
| 6. | சென்னை, அரசு மத்திய தானியங்கிப் பணிமனையில் மழைத் தண்ணீர் உட்புகுவதைத் தடுக்கும் பொருட்டு கான்கிரீட் தடுப்பு அமைத்தல் மற்றும் டிங்கரிங் கூடாரம் அமைத்தல். | 10.00 |
| 7. | சென்னை, பொருள் மேலாண்மை அலகில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 1.50 |
| 8. | விருதுநகர், அரசு தானியங்கிப் பணிமனையில் உள் சாலை அமைத்தல் | 4.00 |
| 9. | இராமநாதபுரம், அரசு தானியங்கிப் பணிமனையில் வாகன சுத்திகரிப்பு வசதி மற்றும் கம்ப்ரசர் அறை அமைத்தல் மற்றும் சுருள்விசைக் கதவு அமைத்தல் | 7.00 |



2007 ஏப்ரல் 20]

| வ. எண் | திட்டங்களின் பெயர் | திட்டச் செலவு |
|---|---|---|
| 10. | தானியங்கி இஞ்சின் நிறுத்தும் சாதனம், டயர் காற்று அழுத்த அறிவிப்பான், இஞ்சின் ஆயில் கண்காணிப்பு சாதனம், மாற்று எரிபொருள் மற்றும் இதர சாதனங்களின் மாதிரிகள் வடிவமைத்தல் | 15.00 |
| 11. | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து சார்நிலை அலுவலகங்களையும் கணினிமூலம் இணைத்தல் | 2.00 |
| | மொத்தம் | 53.30 |

V211,31 P07
P07.302
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227658
சென்னை-600 008